# Sarira Sastram.

## மானிடரகசியமென்னும்.

# சரீரசாஸ்திரம்.

சிறுமணவூர்

முனிசாமி முதலியார்

அவர்களா லியற்றப்பட்டு

தமது

சென்னை சூளை

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

---

1909.

Registered Copy Right.

விலை அணா 8.] [தபாற்கூலி அணா 2.

உ

சிவராமஜெயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பதுயாதெனில், 867-வது வஷீஷத்திய 25-வது ஆக்ட்டின் 2-வது பிரிவின் 6-வது விதியின்பிரகாரம் இந்நூலை கனம்பொருந்திய கெவரன்மெண்டார் அவர்கள் சட்டத்திற்கிணங்க பிறர் யாவரும் அச்சிடாதபடி காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்நூலுக் குடையவராகிய சிறுமணவூர் முனிசாமி முதலியார் அவர்களின் அனுமதியில்லாமல் இதை வேறுபாஷையில் மொழி பெயர்த்தாவது அல்லது இதில் கண்டிருக்கிற பாகங்களையாவது ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

## முக்கியகவனிப்பு.

இப்புத்தகமாவது, இன்னும் இதரமான புத்தகங்களாவது அவிழ்தங்களாவது தேவையானவர்கள் அடியிற் கண்டிருக்கும் விலாசத்தாருக்கு யெழுதி பெற்றுக்கொள்ளலாம். கேட்லாக்கு தேவையானவர்களுக்கு ஒரு புத்தகம் இனமாக அனுப்பப்படும்.

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்தலைவர்,

சிறுமணவூர் - முனிசாமி முதலியார்

பிரம்பூர், பாரக்ஸ போஸ்டு, மதருஸ்.

# நூதன புத்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| பிரபஞ்சவுற்பத்தி | 2 | 0 | 0 |
| உலகவிசித்திரக்கதை | 1 | 0 | 0 |
| விஷவைத்தியசிந்தாமணி | 0 | 12 | 0 |
| சரீரசாஸ்திரம் | 0 | 8 | 0 |
| இராஜவம்சபரம்பரை | 0 | 10 | 0 |
| நவகண்ட ஆரூடம் | 0 | 8 | 0 |
| நஷ்டஜாதககணிதம் | 0 | 8 | 0 |
| உயிரெழுத்து மூலிகைமர்மம் | 0 | 8 | 0 |
| கண்கட்டு 1000-ம் வித்தைகள் | 0 | 10 | 0 |
| திருநேத்திரசிந்தாமணி | 0 | 5 | 0 |
| பெண்கள் ருதுஜெனன ஜாதகம் | 0 | 4 | 0 |
| சர்வபிரயாண சகுணசாஸ்திரம் | 0 | 4 | 0 |
| பதிவிரதைகள் சரித்திரம் | 0 | 12 | 0 |
| மனமோகனக்கண்ணாடி | 0 | 8 | 0 |
| வன்னியநாடகம் | 0 | 8 | 0 |
| மதிகெட்டாநாடகம் | 0 | 5 | 0 |
| ஜகன்தர்ஷா சரித்திரம் | 0 | 8 | 0 |
| சிவவாக்கியம் 1000-ம் பாடல்கள் | 0 | 8 | 0 |
| சகாதேவர் சோதிடநாடி | 0 | 4 | 0 |
| சமுதாயகுண சத்தகராதி | 0 | 4 | 0 |
| சுருக்குபஞ்சபட்சி ஆரூடகாண்டம் | 0 | 2 | 0 |
| வாந்திபேதிநிவாரண சிகிச்சாசாரம் | 0 | 4 | 0 |
| மாந்திரீகபோதினி | 0 | 4 | 0 |
| கைத்தொழில்சாஸ்திரம் | 1 | 0 | 0 |
| பரிமளசாஸ்திரம் | 0 | 8 | 0 |
| பெரியசீராவசனம் | 4 | 0 | 0 |
| வைத்தியசிகாமணி | 3 | 0 | 0 |
| இந்தியன் பினல்கோட்போதினி | 3 | 0 | 0 |
| கிராமமுன்சீப்கோர்ட்டு | 3 | 0 | 0 |
| சாட்சி ஆக்ட்டு | 0 | 12 | 0 |
| ஸ்டாம்பு ஆக்ட்டு | 0 | 8 | 0 |
| 8-வது ஆக்ட்டு | 0 | 8 | 0 |
| 20-வது தேவஸ்தான ஆக்ட்டு | 0 | 4 | 0 |
| போலீசு ஆக்ட்டு | 0 | 4 | 4 |
| ஸ்ரீமத் கம்பராமாயணம் படங்களுடன் இரண்டு கட்டடம் | 4 | 0 | 0 |

ஒவ்வொரு புத்தகங்களுக்கும் புத்தகம் வாங்குகிறவர்களே தபாற்கூலி செலுத்தவேண்டும்.

சிறுமணவூர் - முனிசாமி முதலியார்.

பிரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு, மதிராஸ்.

# பிரபஞ்சவுற்பத்தி

தமிழ், தெலுங்கு, துலுக்கு, சமுஸ்கிரதம், இங்கிலீஷ்,

முதலிய பாஷைகளினின்று பெயர்க்கப்பட்டது.

**640** - சயிட்டுள்ள பெரியபுத்தகம்.



(1.) இப்புத்தகத்தில் உலகஉற்பத்தி, உலகவிஸ்தீரணம், உலகஅடுக்கு, உலகவயது, பிரளயகாலகணிதம், மானிடத்தோற்றம், அண்டவடுக்கு, அண்டங்களில்வசிக்கும்தேவபேதம், அண்டப்பரப்பு, துருவநிலை, கிரகநிலை, நட்சத்திரநிலைசூரிகதி, பகலிரவுதோற்றம், வருஷம், மாதம், அயனம்பட்சம் இவைபிரித்தகாரணம் முதலியனவும்.

(2.) பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் கணபாலன், கந்தன், முதலியமுப்பத்து முக்கோடி தேவர்கள்உற்பத்தியும், ரிஷிகள், கருடர், காந்தருவர், சித்தர், வித்தியாதரர், அப்ஸரஸ்திரீகள், முதலிய உற்பத்தியும், ஷைதேவர்களுக்கு கொடி, படைவிருது, வாகனம், இவைகட்கு காரணமும், பிதுர்தேவதைசவசலதேவதை இவர்கள் தேற்றமும்

(3-வது.) ஆதியாகிய இந்துமதமும் இதிற்பிரிந்த நூறுகணக்கான சைவம், வைஷ்ணவம், மகம்மதியம், சீனம், பிராஞ்சு, கிருஸ்து, ரோமர், கிரேக்கர், எகிபத்து, மெக்சிகோ, அர்க்கான், காபிரி, மலாக்கா, மங்கோலியர், ஜாவா, இலங்கை முதலானசுதேச, பரதேச எல்லா ஜாதிபேதமும், அவரவர் வணங்கும் தெய்வபேதம், ஆலயபேதம் பூசை, பலி, விரதம் இவற்றின்பேதம் முதலியனவும், இந்த ஒரே புத்தகத்திற் காணலாம். (நல்ல பதிப்பு புல்காலிகோபயிண்டு.)

இதன் விலை ரூபா 2.

உ

சிவமயம்.

நூலின்கருத்து.

# அவையடக்கம்.

சீர்பெருதெய்வத் திருவருநிகர்த்த
ஏர்பெருமானிட யாக்கையின்பூர்வ
உதிப்புமவற்றின் உள்ளுரையங்கப்
பதிப்புமிங்கனம் பகரத்துணிந்தேன்
துணிந்தேனுயினுந் தொல்லுலகதனில்
அணிமாமுதலென் அட்டமாசித்தி
பெற்றபெரியோர் பார்வையுமில்லேன்
உற்றமாகல்வியி லோர்துறையேனுங்
கற்றேனில்லேன் கலைவல்லோரைச்
சுற்றம்போலச் சூழ்ந்தேனில்லேன்
அறிவுந்திறமும் அடக்கமுமில்லேன்
நெறியுமறமும்நிகழ்த் தினேனில்லே
கூர்மைவெண்புத்தி கூடினேனில்லே
ஞேருயிறிடுக்க ஞெழித்தேனில்லேன்
உதவியொன்றில்லா வொதிமரமேனும்
சதனுன்குநூற்றுச் சேடஞேயதனில்
எத்தைக்கேனும் யானென்றுதவும்
அத்தகையனுவும் யார்க்குமுதவிலாப்
புல்லறிவுடைத்த புழுமரமாமென்
சொல்வினைமேலோர் சோதிக்குமளவில்
அன்னமிசைக்கும் அற்புதத்தொனியை
தன்னிழுக்குரலாற் றூடனஞ்செய்யுங்
காக்கைநிகர்ப்பக் கற்றோர்முன்னே
வாக்கிற்சிறந்த வல்லோன்போல
தேகமாதியிற் றிருவுருக்கொண்ட
பாகமுந்தாயின் பனிக்குடமதனில்
இருந்தநிலையு மீரைந்துதிங்கள்

வருந்திவளர்ந்து வவனியைக்காண்ட
தலைநாள்தொட்டுத் தான்வளர்ந்தோங்குங்
கலைநேர்யாக்கைக் கணக்குமவற்றின்
அஸ்திகணரம்பு மடுக்கினவகுப்பும்.
விஸ்தாரமான வாழ்நாள்மதிப்பும்
இடையிற்காலநூ ரேன்டைவாரென்
றடைவுமவற்றை யறிவற்குறிப்பும்
செல்வராய்ச்சிலபேர் செரிந்திருப்பதுவும்
தொல்லையினிதமுந் தோய்தலேனென்றும்
ஞானவான்களாய் நற்கெதியடைவதும்
மோனநிலையில் முத்திபெருதலும்
மொண்டிமுடமாய் மோகவில்லலியாய்
கண்டிடவிழியிலாக் கபந்தமாதலும்
ஊமைச்செவிடா யுதிப்பதேதென்றும்
காமியாய்ச்சிலர்வருங் காரணமதுவும்
ஆதாரமாறில் அமர்ந்தகோணத்தின்
மீதேயிருக்கு மெழுத்துநிலையும்
அறிவாலறியும் அமைப்புமுன்னுல்
பெரியோருரைத்த படியேயெந்நேரம்
இளைஞருணரு மியல்புக்குரித்தாய்
கலைபோற்றிரட்டிக் காட்டினேனிதனில்
முற்றுமேபிழையாய் முடிந்ததெனினும்
சற்றுமெனக்குச் சாராவண்ணம்
தனிச்சாமியாகுந் தமிழ்ப்புலவோர்தரு
முனிசாமியாகும் மதலையான்போற்றி
போற்றிபோற்றிப் புலவர்தாள்போற்றி
போற்றிப்பூமகள் பொன்னடிபோற்றி.

அவையடக்கம்.

முற்றிற்று.

---

உ

சிவராமஜெயம்.

# மானிட ரகசியமென்னும்.

# சரீரசாஸ்திரம்.

கணபதி.

சித்தியுமுத்தியு நத்தியுபிரணவ
அத்தியினிருதாள் புத்தியினுரவே.

திருமால்.

மானிடயாக்கைமான்மியமோத
மானிலமளந்த மாலடிகாப்பே.

நான்முகம்.

மானிடமென்றால்மிக்க மாதவஞ்செய்தால்நன்றி
யானிடமெய்தாதென்று மாமறைச்சாற்றுமாமால்
மானிடமென்றாலிந்த மானிலத்திடைநேரென்ற
மானிடவகுப்பையெல்லாம் மானிடனுரைசெய்வேனே.

## பூர்வபாகம்.

(மானிடரகசியமென்னுஞ் சரீரசாஸ்திரம்) என்னு மித்தலைப்பெயர் பூண்ட இந்நூலை ஆரம்பிக்குமிடத்து முதலாவது மானிடதேகம் ஆதியுற்பவத்தைச் சொல்லவேண்டியது முதற்கடமையாயிருக்கின்றது. அப்படி சொல்லத்துணிவோமாயின் இந்துசமயம் ஒருவகுப்பிற்றானே பலநூல்களுள்ளதால் ஒன்றுக்கொன்று மாறாகக் கூறுகின்றது, நிகரற்ற புராதனச் சமயமே நிராதரமானால் மற்ற வேறுசமயங்கள் மாறுகூறத்தடையுண்டா இல்லை (மாறுகூறும் வேறுமதங்களிற் சிலது) அதாவது விலாசம்பொருந்திய நெடிய விராட்புருடனது இடதுகண்ணிற் சந்திரன் வலதுகண்ணிற் சூரியன் முகத்தில் பிராமணன் புஜத்தில் க்ஷத்திரியன் துடையில் வைசி

யன் பாதத்தில் சூத்திரர் பிறந்தாரென்றும் பிரம்மனால் மானிடஜாதிக ளும், பிரம்மன் சந்ததியாகிய காசிபராலும், தட்சப்பிரஜாபதியாலும்மிரு கம். பட்சி, பறவை முதலாசிய விலங்கினங்கள் உற்பத்தியாச்சுதென்றும், விஷ்ணுபுராணம், அரங்கமான்மியம் முதலிய வைஷ்ணவநூற்களில் பதி னன்குலகமும் ஆயிரத்தெட்டண்டங்களும் கூடியதே விஷ்ணுஸ்வரூபமா யிருக்கிறதென்றும், அச்சொரூபத்தின் காரணமயமே சர்வ உலகங்களு க்கும் மேற்படி ஜீவராசிகளுற்பவமென்றும் கூறுகின்றது. மகம்மதியாகள் கடவுளானவர் ஆதியில் (அஜாம், அவ்வா) என்றபுருஷனையும் பெண்ணை யும் உற்பத்திசெய்து அவ்விருவர்களால் மானிடஜாதி விருத்தியென்றும் மற்றஜீவராசிகளை மண்ணினுல் பாவைகள்செய்து வாயினுல் ஊதி உயிர் பெற்றெழும்படி சகல பிராணிகளையும் சிருஷ்டித்தாரென்றும், கூறுகின் றனர்

கிருஸ்துவர்கள் கடவுளானவர் முதலில் மண்ணையும் ஜலத்தையும் உண்டுபண்ணி பிரகாசத்தினிமித்தியம் மூன்ருவதுநாள் சூரியனைப்படை த்தாரென்றும், மறுமூன்ருவதுநாட்குள் உலகசிருஷ்டிசெய்து முடித்தா ரென்றும், தன்னை வணங்கும்பொருட்டு மானிட உற்பத்தியைக்குறித்து (ஆதாம்) என்னும் ஓர்புருஷனையும் அவன் விலாவெலும்பி லொன்றெடு த்து (ஏவாள்) என்னும் ஓர் பெண்ணையும் சிருஷ்டித்தாரென்றும் கூறுகி ன்றனர். சிலர் அக்கினியிலுற்பவமென்றும், சிலர் கடவுளே கிடையாது எல்லா வஸ்துவும் தன்னுல் உற்பவமென்றும், கிலர் பஞ்சபூதியங்களால் உற்பவமென்றும், சர்வமும் சத்தியாலுற்பவமென்றுங் கூறுகின்றனர்.

ஆறுசமயங்களும் தனித்தனியே வேறுவேறுமாருகக் கூறும் ஒவ்வா சிருஷ்டிகளை நீக்கி தற்கால காட்சிப்பிரமாணமாகவும், அனுபவசாட்சியாக வும் கடங்க காலந்துடங்கி ஜெனவாக்கியமாகவும் பலஜெனங்களால் கேள் விக்கிரமமாகவும் புராதனச்சமயமாகிய இந்து மதசாஸ்திரங்களால் பிரிக்க ப்பட்ட பதினெண்ஜாதியென்பதற்கு ஒத்துமையாகவும் நம்மில் அனேகர் அறிந்தவிஷயமாகவும் உள்ள மானிட உற்பத்தியைமற்றும்பலஜெனங்கள் அறியக்கூறுவோமாக. ஆனல் இங்ஙனம் கூறப்புகுவது ஆதிசிருஷ்டி யோயென்று கேட்டால் பிரமவிண்டாதிதேவர்களேஇறந்திறந்துபிறந்தா ரெணில் சிற்றுருவமாகிய இம் மானிட வுற்பத்தியை இதுவே முதலென்ப தற்குத் தாங்களும் யாங்களுமல்லர். (இதற்குச் சாட்சி)

நூறுகோடி பிரம்மர்கள் நுங்கினுல்
ஆறுகோடி நாராயண ரங்ஙனே
ஏறுகெங்கை மணலெண்ணி லிந்திரன்
ஈறில்லாத நல்லீச ஞெருவனே.

# விராட்சொரூபம்.

பிரமனரியென் றிருவருந்தம் பேதமையாற்
பரமமியாம் பரமமென் றமரர்கள் பதைப்பொடுங்க
அரனு ரழலுருவா யங்கே யளவிருந்து
பரமாகி நின்றவர் தேனேக்க மாடாமோ. என்றபடி

அதல, வித, சுதல; தபாதல, ரசாதல, மஹாதல, பாதாள மென்னும் கீழுலகம் ஏழினுங் கீழ்ப்படிந்த யிருள்நிலமே பாதார விந்தமாகவும் பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜனோலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் ஆகிய மேலுலகத்தின் கடைசியாக சத்தியலோகமே திருமுகமாகவும் இவற்றுள் பாதாரவிந்தமாகிய பாதாளலோகந்துடங்கி அதலலோகக்கடையே உந்திஸ்தானமாகவும், திருமுகமாகிய சத்தியலோகந் துடங்கி பூலோகமே கெற்பஸ்தானமாகவும், இடையே பதாதிகேசந்தொட்டு ரோமங்கடோறும் ஒவ்வோரண்டங்களாகவும் எண்ணிறந்த அண்டகோடிகடளங்கியவிசாலம்பொருந்திய லோகத்திரேகியாகிய சாட்சாத் விராட்சொரூப பரப்பிரமவஸ்துவின் நேத்திரங்களே சூரியசந்திரராகவும் மூன்றும் விழியாகிய திருநேத்திரமே, அக்கினியாகவும் அவரது சுவாசமே காற்ருகவும்,அவர் உமிழ்நீரே ஜெலமாகவும், அவரது யேவற்புருடரே கிரகங்களாகவும் அண்டமும் பிண்டமுங்கூடிய யெண்டிசையையும் பரவிய பிரமாண்ட அண்டாகார ஸ்வரூபகிருபாநோக்கமே ருத்திரன் விஷ்ணு பிரமனுகத்தோன்றி யேவலுக்கெதிர்நோக்கிநிற்க பிரமனுக்கு ஆக்கலும் விண்டுவிற்கு காத்தலும், ருத்திரனுக்கு அழித்தலுங் ஆகிய மூவருக்கும் முத்தொழிலையுங் கிருபைபுரிந்து உலகமென்னுஞ் சிறுவீட்டை நிச்சயித்த நெடிய கடவுளானவர் மூவருக்கும் வேண்டிய கருவியுமீந்து யின்னும் பிரம்மவிண்டாதியரைநோக்கி முதன்மைத்தொழிலுடைத்த நீர் யாம்பெரிது யாம் பெரிதென்றவீரவேற்றுமையிற் கடையாவீரென் றிடையாநின்றனர் அங்ஙனம் நம்போன்ற மனிதர்முதலிய ஜீவராசிகள் கிடையாதாம்.

## பிரம்மசிருஷ்டி.

உலகமென்னும் அசைதலாகிய நிற்சக்தியுடைய சிறுவீட்டை நினைவால் நிச்சயித்த நெடிய கடவுளது பூரணநோக்கமெய்திய தெண்டாயுதத்தைப் பரிசுபெற்ற பிரமதேவனானவன் சிருஷ்டிசெய்ய முயல்வானாயின் எக்காலமும் தெண்டாயுதம் தனது கையிற்றானே யிருக்கவேண்டியது. தெண்டாயுதத்தை நீற்று நினைப்பானாகில் ஓர் பிராணியும் உற்பத்தியாகாது தெண்டாயுதம் தனித்திருந்தாலும் ஓர்காரியமும் ஆகாது. தெண்டாயுதத்தைக் கையிலேந்தி அவற்றை யுற்றுநோக்கித் தான் சிருஷ்டிக்கவேண்டியதை நினைத்தமாத்திரம் உடனே தனது விழியிற்தோன்றிநிற்கும். இதுஎப்படியென்றால் தற்காலத்தில் நாம் கண்காணும் மாசி மருமுதலிய ஓர் அரும்பேனுமில்லாத கட்டாந்தரையின் மீது வானத்தின் மழைத்துளி விழுமளவில் புல்பூண்டு தாபரங்கள் எவ்வாறு முளைத்தெழுகின்றதோ அப்படி பிரமனுக்கும் பிரமனது கரத்திலிருக்கும் தெண்டாயுதத்திற்கும் அவ்வளவு பொருத்தத்தை பகவான் அருளிச்செய்திருக்கின்றனர். இங்ஙனம் யோசிக்குமளவில் பூமியானது சுரோணிதமாகவும் மழைத்துளியானது சுக்கிலமாகவும், விளங்குகின்றது அவ்வாறே பிரமதேவனது பார்வையின் உறுத்தம்ல சுக்கிலமாகவும் தெண்டமென்ற உருவே சுரோணிதமாகவும் கருதலாகும். இவ்வித காரணசக்தியைப்பெற்ற பிரமனானவன் வெளியாகிய உலகின்மீது மண்விண் இரண்டிற்கும் சாட்சியாகவே நால்வகையோனி எழுவகைத்தோற்றம் எண்பத்துநான்கு லட்சயோனி பேதத்திலும் ஆண் பெண் இரண்டென சிருட்டிக்குமாபோல் மனிதரூபத்திலும் ஆண்பெண் இரண்டென ஒவ்வோருருவம் சிருட்டித்தனன் அவற்றுள், ஆணிற்கு (சுவாயம்புமனுவென்றும்) பெண்ணிற்கு (சதரூபை) யென்றும் இயற்பெயருடையது. இங்ஙனம் சிருட்டியாயதை ஒத்திட்டுபார்க்குமளவில் மற்றசமயங்களுக்கும் ஒவ்விவருகின்றன. அது யெங்ஙனமெனில் கிருஸ்துவர்களும் ஆதியில் ஆதாம் யேவாள் யென்னும் இருவரை சிருட்டித்ததாகவும் மகம்மதியரும் (ஹாஜாம் அவ்வா) யென்னுமிருவரையும் சிருட்டித்ததாகச் சொல்லுகை

கையில் ஆதிசிருஷ்டியின் முறையே பெயர்கள் மாத்திரம் பேதப் பட்டிருந்தாலும் சிருட்டியின் மார்க்கம் ஒன்றேயிருப்பதால் பாலினிடமாகத் தயிர் மோர் வெண்ணெ நெய் இவற்றைப்பங்கிட்டுக் கொண்டதுபோல மற்ற மதத்தினரெல்லாம் இந்துமதத்திலிருந்தே தமது சிருட்டி தமது கிருட்டியென்று பங்கிட்டுக்கொண்டதாகத் தெரியவருகின்றது இவை நிற்க அகண்டவெளியாகிய உலகின்கண் விருட்சங்களுந் தாபரங்களும் கூபங்களும் சூழப்பெற்ற மண்டலத்தில் பிரமனானவன் ஊர்வன, நகர்வன, நடப்பன, பறப்பனவாகிய பட்சி பறவை விலங்கு முதலிய மிருகஜாதிகளுடன் மனிதவர்க்கத்திலும் பெண் ஆண் இருவகையும் சிருஷ்டித்துத் தன் கடன் கழித்தனன் அக்காலததில் இவ்விருவரன்றியில் தன்னைப்போன்ற உருவம் வேறுகிட்டாமலும் யெங்குசென்றாலும் மிருகக்கூட்டமே தோற்றத்தாலும் அவற்றோடிதுகளும் மிருகத்தைப்போன்று ஆடையின்றி, மானமின்றி, நாணமின்றி, அறிவின்றி, மிருகங்களோடுதானுமொருமிருகம்போலவே அனேகஆண்டுகள் கழித்தனர், ஆகினும் பெருங்காணகியபடியால் ஆணிருந்தயிடம் பெண்ணிற்கும் பெண்ணிருந்தயிடம் ஆணிற்கும் புலப்படாமலும் தனித்தனி மிருகம்போல் சென்றநாள்செல்ல மற்றையோர்நாள் சந்தித்தனவாம்.

அப்படி சந்தித்த இரண்டுபேரும் ஒருவரையொருவர் உற்று நோக்கி மிகுந்த ஆச்சரியமும் களிப்பும் கருணையுமுண்டாகி (தன்னினம் தன்னைக்காக்கும் வேலி பயிரைகாற்குமென்பதுபோல) அன்றுமுதல் மிருகத்தொடர்ச்சிவிட்டு இவ்விருவரும் ஒன்றுசேர்ந்து யெங்குந்திரிந்து இறையெடுத்து ஒன்றையொன்றுதரித்து வாழ்நாட்கடக்கையில் பெண்ணென்றமாய்கை சம்பந்தப்பட்டவுடன் கலைவிக்கிடமுண்டாகி மருவி வாழ்ந்தன. இவ்வாறு இடை இடைப்புணரப்பெற்றமையரல் ஆண்பெண்ணென்ற அருவருப்புண்டாகி ஆண்குறியென்றும் பெண்குறியென்றும் மானபிமானம் தோன்றி நிர்வாணயோக்கியதையற்று இலைமுதலிய சருகுகளால் ஆடைபோன்று அறையில் உடுத்தப்பட்டு நாம் மனிதரென்ற தடிதடிப்பு தனக்குத்தானேயுண்டாயிற்று வேறுகருவிடத்திலுதிக்காமல் வேதாகவின்னேக்கத்தால் தலைபிறப்பாயுதித்தமையால் அந்தபுருஷனுக்கு (சுவாயம்பு)என்னும் நாமதேயமுண்டாயிற்று

அல்லது சுவாயம்புமனுவென்று பின்வரும் மனுக்களால் வழிங்கப்படுகிறது அந்த சுவாயம்புமனுவுக்கு மனைவியாகக்கிடைத்த மடந்தையை (சதரூபை) என்னுங்காரணப்பெயர் நேமித்துக் கொள்வதானார்கள்,

மேலும் இந்தச்சுவாயம்புமனுவும் சதரூபியும் சதிபுருஷகோலமாய் சுகங்களையனுபவித்து வாழுங்காலத்தில் அந்தகானகத்தினிடமாகத் தன்னைச்சூழ்ந்திருக்கிற ஒவ்வொருவஸ்துக்களுந்தன் கண்களுக்கு நூதனமாயும் ஆச்சரியமாயுந்தோற்றுகிற ஔஷதிகளைப்பார்த்துத் தன்மனதில் தினம்தினம் இச்சையுண்டாகி ஒவ்வொரு புல்பூண்டுகளாதிகளின் புஷ்பங்களுடைய மணத்தினால் இன்பமேலிட்டு அதுகளினுடையயிளங்காய்கள் செங்காய்கள்கனிகளினுடைய ஆச்சரிய உருவம் நன்று தீங்குகளறிந்து அதிற்சில கனிகளையுண்டுத் தன்னுடைய பசியைத்தீர்த்துக்கொண்டு அதினால் நாவுக்குண்டாகிய ருசியைப்பருகித்தன் பிராணனைப்போஷிக்கவேண்டியமுயற்சியில் திடத்தைக் கற்பித்துக்கொண்டு மேலும் தன்னைச்சூழ்ந்துகொண்டிருக்கிற ஒவ்வொரு பதார்த்தங்களிலும் பல ஜீவராசிகளிடமிருந்து உண்டாகிற ஒலியையும் ஓசைகளையும் காதிற்கேட்டு மதிப்புக்கிடமாகிய ஜீவகாருணியநற்குணமேலிட்டு தினந்தோறும் தன் பசிக்கி உணவுகளை சேகரிப்பதில் முயன்று ஆரணியத்தில் திரிந்துகொண்டிருக்கிறபோது சிலகாலம்சென்று இவ்விருவருக்கும் மகப்பேருண்டாகிப் பிரியவிரதனென்றும் உத்தானபாதனென்றும் சொல்லப்பட்ட இரண்டு புதல்வர்களும் ஆகுதி, வேஹூதி, பிரகுதி, என்று மூன்று புதல்விகளும் உதித்து நாளுக்குநாள் செல்வமாகத்தழைத்துச்செழித்திருந்தார்கள். இக்குடும்பம் யாவரும் புசிப்புக்குவேண்டிய விலங்கு புள்ளினம் ஜஷகம் காய்களும், கனிகளும், கிழங்குகள் முதலான பலவிதங்களாகிய தானியவஸ்துக்களையும் சமைத்து உண்டுப்பசியைத் தனித்துக்கொண்டிருந்தார்கள். இந்தப்படியாகக் காட்டிலிருக்கும் காலத்தில் யாவருக்கும் நாளோட்டத்தில் தனக்குத்தானே தயை, சாந்தம், பொருமை, அறிவு சொற்றிறமும் கல்வித்திறமும் உண்டாகி ஞானமுதித்துத் தங்களுடைய நிலைமையைத் தாங்களே ஆராய்ச்சிசெய்து பிரிதிவு, அப்பு, தேயு, வாயு ஆகாயமென்கிற பஞ்சபூதங்கள்செய்யும்படியான நன்று தீதுகளை யறிந்து மகிழ்ந்து புகழ்ந்து அனைவரும் துக்கமின்றிச் சுகமாய் வாழ்ந்து வருகிறபோது

இவர்கள் ஒருவரோடொருவர் யோசித்து நாளுக்குநாள் புசிப்பை த்தேடி யுண்பத்தைப்பார்க்கிலும் ஆரணியத்தில் தங்கடையாய் மேய்ந்து ஆகாரம் நித்திரை, பயம், மைதுனம் ஆகியநான்குஅறி வுகள் வகித்தச் செம்மறியாடுகள், வெள்ளாடுகள் ஒட்டகங்கள், பசுக்கள், குதிரைகள், கோழிகள், பக்ஷிகள், முதலான சகலசீவ ன்களையும் பிடித்துக்கூண்டிற்சேர்த்து அதுகளுக்கு வேண்டிய ஆகாராதிகளைப்போட்டுக் காப்பாற்றி அதுகளாலுண்டாகும் பல னையனுபவித்துக்கொண்டு சுகமாகயிருந்தார்கள்.

மேலும் ஜீவப்பெருக்கத்திற்குமுதற்பிறப்பினராகையால்இ வர்கள் உறன்முறை கிரமங்களும்வெவ்வேறு அவரவர்கள்மனங் கொண்டபடி சம்பந்தமியற்றினவர்களாய் குடும்பமானது மென் மேலும் பெருகலாயிற்று இடையில் அனேகமனுக்களுற்பத்தியா யின பின்னர் அவரவர்க்கு தொழின்முறையை பாகித்து அத் தொழிலுக்கேற்ற இயர்பெயர்கள் அமைத்துக்கொண்டனர். இ ப்படியே சிலநூறுண்டுகள் சென்றபிறகு வேற்றுமைகொண்டா ர்களன்றி ஆதியிற்றானே தொழிலுக்கொருஜாதியாக உதித்தாரி ல்லை மனுதர்மசாஸ்திரமென்னும் நூலெழுதியமநுவும் மேற்கூ றியபிரதமமனுவின் சந்ததியேயன்றி தனித்து வேறுவழியிற்பிற ந்தாரில்லை மேற்படி சந்ததியார் வெவ்வேறு மதத்தினரானதும் ஜாதிவேற்றுமையடைந்ததும் (பிரபஞ்சவுற்பத்தி) என்னும்சாஸ் திரத்தில் விரிவாய்க்காணலாம் சரீரத்தினிலமை யொன்றைமாத் திரம் விரிக்கப் புகுந்தமையால் மற்றவிஷயங்களை இம்மட்டில் நிறுத்துவாம்,

இனி யுத்தரபாகம்.

## உத்தரபாகம்.

முன்னுரைத்த பூர்வபாகமென்பது ஆதிகாலத்தில் பிரமசிருஷ்டியால்உண்டாக்கப்பட்ட (சுவாயம்புமனு சதரூபை) யென்னும் இவர்களின் புத்திர பவுத்திரபாரம்பர்யமாகவே முறை முறை அனேக மனுக்களுற்பத்தியாகி அவரவர்கள் தொழிலின்காரணத்தால் பலவித பிரிவுகள் யேற்பட்டு நிகழும்நாட்களில் யுகக்கிரமம் போல வர்ணபேதங்களும் ஏற்பாடாயினவாம். (இவைநிற்க) மானிடதேகத்தின் அங்க உறுப்பினைப்பங்கிட்டு அதிலுள்ள ஆந்திரீகமும் கூன், குருடு, செவிடு,ஊமை, இன்னுஞ்சில கருவிகள்குறைவாகவும் விகற்பமாகவும் பிறப்பது ஏனென்றும் ஞானியும் மூடனும் மூர்க்கனும், செல்வனும், தரித்திரனுமாக பேதப்படுவதேனென்றும் தீரவிசாரிப்போமென்றால் இடையில் இடையில் இன்னொருசந்தேகமுண்டு (அதாவது) அகண்டாகாரமாய் விரிந்த உலகம் முழுமையும் எங்கெங்கும் ஸ்ரீபுருஷமயமாகவே நிறைந்து ஜீவராசிகள் பெருகிவருவது திருஷ்டாந்திரமேயாம். இவற்றுள் நாமும் ஓர் குடும்பஸ்தராக விருக்கின்றோம் மானிடராகிய நமது வகுப்பிற்கு நூறுவயதென்று வேதகர்த்தாக்களாலும், மஹாரிஷிகளாலும், நிச்சயித்திருக்க கெற்பத்திலும் கெற்பங்கடந்து பிறந்தவுடனும் முதற்றிங்களிலும் மறுதிங்களிலும், மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து பதினொன்று ஆகிய பனிரண்டு திங்களுக்குள்ளும் இரண்டாமாண்டிலும், மூன்றுமாண்டிலும், நான்காமாண்டிலும், ஐந்தாம்வயதிலும் இப்படியே பத்து பதினைந்து இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது, எழுபது யென நிச்சயமில்லாமல் முன்கூறிய வயது நூற்றுக்குள் எந்தவயதோ எந்தமாதமோ எந்தநாளோ எந்தநாழிகையோ இரவோ பகலோ அன்றியும் உண்ணும்போதும் உரங்கும் போதும் இருக்கும்போதும், நடக்கும்போதும் இன்னசமயமென்றில்லாது நிமைகொட்டுமாப்போல் பிராணன் நீங்கிப் போவது ஆச்சரியமாயிருக்கின்றது என்றைக் கிருந்தாலும் இறப்பது நிச்சயமென்று நிச்சயித்துக்கொள்வது நிச்சயமேயாம், ஆனாலும் பிறவிக்கிரமம்போலிறவாமல் தந்தைக்கு முந்திசேயும் சேய்க்குமுந்தி தாயும். தாய்க்குமுந்தி பிள்ளையும்

இவ்வாருக முறைக்கிரமம்தப்பிக் காலனூரடைவது இக்காலத்திற்ருஞ முற்காலத்திலும் இப்படி யுண்டாவென்று விசாரிக்குமளவில், (சாட்சி)

மண்ணுடும் ம்ன்னவரும் அவர்தனமும்
மாண்டனநுண் மணலையொக்கும்
விண்ணுடும் யிந்திரரு மவர்வாழ்வும்
போயினவிண் மீனையொக்கும்
எண்ணுரும் பிரமரு மண்டமும்பூதங்களு
மிறந்தனவோ வெல்லையில்லை
கண்ணுரும் நீயெங்கே நின்வாழ்க்கை
நிஜமென்றே கவரும்நெஞ்சே.

முற்றியபின் கனியுதிரும் பழுப்புற்றஇலையுதிரும்முழுதுமேநெய்
வற்றியபின் விளக்கவியுமென்னவுமோர் திடமுண்டுமக்கள்காயம்
பற்றியநற் கருப்பத்தோ மூப்புற்றோ விழுவதென நிலையிலையால்
மற்றிதனை நிஜமென்றே நினைப்பதெங்கே மடமைநெஞ்சே.

நெல்லறுக்கவோர்காலம் மலர்கொய்யஓர்காலம் நெடியபாராங்
கல்லறுக்கவோர்காலம்மரமறுக்கவோர்காலங்கணிதமுண்டு [னும்
வல்லரக்கனையநமன் நினைத்தபொழுதெல்லாம்நம்வாழ்நாளென்
புல்லருக்க வருவனெனின் மற்றினிநானிதன்பெருமைபுகல்வதெ
[ன்னே.

## மனமிரக்கம்.

என்றபடி இக்காலத்தில் செல்லும்பிராணிகளை இனிச்செல்லும் பிராணிகள் எவ்வாறு காட்சிப்பிரமாணமாய்தெரிசித்துவருகின்ருமோ அப்படியே அளவுகடந்து பிராணிகள் முன்பின்னுகமுறையின்றிச் சென்றதாகபற்பல புராணமூலியமாய்ப்பார்வையிட்டிருக்கின்றனம் மனிதருக்குமேற்பட்ட சாமானியதேவர்களிலும் முன் முறையே நடந்தேறியபடி கேட்டுமிருக்கின்றனம் (இவைநிற்க) இக்காலத்தில் பிராணனிழந்தஓர்பிரேதத்தைமயானத்திற்கிடத்தி மனைசேரும் நிமித்தம் பின்துடறும் உற்ருர் பெற்ருர் முதலியஉறவின்முறையார் யாவரும்அன்றையதினம்பேசும் வாய்ஞானமோ மிகவும் அருமை அஞ்ஞானமென்பதற்கிழையே

னும்பிடமின்றி முழுமையும் மெஞ்ஞானமே பேசுகின்றனர் பிரேதத்தை பின்பற்றியதுமுதல் நீரில்மூழ்குமட்டும்நினைவையெல்லாம்உண்மையிற்றானே பிரயோகிக்கின்றனர் இறந்தானது குணனுபவங்கள் முற்றும் அங்ஙனே யுரைத்து முடித்துவிடுகின்றனர் நாளை நமக்கு மிதுவழிதானேயென் றிரங்குகின்றனர் பிறப்பென்பது இறப்பதற்கேயன்றி யிருப்பதற்கல்லவென் றுநிச்சயிக்கின்றனர்.

இந்தவாழ்விற்குத்தானு யொருவரையொருவர்மோசம்செய்வதும் பொய்சொல்வதும் யென்று மெய்வருந்தி மேல்மூச்சு விடுகின்றனர் இத்தனைநாள் ஓடியோடி தேடியபொருள் கூடவந்தனவாவென்று குழைக்கின்றனர் எண்ணற்ற ஜெனமிருந்தும்பின்பற்றுவாருண்டாவென்று புலம்புகின்றனர். என்றைக்கிருந்தாலும் மண்ணுக்கிரையென்றே மதிக்கின்றனர் நேற்றின்னேரம்வீட்டிலிருந்தாரே இன்றைக்குக் காட்டிலிருக்கின்றாரென்றுவாட்டபபடுகின்றனர். நம்மாலாவது யாதொன்றுமில்லை எல்லாங்கடவுள் செயலென்று அடைமொழியாய் துதிக்கின்றனர் அவனன்றியோரணுவும் அசையாதெனும் ஆன்றோர் வாக்கியத்தை அன்னேரம் அனுஷ்டிக்கின்றனர். இப்படியேஒவ்வொருவரும் தத்தமதுவாயில் வந்தபடி புலம்புவதுடன் அங்ஙனம் பேசுஞ் சுடலைஞானிகளின் குதற்கவாதமோ முற்கூறியதிலும் அருமையாகும்அவற்றின்சிலது விளக்குவோமாக

## சுடலை ஞானம்.

பிராணன் யெங்கே தேகம் யெங்கே இவற்றிற்கு ஒத்துமையென்ன இருக்கின்றது அதாவது பிராணனுள்ள நமக்குஊர்முட்படுமாகில் தேகத்திற்கு வலியுண்டாகிறதே அவ்வலியானதுதேகத்திற்குமட்டுமா பிராணனுக்கும்உண்டா இத்தனைநாள்அனுபவித்தசுகதுக்கம் ஆத்மாவடைந்ததா தேகமடைந்ததா ஈரறிவுமூவறிவுநாலறிவு ஐயறிவுஆறறிவுஎன்னு மந்தந்தஜீவராசிகள்யாவற்றிலும்ஆத்மாவென்றபிராணவாய்வு இருப்பதால்ஜீவராசின்குணபேதங்கள் யாவும் ஆத்மாவைப்பற்றியதாதேகத்தைப்பற்றியதா

தேகத்தைப்பற்றியதென்றால் ஆத்மாவானது அழிவில்லாத நித்சிய சொரூபமாகையால் குறைந்த அறிவுடைய அற்பதேகராசிகளிடத்திற் புகுவானேன் அப்படி புகுவது அவரவர்செய்தபாவ புண்ணியத்திற் கீடான ஜென்மமேயன்றி வேறில்லையென்றால், (அவனன்றியோரணுவு மசையாது) என்ற பிரமாணத்திற்குபாவ புண்ணியமென்பது நம்மாலெங்ஙனம்முடிந்ததுபாவபுண்ணியமென்பதுநம்மால்முடிந்ததல்லவாயின் பிறவிக்கிடமேயில்லைபிறவிக்கிடமில்லையாயின் இம்மட்டிலுள்ளஜீவர்களில் உயர்ந்தபடியும்தாழ்ந்தபடியுமாய் நிற்றலென்ன இந்தகேள்விகள் வாஸ்துவமேயாம் ஆனாலும் நித்திய ஸ்வரூபமானஜிவாத்மாவானது அவ்வவர்களது தேகத்திற்கு சாட்சியாய் நிற்கின்றதேயன்றி அதுவேகாட்சியாய் முன்னின்று முடிக்காதுஎன்றும் பலவிதகுதற்கவாதங்கள்பேசிப் பேசியும் ஒல்வோரடியாய் சுடலைவிட்டு மீள்வாரன்றி அங்ஙனம் பேசிய ஞானத்தை மீண்டும் கையாண்டாரில்லை.

## சமாதானம்.

மாண்டானுக்குடையவன்யெவனோ அவன்மனத்துபரைமாற்றுமாறுஇனிமாள்வாருரைக்கும் உபசாரமோ அளவின்மை (அஃதெப்படியையெனில்) தலைவரிறந்த மக்களுக்காவது மக்களிறந்த தலைவருக்காவதுசூழ்ந்தாருரைக்கும்தேருதலைநோக்குமிடத்துஉண்மையாகவே விளங்குகின்றது. (அதாவது)

அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன ஆவதில்லை
தொழுதாற்பயனென்ன நின்னையொருவர் சுடவுரைத்த
பழுதாற்பயனென்ன நன்மையும்தீமையும் பங்கயத்தோன்
எழுதாப்படிக்கு வருமோசலியாதிரு யேழைநெஞ்சே.

என்றபடி ஆயிரத்தெட்டண்டங்களும்ஒருகுடையிலாண்டசூரபத்மனென்ன மடியத்தக்கினவனா அவன் வரமும், வலிவும், ஆண்மையும் அழியத்தக்கதா அவன் மக்களென்ன மடியத்தக்ககாலமா அப்போர்க்கொத்தவர்களெல்லாம்மடிந்தொழிந்துமண்ணுகவில்லையா அக்காலத்து சூரருந்தேவரும் மனிதரும்போலநாமென்ன நீண்டதவஞ்செய்துவரம்பெற்றோமா இராவணேஸ்வரனென்ன அற்பசொற்ப வரம்பெற்றவனா தேவர்களெல்லாம்சிற்றாழியம்செய்யச்செங்கோற்செலுத்தினனன்றோ அவனைச்சூழ்ந்தஇனத்தார்கள் யாவரும்நம்மைப்போன்றஒருசிரமும் இருகரமும்பெற்றோரல்லவே மனத்தில் நினைத்தபடியே வெவ்வேறுருபமெடுக்கவல

லவரும் அனேகசிரங்களும்கரங்களுமுடைய மாய்கைவல்லோரெ ல்லாம் மடிந்துமண்ணாய்ப்போகவில்லையா பத்துசிரங்களும் இரு பதுகரங்களும்பெற்ற முதலோன்கூட அதோகெதியாகவில்லையா இன்னும் அனேகமகுடமந்தாதிகளும் எத்தனையோபூச்சக்கிரவர் த்திகளும்எத்தனையோமனுச் சக்கிரவர்த்திகளும்மண் ணுலகமுழு மையும் என்னதென்று தலையசைத்த மன்னரெல்லாம்மண்ணாய்ப் போகவில்லையா (ஆண்டாண்டுதோறும் அழுதுபுரண்டாலும் மா ண்டார்வருவாரோ மானிலத்தில்) என்றபடி கடைந்தவெண்ணெ யானது மறுபடியும் மோரிற்புகுமா மூலையினின்றுங்கறந்தபாலா னது திரும்பவும் ஸ்தனத்திற்கேருமா அப்படி வைத்ததெல்லாம் பயிரும் பெற்றதெல்லாம்பிள்ளையுமானால்உலகங்கொள்ளுமாபூமி தான்சுமக்குமா உலகத்திலுள்ளயாவரும் அவரவர்பெற்றபிள்ளை களெல்லாம் ஜீவித்திருந்தால் பெரும்பணக்காரனாகலாமேபின்னுக் குதவியாகுமேயென் றெண்ணுவதிற் பயனுண்டா அல்லது அள விறந்த பணந்தேடிய வல்லவராச்சுதே இன்னமிருந்தால் பொன் வீடுகட்டலாமேயென்றுபெரியோரைநினைத்துசிறியோரழிவதில் சித்தியுண்டோ:

பணந்தேடி யாரிருந்தார் பாழ்பூலோகத்தில்
பாவிதிரியோதிரனும் பாட்டனாரும்
குணம்நிறைந்த மகுடமன்னர் கருணன்பூரி
கூறியதோர் தேத்தரசன் சகுனிசல்லி
பிணமானர் அர்ச்சுனன்கை யம்பினாலே
பிலமான அவர்களையும் துணையும்போச்சா
மணமான மக்கள்பெண்டீர் சுற்றமெல்லாம்
மாய்கையடா மாய்கையடாசற்று மதித்துப்பாரே

என்ற செய்யுளின்படி நீண்டபுராணங்கள் பலவற்றிலும் கண்ணுற்றிருக்கின்றோமல்லவா (இவையன்னியில்)இக்காலத்தில் நாமறிந்தவரையில் எவ்விதத்தும் ஆதரவற்ற சிறுமியரும் சிறுவ ரும் ஜீவிக்கவில்லையாஓர்மாதுகெற்பவதியாயிருக்கும்போதேபுரு டன் இறப்பானாயின் அம்மாதுஎவ்வாறு சகித்திருக்கின்றாள் தந் தைமுகத்தைத் தெரிசியாத சிசுக்களெல்லாம் சீவிக்கவில்லையா ஆ கையால் இறப்பதும்பிறப்பதும்நம்மாலியன்றகாரியமேயல்லஒரு வன் சம்பாதிப்பதும் தரித்திரனாவதும் ஞானியும் யோகியும் சாந் தமும் மூர்க்கமும் கூனுங் குருடும் செவிடும் ஊமையும் ஆகிய இ வ்வகைப்பட்ட பேதாபேதமெல்லாம்அவரவர்செய்தவினைக்கீடா

கவும் கடவுள்கிருபையானது சீவசாட்சியாம் முன்னிருந்து சகல சுகதுக்கமும் அடையச்செய்விக்குமேயன்றி காரணமின்றி யா தொருகாரியமும் நடவாது (பேரிளமை யின்பம் பிணி மூப்புச் சாக்காடு) இவையாவுங் கருவிலமைப்புயென்னும் ஆன்றோர்வாக்கியம் சோதிப்பராகில் பிறப்பென்பதற்குச் சந்தோஷமும் இறப்பென்பதற்கு விசனமும் நேரிடாது அஃது எப்படியெனில் நமது தாய்தந்தையரின் சுக்கிலசுரோணித மிரண்டும் ஒன்றுபடுங்காலமெதுவோ அக்காலத்திற்றானே இன்பதுன்பம் முதலிய சகலசுக துக்கங்களும் அமைதலேயன்றி கருக்குழியை நீற்றபின்னர் நம்மாலடைக்கப்படுவது யாதொன்றுமில்லை ஆகையால் இறந்தாரைப்பற்றி இறப்பாரழுவதிற் பயனில்லை சென்றதைப்பற்றி சிந்திப்பது அறிவுடையோர்க் கழகல்லவென்றும் பலவாறு ஆற்றித் தேற்றி நீரில்மூழ்கி பின்பு நிகழவேண்டியதிற் புகுவாராகும்.

(இதற்குசாட்சி.) ஊரெலாங்கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினைமாற்றிப் பிணமென்றுபேரிட்டு
சூரையங்காட்டிடை கொண்டுபோய்சுட்டிட்டு
நீரினில்மூழ்கி நினைப்பொழிந்தாரே.

என்ற செய்யுட்கிணங்க சுடலைநீற்று யாவரும் வீடுசேர்ந்தவுடன் நீரில்மூழ்கி காரசாரங்கூடிய சோருண்டபின் வேறெண்ணங்கொள்வார்கள். அதாவது, இன்னவூரில் பெண்கொண்டாரும் இன்னஊரில் பெண்கொடுத்தாரும் இன்னார்பெரியோர் இன்னார் சிரியோர் இன்னார்வரவேண்டும் இன்னாரை நீக்கவேண்டுமென்று ஊருரும் ஓலையெழுதியும் ஆளனுப்பியும் மேலுமேலும் கூட்டங்கூடி நாட்டாண்மை யேற்பட்டு செத்தான் வைத்தசொத்துக்களுக்கு பங்குபாத்யதையும் மேலிட்டு உனக்குடையது எனக்குடையதென்று நீதியேறி அனுதியானுலுமாவார் அல்லது வைத்தவனுக்குமேற் பத்துபங்கு கருத்துடையவராய் ஒத்திருந்தாலுமிருப்பார். இச்செய்கையை விரித்து யோசிக்குமளவில் இன்னேரம் அழுததும் தொழுததும் தத்தமது ஜீவாதாரத்தைக் குறிக்கின்றதேயன்றி மனிதருக்கு நூறுவயதென்று பலநூலிலும் பார்த்திருக்கின்றோமே அன்னாலுக்குமாறாக இடையில் மரணமடைவதற்குக்காரணமேதென்று கவனித்தாரில்லை அப்படிகவனித்தாலும்,"ஆவாரையாரே யழிப்பாரதுவன்றி,சாவாரையாரேதவிர்ப்பாரே வாம, லையம்புகுவாரேயாரேவிலக்குவார் மெய்யம்புவிய தன்மேல்."

என்றசெய்யுட்கு நேராய் பேரிளமையின்பம் பிணிமுப்புச் சாக்காடு இவையாறுங்கருவிலமைப்பென்று முன்னமொருக்கால் உரைத்திருக்கின்றீரே அதற்குத்திருப்தியான சமாதானம்உண்டாவென்பதற்கு இனிவருமாறு தெரிந்துக்கொள்வோமாக.

இந்த தேகமானது நிச்சயமில்லாமலும் நினைத்தபோது மரணமடையும் ரகசியத்தை யறிவதற்கு ஞானசாரியர் கருத்தைகொண்டு சாட்சிகொடுத்தாலன்றி சமாதானமாகாது ஆகையால் அங்கத்தின் கருவிகளைக்காட்டி பின்பு மரணக்குறிப்பையுரைப்பாம்



இந்தச்சரீரமானது தாயின்கெர்பங்கடந்த சிசுக்கள்முதல் யெவ்வன கெளமாரவார்த்திகமாயினவர்மட்டில் சித்தமதுகையினால் 8 - ஜாண் நீளமும் 4-ஜாண் பருமனுமிருக்கும் அல்லது 96-விறற்கடை பிரமாணமுள்ளது (இதற்குவாயல்கள் ஒன்பது) செவிகள்-2 கண்கள்-2 நாசி-2 வாய்-1 ஆண்குறி அல்லது பெண்குறி-1, குதம் அல்லது அபானத்துவாரம்-1, ஆக 9-துவாரமுடையதாம்.

# தத்துவச்சுருக்கம்.

இந்தச் சரீரமானது உலகமயக்கத்தி லாழ்ந்தவருக்குக் கர்ம தேகியென்று பெயர் இவர்களுக்கு மரணமென்னும் மிருத்தியுதே வதையானது புரங்கழுத்தென்னும் பிடரியிற்றானேவாசமாயிருப் பதாலும் ஆடுகின்ற பம்பரத்திற்கும் அதை ஆட்டிவைக்குங்கயற் றிற்கும் எப்படி ஒத்துமையில்லாமலிருக்கிறதோ அப்படியேகர்ம தேகிகளுக்கும் இவரை ஆட்டிவைக்கும் பிராணவாய்வுக்கும்பற் றில்லாதிருப்பதாலும் இவர்கள் நடக்கையிலும் இருக்கையிலும் உண்ணும்போதும் உறங்கும்போதும் வண்டியாலும் ஓடத்தா லும், மரத்தாலும், செடியாலும், முள்ளாலும், கல்லாலும், குளத் தாலும், கிணத்தாலும் இரவிலும் பகலிலும் இன்னசமயமென்று நிச்சயமில்லாமல் திடீலென்று மரணம் சம்பவிக்கின்றது இதை நோக்குமிடத்தில் இவர்களின் பிராணவாயுவைபிடரியிலிருக்கும் மிருத்தியுதேவதை கைப்பற்றியிருப்பதுபோல் தோற்றுகிறது.

அன்றியும் ஆடு, மாடு, கழுதை, குதிரை, பன்றி, யானை, ஒட்டகம், நாய், பூனை, குரங்கு, பாம்பு, கீரி இவற்றை ஒரேகிடங் கில் அடைப்போமாகில் ஒன்றையொன்றுதெரிசித்தமாத்திரத்தில் ஒன்றையொன்று கொல்லவும் ஒன்றையொன்று வெல்லவும்ஒன் றையொன்று தின்னவும் ஒன்றையொன்று பன்னவுமாக எப்படி சத்துருமித்துருதன்மை மேலிட்டு அந்தக் கிடங்கானது பிணக் காடாகிப் பாழாகுமோ அதுபோல் இந்த திரேகத்தினிடமாகப் பூதம், பொறி, புலன், கன்மேந்திரியம், கன்மவிஷயம், கரணம், அறிவு, நாடி, வாய்வு, ஆதாரம், மண்டலம், மலம், தோஷம், குணம், இராகம், வினை, அவஸ்தை ஆகிய இவற்றினுட்பிரிவுகள் யாவுங்கூடி தொண்ணூற்றாறு தத்துவங்களும் ஒன்றுக்கொன்று பேறுமாறும சந்தித்து இந்ததேகத்தை எவ்விதத்தும் கடைத் தேறாவண்ணம் இடையச்செய்து நரகமென்னும் படுகுழியில் அ டையச்செய்கின்றது.

புண்ணியதேகமோவென்றால் மேற்குறித்த 96-தத்துவங்க ளுக்கும் இவைகளடங்கிய கிடங்காகிய தேகத்திற்கு புருஷகாரி யான ப்ராணவாயுவானது ஒடுங்குமிடமும் உதிருமிடமும் தெரி

ந்து இடகலை பிங்கலை யிரண்டினும் ரேசிக்குமளவே பூரித்து பூரிக்குமளவே பொருந்தவைத்து நானென்றசெருக்கற்றுதானென்றதுணைதொட்டு வானென்றவெளியிடமாகவே விழியைச்செலுத்தி ஒழியாத தவத்தி லிருக்கின்றமையால் இருளி லகப்படாமலும் எக்காலுஞ் சாகாமலு மிருக்கின்றனர்.

## தேகதத்துவ விபரம்.

பிரிதிவு, அப்பு, தேயுவு, வாயுவு, ஆகாயம் இவ்வைந்திற்கும் } பஞ்சபூதமென்றுபெயர்.

பிரிதிவுயென்பது-மண்
அப்புவென்பது-நீர்
தேயுவென்பது-அக்கினி
வாயுவென்பது-காற்று
ஆகாயமென்பது-சுத்தவெளியாம்.

தோத்திரம், தொக்கு, சட்சு, சிகுவை, ஆக்கிராணம் இவ்வைந்தும் } பொரிகளென்றுபெயர்

தோத்திரமென்பது-செவி
தொக்குயென்பது- உடம்பு
சுட்சுயென்பது-கண்
சிகுவையென்பது-நாக்கு
ஆக்கிராணமென்பது-மூக்கு.

சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம், இவ்வைந்திற்கும் } புலனென்றுபுயர்

சத்தம்கேட்பது-செவிக்குயிர்கூறு
பரிசம் சுகதுக்கம்-உடம்புக்குயிர்கூறு
உருவம் காணல்-கண்ணுக்குயிர்கூறு
இரசம்அறுசுவை-நாவுக்குயிர்கூறு
கந்தம் வாசனை-மூக்கிற்குயிர்கூறு

வாக்கு. பாதம், பாணி, பாயுரு, உபத்தம், இவ்வைந்திற்கும் } கன்மேந்திரியமென்றுபெயர்

வாக்கென்பது-வாய்
பாதமென்பது-கால்

பாணியென்பது-கை.

பாயுருவென்பது-அபானம்.

உபத்தமென்பது-குறி

| | |
|---|---|
| வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம், இவ்வைந்திற்கும் | கன்மவிஷயமென்றுபெயர் |

வசனமென்பது வார்த்தை-வாய்க்குயிர்கூறு.

கமனமென்பது நடை-காலுக்குயிர்கூறு.

தானமென்பது கொடுத்தல், வாங்கல்-கைக்குயிர்கூறு.

விசர்க்கமென்பது விடுதல்-அபானத்துக்குயிர்கூறு.

ஆனந்தமென்பது மகிழ்தல்-குறிக்குயிர்கூறு.

| | |
|---|---|
| மனம், புத்தி, அகங்காரம், சித்தம் இந்நான்கிற்கும் | கரணமென்று பெயர், |

ஒன்றைநினைப்பது-மனத்தின்கூறு

ஒன்றைவிசாரிப்பது-புத்தியின்கூறு.

ஒன்றைக்கொண்டெழும்புவது-அகங்காரத்தின்கூறு.

ஒன்றைசெய்துமுடிப்பது-சித்தன்கூறு.

| | |
|---|---|
| இடைபிங்கலைசுழிமுனை-சிகுவை-புருடன் காந்தார்-அத்தி-அலம்புடைசங்கினி-குரு | நாடிகளெனப்பெயர் |

இடையென்னும் நாடியானது வலதுகாற் பெருவிரலினின்றுதோற்றமாகி கத்திரிக்கோல்போல மாறலாக வலதுநாசியைப் பற்றி நிற்கும்.

பிங்கலையென்னும் நாடியானது இடதுகாற் பெருவிரலினின்றும் தோற்றமாகிக்கத்திரிக்கோல்போல மாறலாக வலது நாசியை ப்பற்றி நிற்கும்.

சுழிமுனையென்னும் நாடி மூலாதாரத்தைத்தொடர்ந்துஎல்லாநாடிகளுக்கும் ஆதாரமாகியும், நடுநாடியாகவும் சிரசளவுமுட்டிநிற்கும்.

சிகுவையென்னும் நாடியானது மூலாதாரத்தைத்தொடங்கி உண்ணாக்கிலே நின்று சோறும் தண்ணீரும் இவைகளைவிழுங்கச் செய்யும்

புருடனென்னும் நாடியானது மூலாதாரந்தொடங்கி வலது கண்ணளவாய் வந்துநிற்கும்.

காந்தாரியென்னும் நாடியானது மூலாதாரந்தொடங்கி இடதுகண்ணளவாய் வந்து நிற்கும்.

அத்தியென்னும் நாடியானது மூலாதாரந்தொடங்கி வலதுகாதளவாக வந்து நிற்கும்.

அலம்புடையென்னும் நாடியானது மூலாதாரந்தொடங்கி இடதுகாதளவாய் வந்து நிற்கும்.

சங்கினியென்னும் நாடியானது மூலாதாரந்தொடங்கி குறியின் அளவாய் வந்து நிற்கும்.

குரு என்னும் நாடியானது மூலாதாரந்தொடங்கி அபானத்தினளவாய் வந்து நிற்கும்.

இந்நாடிகளானது தேகத்தைப் போஷிக்குமாறு அன்னபானாதிகள் செல்லும் மார்க்கமாகவும், இரத்தம், நீர், இவையோட்டங்களுக்குத் தாரையாகவும், தேகத்தை வளைக்கவும், நிமிர்க்கவும், குருகவும், பெருகவும் கத்திரிக்கோல்போல ஒன்றுக்கொன்று மாறலாகவும் கப்பிக்கயிற்றைப்போலிழுத்துப் பிடித்திருக்கின்றது.

## வாய்வுகள் ௧௦.

| | |
|---|---|
| பிராணன் | நாகன் |
| அபானன் | கூர்மன் |
| வியானன் | கிருகரன் |
| உதானன் | தேவதத்தன் |
| சமானன் | தனஞ்சயன் |

## பிராணவாய்வு.

பிராணவாய்வானது ஆத்மாவைவிட்டு நீங்காதிருக்குந் தன்மையைப் பெற்றபடியால் பிராணவாய்வென்று பெயர்பெற்றது இந்த பிராணவாய்வானது லலாடமத்தியில் தோன்றி மூலாதாரக்குண்டலியில் குதித்து நாபிஸ்தானத்தில் முட்டி இடைபிங்கலைகளில் ஓடி கபாலத்தைச்சுற்றி நாசியின்வழியாய் பன்னிரண்டங்குலம் புறப்பட்டு நாலங்குலங் கழண்டு மற்ற எட்டங்குலமும் திரும்பத்தான் இருந்தயிடத்திற்குச்சென்று தாக்கும் இந்தப் பிராணவாய்வுக்கு வருவதும் போவதுமாக இதேதொழிலாய் நாழிகையொன்றுக்கு 360 முன்னூற்றறுபது சுவாசமாக இரவுபகல் கூடிய நாழிகை 60-க்கும் ஆகமொத்தம் நாளொன்றிற்கு 21600 இருபத்தோராயிரத்தி அறுனூறு நடைநடக்கும்.

## இதற்கு விபரம்.

| | |
|---|---|
| மூலாதாரக்கரிமுகனுக்கும் குண்டலிசத்திக்கும் | 600-சுவாசம் |
| சுவாதிஷ்டானத்தில் பிரமனுக்கு | 6000-சுவாசம் |
| மணிபூரகத்தில் திருமாலுக்கு | 6000-சுவாசம் |
| அனுகதத்தில் ருத்திரனுக்கு | 6000-சுவாசம் |
| விசுத்தியில் மகேச்சுரனுக்கு | 1000-சுவாசம் |
| ஆக்கினையில் சதாசிவத்திற்கு | 1000-சுவாசம் |
| பிரம்மாந்தரத்தில் சிற்சபைக்கு | 1000-சுவாசம் |

ஆகமொத்த சுவாசம் 21600.

### பஞ்சபூதங்களினிடம்.

| | |
|---|---|
| சுவாதிஷ்டானத்தில் | பிரிதிவு |
| மணிபூரகத்தில் | அப்பு |
| அனுகதத்தில் | தேயுவு |
| விசுக்தியில் | வாயுவு |
| ஆக்கினையில் | ஆகாயம் |

எனவசிக்கும்.

### பிராணவாய்வின் தொழில்.

பிராணவாய்வானது இரத்தப்பையிலிருக்கும் அசுத்தமான காரிரத்தத்தை சுத்தியாக்கி பெருநாடி சிறுநாடிமுதலிய நரம்புகளுக்கெல்லாம் இரத்தத்தைப் பரவச்செய்து உடலைவளர்த்து இந்திரியங்களையெல்லாம் முயங்கவைத்து ஆதாரமாயிருக்கும் இந்த பிராணவாய்வின் ஆதாரத்தால் இந்திரியங்களெல்லாம் அதிவிரைவாய் குதிரைபோல்சென்று விஷயங்களைப்பொருந்தும் (இந்திரியங்களென்பது வாய், கால், கை, அபானம், குறி, இவைகளாம்) இவ்விந்திரியங்களானது பிராணவாய்வின் ஆதாரமின்றித் தானுய்ச்செல்லமாட்டாது மேற்படி பிராணவாய்வானது இடதுநாசியிலோடும்போது சந்திரகலையென்றும் வலதுநாசியில் ஓடும்போது சூரியகலையென்றும்பெயர். சந்திரகலைக்கு மதியென்றும் சூரியகலைக்கு ரவியென்றும் பெயர்.

### அபானவாய்வின்தொழில்.

அபானவாய்வானது அன்னரசத்தை உடலில் நிறுத்தி உந்திக்கமலத்தின் கீழேனின்று மலமூத்திரத்தைப் பிரித்து குதத்தின் வழியாக மலத்தையும் குய்யத்தின்வழியாக மூத்திரத்தை

யும் கழித்து அந்தந்த துவாரங்களை சுருக்கிக்கொள்ளும் இந்த வாயுவின் நிறம் பச்சையென்று சொல்லப்படும்.

## வியானவாய்வின்தொழில்.

வியானவாயுவானது உணவின் சாரங்களை சகலமான நாடி நரம்புகளுக்கெல்லாமூட்டி சரீரத்தையும் இந்திரியங்களையும் பெலப்படுத்தி அவைகளின் தொழிலைநடத்தி அவயவங்களை நீட்டவும் முடக்கவும்செய்து பசி தாகம்சோப தாபத்தையுண்டாக்கும் இந்த வாயுவின் நிறம் வெண்மையாகயிருக்கும்.

## சமானவாய்வின்தொழில்.

சமானவாயுவானது நாபிஸ்தானத்திலிருந்துஅன்னரசத்தை பாதாதிகேசமட்டிலுமுள்ள ரோமத்துவாரங்கடோறும் பரவச்செய்து சரீரத்தைபுஷ்டியாக்கும் ஜடராக்கினியோடுகூடி உணவுகளை சமனம்பண்ணிக்கொண்டிருக்கும் இந்தவாயுவின் நிறம் நீலம்.

## உதானவாயுவின் தொழில்.

உதானவாயுவானது அன்னத்தால் உண்டான சாரத்தை நிறுத்தவேண்டியயிடத்தில் நிறுத்தி நித்திரைவருங்காலங்களில் வாய், கால், கை, குறி முதலிய இந்திரியங்களை ஒடுங்கச்செய்யும் தான்மாத்திரம் கண்டஸ்தானத்தில் நின்று கணுக்காண்பிக்கும் திரும்ப விழிக்கச்செய்யும் மரணகாலம் வந்தபோது இந்திரியசத்துக்களையெல்லாங் கிரகித்துக்கொண்டு வெளிப்பட்டுவிடும் இந்த உதானவாயுவானது இளமின்னலை யொத்திருக்கும்.

| | |
|---|---|
| பிராணவாய்வு | நாகவாய்வு |
| அபானவாய்வு | கூர்மவாய்வு |
| வியானவாய்வு | கிருதரவாய்வு |
| உதானவாய்வு | தேவதத்தவாய்வு |
| சமானவாய்வு | தனஞ்சயவாய்வு |
| இவ்வைந்துவாய்வுகளும் | இவ்வைந்துவாய்வுகளும் |
| பிராணுதிபஞ்சகமெனப்பெயர் | உபயவாய்வுக்களெனப்பெயர் |

## உபயவாயுக்களின் தொழில்.

நாகனென்னும் வாயுவானது சுவாசகுழாயின் வழியாய்நின்று விக்கல், கக்கல், ஏப்பம், கோட்டாவி, சோம்பல் இவைகளை யுண்டாக்கும். இவ்வாயுவு பொன்னிறமாம்.

கூர்மமென்னும் வாயுவானது கபாலஸ்தானத்தில் நின்று விழிக்ளைநோக்கி கண்ணினது நிமைகளைச் சிமிட்டவும் மூடவும் திறக்கவும் செய்யவும் சக்ரபெலத்துக்கோ ராதாரமாகவுமிருக்கும்

கிருதரனென்னும் வாயுவானது நாசித்துவார ஆரம்பஸ்தானத்திலிருந்து தும்மல், கோபம், அழுகை, பசி, தாகம், நடத்தல் இருத்தல் இவைகளைச் செய்விக்கும்.

தேவதத்தனென்ற வாயுவானது குறிகளினிடமாக நின்று அவைகளை பூரிக்கச்செய்து சந்தோடமும் நகைப்பும் மனமகிட்சியும் இன்ப ஆனந்தமும் உண்டாக்கும்.

தனஞ்சயனென்ற வாயுவானது கபாலத்தில் நின்று மற்றவாயுக்களுக்கெல்லா மேம்பாடுள்ளதாயும் உடலை உலாவச்செய்வதாயுமிருக்கும் தேகத்தை விட்டு ஆத்மா பிரிந்தவுடன் உடலை வீங்கவும் பாரிக்கவும்செய்து துற்கந்தமுண்டாக்கி கபாலத்தைப் பிளந்துக்கொண்டு வெளியுடன் கலந்துப்போகும்.

இன்னமும் இந்த தேகமானது மும்மலம், முக்குணம், முத்தோஷம், ஏடனை, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, அகங்காரம் பஞ்சாவஸ்தைகளும் அடங்கிய குப்பைக்கிடங்கென்பது கன்மதேசிக்கேயென்று ஞானதேகிக்கல்ல. ஞானதேகியோவென்றால் கணபதி,பிரமன், விண்டு, ருத்திரன் மகேசுரன், சதாசிவன் இவர்கள் ஸ்தானமாகிய மூலாதாரம் சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞையென ஆராதாரமும் அறுதேவதைகளும் குய்யம் லிங்கபீடம், உந்திகமலம், இருதயகமலம், கண்டஸ்தானம், லலாடம் இவ்வாறுதேகத்தினிடமாகவே பஞ்சகர்த்தாக்களையும் தெரிசித்து (கண்ணுக்குமிடமெல்லாம் கடவுள்காப்பு) யென்றபடி அவனே தானாய் தானாய்தானாய் தானேயவனாய் இன்பம், துன்பம், நினைப்பு, மறப்பு, பிறப்புயாவுமற்று யெமனைக்கடிந்து முக்காலமும் உணர்ந்து எக்காலுஞ் சாகாதிருப்பர் ஞானதேகியற்கு உட்தோற்றம்.

## ஞானதேகம்.

ஆதிபிர்ம்மம் நகாரமது காலதாகும்
அனாதிபிர்மம் யகாரமது கண்ணேயாகும்
சோதிதிரு மகாரமது வயிறேயாகும்
துலக்கமுள்ள சிகாரமது தோள்கையாகும்

வீதிபெரு வகாரமது வாய்தானாகும்
விமலியுட ஓங்காரம் மூலந்தாங்கும்
ஆதிபரை தசைகூரை புரம்பாற்றுக்கி
அமர்ந்திட்ட கோல்வகை யறிவாருண்டோ.

## தேவஸ்தானம்.

ஆதியப்பா மூலமது ஓங்காரவீடு
அப்பனே நகாரமது பிரமன்வீடு
சோதிபெரும் மகாரமது திருமால்வீடு
துளக்கமுள சிகாரமது ருத்திரன்வீடு
வீதிபெரும் வகாரமது மகேசன்வீடு
வினையகன்ற யகாரமது சதாசிவன்தான்
பாதிமதி யமிர்த்தலை தேக்கும்வீடு
பழுத்தமன மேலோர்க்குப் பதிந்தவீடே.

### பிரியாமை.

குண்டலியாம் மூலசக்தி கணேசனுக்குக்
குதித்தேறும் வாகனமோ ஆருவானாள்
மண்ணுடைய பிரமனுக்கு அன்னமானாள்
மாயவனா ரேறுதற்கு கெருடனானாள்
தெண்டிரையி லீசனுக்கு ரிடபமானாள்
ஜெயம்பெற்ற மயேசனுக்கு யானையானாள்
அண்டசதா சிவத்திற்குக் குதிரையானாள்
அம்மைசிவ காமிவிளை யாடல்காணே.

### சத்தியில் ஒடுக்கம்.

காணென்ற கணபதிக்கு வல்லபையுமானாள்
கலைவாணி யாயெழுந்தாள் பிரமனுக்கு
தேனென்ற திருமாற்கு லட்சுமியுமானாள்
தேவர்கோன் ருத்திரற்கு பார்வதியுமானாள்
ஏனென்றே யீசர்க்கு மகேஸ்வரியுமானாள்
எழுநிலமுங் கடந்தசதா சிவத்தின்பக்கல்
நானென்றே மனோன்மணியா யோங்கினின்றாள்
நாலிரண்டும் சத்தியிட நடனந்தானே

இனி ஆராதாரத்தின் விபரங்காண்க.

## க-வது.

# மூலாதாரம்.




மூலாதாரமென்பது காலெலும்புகள் இரண்டுங் கூடிடவுங் குய்யமாம் குய்யத்திற்கும் குதத்திற்கும் நடுவில் குண்டலிஸ்தானமாகிய மூலாதாரயிடத்தில் அண்டவடிவாகியும் அந்த வடிவத்திற்குள் முக்கோணமாய் முக்கோணத்தினடுவே நான்கிதழுடையஒரு புஷ்பவட்டமாய் அந்த புஷ்பத்தினடுவே ஓங்காரஸ்வரூப வட்டமிருக்கும் அந்த ஓங்காரத்தினடுவில் அகாரம், உகாரமிருக்கும் அகாரத்தின்மீது கணபதியும், உகாரத்தின்மீது வல்லபையும் எழுந்தருளியிருப்பார்கள் குண்டலிவட்டத்திற் றோற்றும் நான்குயெழுத்துகளே நான்குயிதழ்களென்றறிக.

### அதுவே அபானவாய்வுஸ்தானம்.

இந்த அபானவாய்வானது பச்சைநிறமுள்ளதாயும் மேற்படிகுய்யம், சூதம் இரண்டு துவாரங்களுக்கும் முதன்மையாயிருந்து தன் அதிகாரத்தைச் செலுத்திவரும். இந்த மூலாதாரத்திற்கு மேல் நான்கங்குலம் உயர்ந்த ஸ்தானத்தில் சுவாதிஷ்டாணமாம்

உ-வது,

# சுவாதிஷ்டானம்.




சுவாதிஷ்டானமென்பது முன்னுரைத்த மூலாதாரத்திற்கு நான்கங்குலப்பிரமாணம் மேலே விதைத்தண்டின் அடியாயும். லிங்கஸ்தானமுமாகிய யிடத்தில் நாற்சதுரமாயும் இந்த சதுரத்தினடுவில் ஆறு இதழ்களையுடைய ஒரு புஷ்பவட்டமாயும், அந்தபுஷ்பத்தின் மத்தியிலே நங், லங் யென்ற பீஜாட்சரமிருக்கும் நங்யென்ற அட்சரத்தின்மீது பிரம்மாவும், லங்யென்ற அட்சரத்தின் மீது சரஸ்வதியும் வீற்றிருப்பார்கள்.

## இதுவே பிரிதிவுஸ்தானம்.

பஞ்சபூதங்களின் முதன்மையாகிய பிரிதிவுஸ்தானமாயும், பொன்னிறமுடையதென்றறிக. இந்த சுவாதிஷ்டானத்திற்கு மேல் ஆரங்குலப்பிரமாணம் உயர்ந்துநிற்பது மணிபூரகமாம்.

ங-வது,

# மணிபூரகம்.




மணிபூரகமென்பது தேகத்திலுள்ள (கூஅ) ஆயிரத்தெட்டு நாடி நரம்புகளும் சூழ எல்லாநாடிகளுக்கும்வேறுள்ளது. இஃது தொப்புளுக்கு நேரானயிடம் இதை உந்திக்கமலமென்று சொல்லப்படும். அவ்விடத்தில் ஏழாம்பிறைக்கிணங்கிய கோணமும், அதற்கு நடுவில் பத்துயிதழ்களுடைய ஒரு புட்பமும், அந்தபுட்பத்தினடுவில் மங், வங்யென்ற இரண்டு அட்சரங்களிருக்கும் மங் மீதில் திருமாலும், வங்மீதில் லட்சுமியும் யெழுந்தருளி யிருப்பார்கள்.

மகாவிஷ்ணுவும் லட்சுமியும் வீற்றிருக்கும் ஸ்தானமாகிய உந்திக்கமலமே அப்பூதஸ்தானமென்றறியவும். இது பளிங்கு நிறமாயிருக்கும் இந்த மணிபூரகத்திற்கு எட்டங்குலத்திற்குமேல் அனாகதமென் றறியவும்.

## ச-வது,

# அனாகதம்:



அனாகதமென்பது முன்னுரைத்த மணிபூரகத்திற்கு எட்டங்குலம் மேலே இருதயகமலமே அனாகதமென்னுமிடமாம் அந்த இருதயகமலமே தேய்வுஸ்தானமாகும் அந்த தேய்வுஸ்தானத்திற்கு மத்தியில் முக்கோணமிருக்கும் மூக்கோனத்தினடுவில் பன்னிரண்டு இதழ்களையுடைய புஷ்பவட்டமாயிருக்கும் அந்த புஷ்பத்தினடுவில் சிங், ரங் யென்ன இரண்டு அட்சரங்களிருக்கும் சிங்மீதில் ருத்திரனும், ரங்மீதில் பார்வதியும் எழுந்தருளியிருப்பார்கள்.

அந்த இருதயஸ்தானமே சுழுத்திஸ்தானமாயும், அக்கினிநிறமாயுமிருக்கிற 12-இதழ்களுள்ள புஷ்பத்தினிதழ்கள்தோறும் மூன்று அட்சரங்களை மேற்படி சக்கரத்திற் காண்க.

## ரு-வது,

# விசுத்தி.



விசுத்தியென்பது முன் உரைத்த அனாகதத்திற்கு மேல் பத்து விரற்கடை மேலேயுள்ளது விசுத்தியாம் இது கண்டஸ்தானமாயும்அதுவேவாயுவுஸ்தானமாயுமிருக்கின்றது அந்தவாய்வுஸ்தானத்தின் மத்தியில் அறுகோணமாயும் அறுகோணத்தின் நடுவில்பதினாறிதழ்களுடைய ஒரு புஷ்பவட்டமாயும் அந்தபுஷ்பத்தினடுவே வங், யங் யென இரண்டு அட்சரங்களிருக்கும் வங் மீதில் மயேஸ்வரனும், யங்மீதில்மயேஸ்வரியும்எழுந்தருளியிருப்பார்கள் கருநிறமுடையபதினாறு இதழ்கள்தோறுமிருக்கும்அட்சரங்களை மேற்கண்ட விசுத்திசக்கரத்திற் காண்க.

இதுவே வாயுவுஸ்தானமாம் பஞ்சபூதத்தி லொன்றாகியவாய்வானது மகேஸ்வரஸ்தானத்தி லுறைந்துநின்று காலந்தோறும் தனதுதொழில் நடாத்தும்.

---

## ௬ வது.

# ஆக்ஞை.



கஷ்

யங்-ஹங்

ஆக்ஞை யென்பது முன் உரைத்த விசுத்திஸ்தானமாகிய கண்டத்திற்குப் பன்னிரண்டு விரற்கடைக்கு மேற்பட்டயிடமாம் இது முதுகடைவாய் ஓங்கிஎழுந்துநின்று விணுத்தண்டின் முடிவாகியும் நெற்றி இருபுருவத்தின் மத்தியஸ்தானத்திற்குமேற்பட்டபெருவெளியில் பொன்போன்ற பிரகாசமுற்றிருக்கும் புருவவெளியாகிப ஆகாயஸ்தானத்தில் பிறைபோன்றவடிவாகியும்அந்தப்பிறையின் மத்தியில் இரண்டிதழ்கள் விரிந்த புஷ்பரூபமாயும் அந்தப்புஷ்பத்தின் மத்தியில் யங், ஹங் யென்ற இரண்டுஆட்சரங்களிருக்கும் யங் மீதில்சதாசிவனும் ஹங் மீதில்மனோன்மணியும் வீற்றிருப்பார்கள்.

இதுவே ஆகாய பூதஸ்தானம் ஆகாயஸ்தானமும் ஜாக்கிராஸ்தானமாம் புகைநிறங்கலந்ததென்றறியவும்.

# ஆத்மாவுக்கு ஆதாரம்.

இந்தச் சரீரத்தில் ஆத்மாவுக்கு ஆதாரமான கருவிகள் எவையெனில் வலதுசரம், இடதுசரம், நாபி, கண், மூக்கு, செவி, உச்சி இந்த ஏழிடங்களிலும் ஆத்மாவானது ஒன்றைவிட்டு ஒன்றில் மாறிமாறி வியாபித்திருப்பதற்குத் தூலமாகிய உடம்பையே மார்க்கமாகக்கொண்டு உலாவிவருகின்றது.

## தேவதைகள்.

| | |
|---|---|
| வலதுசரத்திற்கு தேவதை | சூரியன் |
| இடதுசரத்திற்கு தேவதை | சந்திரன் |
| உடம்பிற்கு தேவதை | மகேசுரன் |
| நாபிக்கு தேவதை | விஷ்ணு |
| கண்களுக்கு தேவதை | ருத்திரன் |
| மூக்கிற்கு தேவதை | பிரமன் |
| காதுகளுக்கு தேவதை | சதாசிவன் |
| உச்சிக்கு தேவதை | பரமசிவன். |

# உடலில் மகம்மேரு.

இந்தச் சரீரத்தினிடத்தில் கொடிமுடி, அஷ்டவெற்பு, நிராதாரம், முப்பாழ் இவைகள் எங்ஙனமென்று விசாரிக்குமளவில் கணபதியும், குண்டலிசத்தியும் வாசஸ்தானமாகிய முதலாவது மூலாதாரந்துடங்கி சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்ஞை இந்த ஆறு ஆதாரங்களும் ஊடுருவி கடந்து நின்ற சுழிமுனை நாடியே மகம்மேரு அந்தநாடியின் அந்தமே கொடிமுடி, அஷ்டவெற்பு, நிராதாரம் ஆக்கினை முதலுள்ள மூன்றுஸ்தானங்களையும் சிவப்பாழ், சத்திபாழ், பெரும்பாழ் எனக் கூறுவதாம்.

## மண்டலம்.

இந்தச் சரீரத்தில் மண்டலம் மூன்றென்பது எவையென்று விசாரிககுமளவில் முதலாவது மூலாதாரம் முதல் மூன்றுவதாகிய மணிபூரகம்வரையில் அக்கினிமண்டலம் திருமாலும் லட்சுமியும் வாசமாயிருக்கும் மேற்படி மணிபூரகம் முதல் அனுகதம்வரையில் ஆதித்தமண்டலம் ருத்திரனும் பார்வதியும் வாசமாயிருக்கும் மேற்படி அனுகதம் முதல் ஆக்ஞைவரையில் சந்திரமண்டலமாம்.

## பஞ்சபூத ஸ்தானம்.

| | | |
|---|---|---|
| பிரம்மஸ்தானமாகிய | சுவாதிஷ்டானத்தில் | பிரிதிவு |
| விஷ்ணுஸ்தானமாகிய | மணிபூரகத்தில் | அப்பு |
| உருத்திரஸ்தானமாகிய | அனாகதத்தில் | தேய்வு |
| மகேஸ்வரஸ்தானமாகிய | விசுத்தியில் | வாய்வு |
| சதாசிவஸ்தானமாகிய | ஆக்ஞையில் | ஆகாயம் |

இவ்வாறு பஞ்சபூதங்கள் உறையுமிடமாம்

இனி தத்துவங்கள் தொண்ணூற்றாறின் விவரத்தை நோக்கிச் சொல்லுமிடத்து விரிந்து பெருநூலாய் முடிவதன்னியில் நாம்கொண்ட கருத்துக்குதாரணம் நெருக்கத்தில் முடியாது.

(நாம்கொண்ட கருத்துயாதென்றால்) சரீரசாஸ்திரமென்னும் இந்நூலை ஆரம்பிக்கும்போதே மனிதருக்கு நூறுவயதென்று பலராலும் சொல்லக்கேட்டும் பல புராணங்களிலும் அவ்வாறே அளவு முடிவுகட்டியிருக்கிற கெர்ப்பத்தில் உற்பவமானது முதல் நூறாண்டிற்குள் இன்னகாலமென்று நிச்சயமின்றி நிரியாணம் சம்பவிப்பதையும் கூன், குருடு, செவிடுமுதலிய அங்கப்பழுதான பிறவியாவதும் மூர்க்கன், மூடன், ஞானி, யோகி, தவசி, சன்யாசி, தரித்திரன், செல்வன் இவ்வித பேதப்படுவதேதென்றும் இந்நூல் துவக்கும்போதே விசாரித்தோமாகில் அதேவிசாரணையில் நின்று சந்தேகநிவர்த்தி செய்துக்கொள்ளலாம். (இவை நிற்க.)

### உடல் முதலிய சத்ததாதுக்களின் நிறை.

| | | |
|---|---|---|
| உடல்கூடிய நிறை | பலம் | 1000 |
| மூளைகள்யாவுங் கூடிய நிறை | ,, | 100 |
| குடல்கள்யாவுங் கூடிய நிறை | ,, | 45 |
| பற்கள்யாவுங் கூடிய நிறை | ,, | 4 |
| ஈரல் | ,, | 8 |
| தசையாவுங் கூடிய நிறை | ,, | 600 |
| உப்பு | ,, | 5 |
| மச்சை | ,, | 4 |
| அஸ்திகள்யாவுங் கூடிய நிறை | ,, | 320 |
| நாடி நரம்புகள் கூடிய (எண்) தொகை | | 72,000 |
| ரோமங்கள்யாவுங் கூடிய தொகை | | 350-லட்சம். |

சரீர எவ்வனகாலத்தின் நிறைகணக்கு.

விருத்தம்.

ஒன்றிரண்டு திங்களினில் கருவூரி
ஒருமூன்று திங்களிலே ரூபமாகி
கன்றுசது ரஞ்சிலிரு மூன்றில்தானும்
கருத்துடனே யிடைநாசி மார்புமாகி
என்றுரைத்த வேழுதிங்க ளெட்டுக்குள்ளே
எண்ணரிய நாதவிந்து வுருவேயாச்சு
அண்டபிண்ட வகண்டமதா யமைந்தேயானும்
அலங்கார வீடாகச் சமைந்தேனண்டே.
நாலாச்சு ஆராச்சு விரைந்தாச்சு
நலமான வீராறு மீரெட்டாச்சு
மேலான விரண்டாச்சு யிதற்கப்பாலும்
வெளிகடந்து ஒன்றாச்சு உருவமாச்சு
காலாச்சு கையாச்சு வயறுமாச்சு
கட்டியொரு வீடாகச் சமைந்தவாறு
சீலமுள்ள சிங்கார விகிதவீட்டில்
சித்திரத்தின் பதுமையைப்போல் ஜெனித்தேனண்டே.

## சுக்கில சுரோணித அளவு.

புருடனும் மனைவியும் கலவியிற்றோயுமிடத்து புருடவஸ்துவாகிய சுக்கிலம் அதிகமாயின் ஆண்சிசுதரிக்கும், பெண்வஸ்துவாகிய சுரோணிதம் அதிகமாயின் பெண்சிசுதரிக்கும், சுக்கிலமும் சுரோணிதமும் ஏறக்குறைவின்றி சமமாய் நிலைக்குமாயின் ஆண் பெண்ணல்லாத அலியாய் தரிக்கும், கருக்குழியினிடமாக சுக்கிலமும் சுரோணிதமும் மிசிரமாகும்போது பிராணவாய்வு மோதி இரண்டாய்ப் பிளக்குமாயின் இரட்டைபிள்ளையாகப் பிறக்கும் சுக்கிலமும் சுரோணிதமும் மிசிரமாகாமுன் பிராணவாய்வு தாக்கிப்பிறக்குமாயின் ஆண் ஒன்று, பெண் ஒன்றுமாய் இருபிள்ளைகளுதிக்கும். இதுவன்றி இன்னுமொருபிரமாணமுண்டு அதாவது, புருடனும் பாரியாளுங்கூடி உறவாடி நாதவிந்து கருக்குழியில் உதிக்கும்போது சுவாசமானது இடகலையில் மோதினல் பெண்ணாகும், பிங்கலையிலோடினல் ஆணாகும், இருகலையும் சமகுணமாய்சுழிமுனையோடினல் பெண்ணும் ஆணுமாய் இரட்டைப்பி

ள்ளைபிறக்கும் சூரியகலையோடும்போது வாய்வுசேர்ந்தால்இரண்டு ஆணுய்ப்பிறக்கும் சந்திரகலையோடும்போது வாய்வுசேர்ந்தால் இரண்டும் பெண்ணுய்ப்பிறக்கும் புருடனும் ஸ்ரீயும்புணரும்போது வாதநாடி கதித்துயோடினுல்வாதேகியாகவும்,பித்தநாடி கதித்தோடினுல் பித்ததேகியாகவும், சிலேத்துமநாடிகதித்தோடினுல் சிலேத்துமதேகியாகவும் சிசுக்களுதிக்கும்.

## உருவமமையும் விபரம்.

ஸ்ரீயும் புருடனுஞ்சேர்ந்து உறவாடும்போதில்சித்தமழிந்து சிதறியோடும நாதமானது கருக்குழியில் தோயும்போது ஜீவனுனதுபொருந்தி அவரவர்செய்த கன்மவினைக்கீடாய் அவளாற்றுங்குதல் பெற்ற ஒரு கணப்போதில் இரண்டு திரிசரேணுகொண்டபருமனுகும், ஒருநாழிகைப்போதில் ஒருபேணளவு வடிவமாம், இப்படியே ஏறிஏறி ஒருதினம்செல்லுமளவில் குண்டுமணிபோல் திரண்ட உருவமாம், ஐந்துதினத்தில் நீர்க்குமிழிபோலாகும், ஏழுதினத்தில் இமை ஊனுய்த்திரளும் பதினுலுதினத்தில் சென்னீராகும் இருபத்தைந்து தினத்தில் பீஜம் சற்றுதோற்றமாகும் திங்களொன்றில் சிரசு-கண்டம்-பிடரி-முதுகெலும்பு இவைபிரிவினையாய்க்காட்டும் இரண்டாந்திங்களில் கரம்-பாதம்-உள்ளங்கால் விலாப்புரம் இவையுருப்பமையும், மூன்ருந்திங்களில் ஒன்ருேடொன்று ஒட்டும்தலங்கள் பொருந்தும் நான்காம் திங்களில் விரல்-முகம்-நாசி-கன்னம்-விபரமாகத்தோற்றும், ஐந்தாம் திங்களில்குய்யம் விரல்கடோறும் நிகம்-தந்தம் இவைகளமையும், ஆறாந்திங்களில் காதுத்துவாரம் அமையும், ஏழாந்திங்களில் உபத்தம் லிங்கம்-தொப்புள்-குதம்-இந்நான்கு துவாரமும் அமையும், எட்டாந்திங்களில் கபாலப்பிறப்பில் ரோமங்களும் மற்றவவயவங்களும் பிராணுதி பஞ்சகமென்ற வாய்வுகளும் தீர்க்கமாய்ப் பொருந்தும்.

## கெற்ப சிசுவுக்கு.

மாதாபுசிக்கும் அன்னபாஞுதிகளின் சாரமானது கெற்பத்திலிருக்கும் சிசுவினதுநாபி துவாரத்தின்வழியாக வயிற்றுக்குட்சென்று சிசுவைப்போஷித்து உடலைவளரச்செய்யும் அன்னசாரமானது சிசுவின்வயற்றில்பொருந்தத்துவாகிய முதல்மனம் புத்தி சித்தம் அகங்காரமென்ற அந்தக்கரண சந்துஷ்டிய முதித்து அதினுல் ஜீவனுனது சுகதுக்கங்களை யனுபவித்து பின்னும் பூர்வ

ஜென்மங்களில்செய்த பாவபுண்ணியங்களை தன்புத்தியினிடமாய் சொற்பனம்போல் தோன்றியரியவும், மாதாபுசிக்கும் அறுசுவைகளில் புளிப்பினுல்-மச்சையும், உப்பினுல்-எலும்பும் வளருமாம். கைப்பினுல்-பேதையும், காழத்தால்-தாரையும், துவர்ப்பால்-இரத்தமும் மதுரத்தால்-சுக்கிலமும் உண்டாகுமாம்.

பத்தாவது திங்கள் பூரணமானவுடன் வியானனென்ற வாயுவானது சிசுவின் உடலை மடக்கித்தலைகீழாய்த்தள்ளும் அப்போது சிசுவானது தன்பெலன் குருகி மயங்கி ஆலையில் அகப்பட்ட கரும்புபோல மாதாவின் யோனியந்திரத்தால் நெருக்கப்பட்டு அதோமுகமாய் பூமியைநோக்கிப்பிறக்கும் ஆத்துமாவானது இந்த தூலதேகத்தைத் தானென்றபிமானித்து இருவினைக்கிடாக இன்பதுன்பங்களை யனுபவித்து முடிவில் தூலத்தை வீழ்த்தி வெளியோடு கலக்கும்.

---

விருத்தம்.

உண்மையெனுங் கருவிகள்தான் தொண்ணூற்ருறும்
　உடலெடுத்த நேர்மையெல்லா முறையாய்ச்சொன்னேன்
நன்மையுள்ள நாதவிந்து கூடும்போது
　நல்வினையுந் தீவினையு மமைந்தவாறும்
தன்மையுள்ள செகச்சோதி வகுத்தவீட்டில்
　சமைந்திருந்த மைந்தருக்கு வயதுஞ்சொல்ல
வண்மையெனு மம்பிகைப்பெண்ணருளினுலே
　வசனித்தே னறிந்தமட்டும் வசனித்தேனே. (க)

ஊனெடுத்து வுலகுக்கு ளுதித்தபாலர்
　ஒருமூன்று திங்களினில் மடிந்தவாறும்
கூனுடனே குருடுசெவி டானவாறுங்
　குறைந்துகைகால் சப்பாணியானவாறும்
வானெடுத்து வாறுதிங்கள் மடிந்தவாறும்
　வளர்பத்து திங்கள்சென்று மாண்டவாறும்
தானெடுத்துப் புவிதனிலே பிறந்தவாறும்
　சவமாகி நின்றதுவுஞ் சாற்றுவேனே. (உ)

பத்துவய தானபின் பிறந்தவாறும்
  பருவத்தில் பதினைந்தில் மடிந்தவாறும்
மற்றுமொரு விருபதிலே மாய்ந்தவாறும்
  மருவிருபத் தஞ்சதிலே மடிந்தவாறும்
சித்ததீத முப்பதிலே செடமுமாய்ந்து
  செப்பிடில் முப்பதுவுமஞ்சில் செத்தவாறும்
உற்றதொரு நாற்பதிலே யுயிர்போமாண்டும்
  உயர்கின்ற வைம்பதிலே யுடல்வீழ்வாறும். (௩)

அன்னையெனுங் கருவதனி லுதித்துப்பாரி
  லவதரித்து ஐந்துபத்தி லிருந்தவாறும்
வின்னமா மறுபத்தில் மடிந்தவாறு
  மிகவருபத் தஞ்சதிலே மாய்ந்தவாறும்
இன்னவிதமெழுபதிலு மிறந்தவாறும்
  யேழுபத்தஞ் சதனில் மாண்டவாறும்
சொன்னவித மெண்பதனிற் சொக்கும் வாறு
  தொண்ணூறுஞ்சென்றபின்புஞ் சொல்வேனுண்டே. (௪)

பூவாகிப் பிஞ்சதிலே மடிந்தவாறும்
  பூத்துமலர் காயாமல் போனவாறும்
மாவாகிக் கருக்குழியில் கறைந்தவாறும்
  மரக்கொடியோ டேமடிந்து காய்ந்தவாறும்
மேவிநின்று விரைப்பழுதாய் போனவாறும்
  விரைத்தவிரை மூளைத்துமுளை வித்தவாறும்
பாவாகி யஞ்சதிலே பூட்டிநெய்து
  படைத்தகரு விபரமினி பகர்வேனுண்டே. (௫)

மருவுயருங்க லைநகர மகண்டவீதி
  மறையிலகுந் திரைகடந்து நாதவிந்து
உருவுயர்ந்த பதிமூன்றுங் கோட்டின்மேலே
  ஓங்கியொரு துளியிரங்கித் திரண்டுமேவி
கருவளர்ந்து பெருநதிக் கப்பாலேதான்
  கனகரத்ன வீட்டிலொரு வீடுகட்டி
குருவிருந்த மண்டபத்தில் குடிதானேறி
  கூடிநின்ற குறிகளெல்லாஞ் சொல்வேனுண்டே. (௬)

## வயதின் அளவு.

ஆணும் பெண்ணுங்கூடிக்குலாவி யுரைந்து நெஞ்சழிந்து நாத விந்தானது மங்கையினது கருக்குழியில் உதிக்கும்போதுபி ராணவாய்வானது லிங்கபீடமாகிய சுவாதிஷ்டானத்தில் உ ரைந்திருக்கும் பிரிதிவினிடமாக மோதியெழுந்து பதினாரங் குலத்திற்குக்குறையாமல் ஒன்றரை நாழிகைவரையில் ஓடிக் கொண்டிருந்தால் வயது. 100

ஆணும் பெண்ணுங் கூடும்பொழுது பிராணவாய்வானது மேற் படி பிரிதிவுஸ்தானத்திலிருந்து உந்திக்கமலமும் மணிபூரக முமாகிய அப்புஸ்தானத்திற்குப்பாய்ந்தால் வயது. 150

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது மேற்படி அப்புஸ்தானத்திலிருந்து அபானவாய்வோடுகூடி பதினெட் டங்குலம் வோடினால் வயது. 90

ஆணும் பெண்ணுங்கூடும்பொழுது பிராணவாய்வானது அப்பு ஸ்தானத்தில் பதினாறு அங்குலத்திற்குக்குறையாமல் ஒன்ற ரை நாழிகைவரையில் ஓடிக்கொண்டிருந்தால் வயது. 80

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது மணிபூ ரகஸ்தானமாகிய அப்புவில் பாய்ந்து அபானவாயுவைக் கல ந்துபனிரெண்டங்குலம் வரையிற் பாய்ந்தோடினால் அதற்கு வயது. 70

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது இருதய கமலமென்னும் அனாகதமாகிய தேய்வுஸ்தானத்திலிருந்துஒ ருநாழிகைவரையில் பத்தங்குலத்திற்குக்குறையாமல் ஓடிக் கொண்டிருந்தால் வயது. 60

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது ஆக்ஞை யென்னும் ஆகாயஸ்தானத்தினின்று கூர்மன்,கிருதரன் என் ற வாய்வுகளோடு கூடி ஏழங்குலம்வரை அரைநாழிகை பரி யந்தம் ஓடினால் வயது. 40

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது ஆக்ஞை யென்னும் ஆகாயஸ்தானத்தினின்று அரை நாழிகைவரை யில இரண்டங்குலம் ஓடினால் வயது. 38

ஆணும பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது விசுத்தி யில்நின்று வியானவாயுவோடுகூடி ஒன்பதங்குலம் ஓடினால் வயது 35

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது கண்ட ஸ்தானமாகியவிசுத்தியில் உரையும் வாய்வுஸ்தானத்தில்நின் று முக்கால்நாழிகைவரையில் ஒன்பதங்குலம் ஓடினால்வயது 30

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது தில்லை யென்னும் சுழியில் அடங்கிநின்றால் வயது. 25

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது இடை யின் இருபாரிசமும் விட்டு ஏறினால் 20

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது சுழியை விட்டு இடத்திற் பாய்ந்தால் வயது 16

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது உந்திக் கமலமாகிய மணிபூரகத்தில் நின்றால் வயது. 10

ஆணும்பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது குண்டலி யை முட்டியோடினால் வயது. 8

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது மூலத் தில் சுழித்து சிதறியோடினால் வயது. 5

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது மூலத் தில். நின்றுவிடில் வயது. 3

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது மூலத் திலோடினால் வயது. 2

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது ஆக் ஞை யென்னும் ஆகாயஸ்தானத்தினின்று தீவிரமான ஓட் டத்தில் நின்றால் மாதம் 1½

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது மேற்கு றித்தயிடத்தில் பத்தங்குலம் ஓடி நாலங்குலம் கழித்தால் வயது கொஞ்சம்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது சிதறி யோடினால் செற்பமுண்டாயிருந்து முடிவில் அழியும்.

ஆணும் பெண்ணுங்கூடும்போது இருதயமாகிய தேய்வுஸ்தானத்தில் பிராணவாய்வுமோதி அத்துடன் அபானவாய்வுங் கூடி எட்டங்குலம் பாய்ந்து இரண்டங்குலங்கழிந்து ஆறங்குலந்திரும்பி உள்ளடங்கினுல் கருப்பப்பையில் குத்தலுண்டாகி கருவழியும்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது தேய்வுஸ்தானத்தில் பிராணவாய்வுயிருந்து அத்துடன் அபானவாய்வுகூடியோடினுல் கருப்பம் அழியும்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது பிராணவாய்வானது குறுக்கே சுழண்டிருக்குமாகில் (9) மாதத்தில் கெற்பமழியும்.

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது ஆக்ஞையென்னும் ஆகாயஸ்தானத்தினின்று சக்கரம்போல சுழன்றுவோடினுல் (4) மாதத்தில் கெற்பமழியும்.

ஆணும் பெண்ணுங்கூடும்போது பிராணவாய்வானது உந்திக்கமலமாகிய மணிபூரகத்தில் உயர்ந்து நெட்டினுல் (1) மாதத்தில் கெற்பமழியும்.

---

## மற்றவயதின் மர்மம்.

இங்ஙனம் உரைத்துவந்தவயதிலும் இன்னம் பலவாறு ஏற்றமும் குறைவுமான வயது அமைவதுண்டாகையால் மேற்குறித்த பூதங்களுடனும் பொறிகளுடனும் பிராணவாய்வானது சஞ்சரிக்கும் சமயமானது ராசி கிரகம் நட்சத்திரம் இவைகட்குரிய பாதம்போல் பலன்கொடுக்கும்வாறு விந்துபாயும்சமயம் யெந்த பாதமோ அவற்றிற்குரியபடியே இன்னும் அனேகவித ஏற்றக்குறைவான வயதளவு பேதப்பட்டமையென்றறிக.

## விருத்தம்.

இப்படியே விழிமடவார் கெற்பத்துள்ளே
யினிவளர்ந்த நேர்மையெல்லா மியம்புங்காலே
எப்படியும் தப்பிதங்க ளினிவராமல்
என்னுலே யறிந்தமட்டு மியம்பினேன்காண்

சொற்படியுஞ் சுழிமூல வீட்டுக்குள்ளே
துகையான கருவிநின்ற சூட்சாசூட்சம்
இப்படியே வகுத்துரைத்த மைந்தர்க்கெல்லாம்
இனியமையு முறைபுவியி லியம்புவேனே. (க)

பத்தான திங்கள்சென்று பிறந்தபாலன்
பாக்கிய மனுபவித்து பரதேசியாகி
விஸ்தார மானபரி கரியுமேறி
விட்டகுறை தவிர்ந்துடனே யிரந்துவுண்ணும்
அஷ்தான திரவியத்தில் வாய்ந்துமாறி
அதுகடந்து ஐயமெடுத் ததுவுமுண்டு
சித்தாடுகின்றசிவ யோகியாகித்
திரிந்தவகை யறிந்தமட்டுஞ் செப்புவேனே. (உ)

ஒருத்தனவன் கருத்தாலே யுலகமாள்வான்
உகந்துலகில் மாழ்ந்துயிரந் துண்டுவாழ்வான்
பெருத்தொருவன் புவியாசைப் பிறித்துக்கொள்வன்
பிராணன்வெறுத் தகமீறிப் பிதிர்களாவன்
துரத்தினங்கள் செய்துபெருஞ் சிவிகையேறி
சுவைமாறி சிவயோகஞ் செய்துவாழ்வன்
வெறுத்திந்தச் சபைதனிலே யாண்டேகேளீர்
விவரமெல்லாம் வெளியாக விளம்புவேனே (ஙு)

சுந்தரஞ்சேர் நாதவிந்து மூலந்தன்னில்
துளிபருகி யொருபடையி லோடும்போது
அந்தமில்லா முகப்பேத மானவாரும்
அழகுவஷ்ட அயிஸ்பரிய மமைந்தவாறும்
சந்ததமு முரைத்தவர்கள் கற்றவாறும்
சந்நியாசி தவசிகளாய்ச் சார்ந்தவாறும்
கந்தமலர்ப் பூங்குழலை வெறுத்துநின்ற
காரணத்தை யின்னதென்று கருதுவேனே. (ச)

அறிவறிந்து மனுயோகஞ் செய்யாமாண்பர்
ஆதிவிந்து நாதமென்று மறியாமாண்டார்
கருவறிந்து பொறியடங்கிச் சித்தரானார்
கருத்துமனம் ரெண்டாகி யோகியானார்

திரமுடனே சேராமல் ஞானியானர்
தேசமதில் பூசைசெய்யுஞ் சைவரானர்
குருவுடனே சீஷனென்று மிருவரானர்
குறிப்பறிந்து பிண்டமதிற் கூறுவேனே. (ரு)

அலையாமல் பசியறிச்து வுண்ணும்பேரும்
அனுதினமுந் துயரமதி லழுந்தும்பேரும்
நிலையாமல் நினைவுதடு மாறும்பேரும்
நித்திரையில் பயந்தெழுந்து நின்றபேரும்
துலையாம லுலகமெல்லாந் திரிந்தபேரும்
சோர்ந்துமொரு சந்ததினில் மடிந்தபேரும்
அலையாமல் போர்களத்தில் செயித்தபேரும்
வகுத்தவிந்தி லுதித்தவகை வசனிப்போமே. (சு)

மந்திரங்கள் கல்விமிகக் கற்றபேரும்
மகத்தான சாஸ்திரங்கள் வகுத்தபேரும்
சிந்தையெனுங் கிரியைதனி லிருந்தபேரும்
ஜெகஜால மறிந்துலகில் வாழ்ந்தபேரும்
அந்தமெனும் யோகமதி லடர்ந்தபேரும்
அனுதியெனும் யோகமதி லடர்ந்தபேரும்
இந்தவகை யிப்படியே யானவாறும்
எனையீன்ற குருவருளா லியம்புவேனே. (எ)

## நாதமுதிக்கும்போதே

# இகபரயோக அமைப்பு.

ஆணும் பொண்ணுங்கூடி அனுபோகிக்கும்போது வலது நாசியில் ஒடும் சூரியகலையும் இடதுநாசியில் ஒடும் சந்திரகலையும் அளவுகுறையாமல் இருகலையும் பூரணமாயோடிக்கொண்டிருக்க அச்சமயம் கருக்குழியினிடமாக நாதந்தாக்குமாயின் அந்தப் பிள்ளை நல்லவிவேகியாகவும் யோக்கியவானுகியும் பூரண ஆயுசுள்ளவனுயு மிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி நாதவிந்தானது கருப்பையிலுரையும் போது சூரியகலை ஒருபங்கும் சந்திரகலை இரண்டுபங்குமாக ஓடினுல் அங்கனமுதிக்கும் சிசுவானது தரித்திரவானுகவேயிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி கருக்குழியினிடமாக சுக்கிலமணுகும் போது சூரியகலை இரண்டுபங்கு சந்திரகலை ஒருபங்கு ஓடினுலும் அந்த சிசுவானது தரித்திரனாகவே யிருப்பான்,

ஆணும் பெண்ணுங்கூடி கருக்குழியினிடமாகநாதமுதிக்கும்போது சூரியகலையும் சந்திரகலையும் பிரியாமல் கலைநாலும் வளர்ந்தோடினுல் யோகவானுயிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடும்போது சந்திரகலை ஐந்தங்குலம் வளர்ந்தோடினுல் திரண்டசெல்வமும் யோகவானுமாய் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலையானது ஆறங்குலம் வளர்ந்தோடினுல் காணி, பூமி முதலிய நிலப்பலனுடையவனுகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலையானது ஏழங்குலம் எட்டங்குலமுமாய் வளர்ந்தோடினுல் மிகுந்த செல்வம் தழைத்து வாழ்பவனுய்ப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடும்போது சந்திரகலை ஒன்பதங்குலம் வளர்ந்தோடினுல் இராஜாங்கயோக முடையவனுகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை பத்தங்குலம் வளர்ந்தோடினுல் அஷ்டமாசித்துடையவனுகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை பதினேரங்குலம் வளர்ந்தோடினுல் சிவயோகியாகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடும்போது சந்திரகலை பன்னிரண்டங்குலம் வளர்ந்தோடினுல் துரைத்தன அதிகாரமுடையவனுகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை பதிமூன்றங்குலம் வளர்ந்தோடினுல் மந்திரிதத்துவம் பெற்றவனுகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை பதினன்கு அங்குலம் வளர்ந்தோடினுல் ஞானியாகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது சந்திரகலை பதினைந்தங்குலம் வளர்ந்தோடினுல் சாந்தகுணமுடையவனுகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங் கூடும்போது பூர்வ புண்ணியவசம் முன்னே வந்து கிட்டி சந்திரகலையானது பதினறங்குலம் பூரணமாய்

வளர்ந்தோடினால் உலகமுழுதும் அரசாட்சிசெய்யும் சக்கிர வர்த்தியாகப் பிறப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி இன்பமேலிட்டு கருக்குழியினிடமாக நாதவிந்துபாயும் சமயத்தில் வளர்பிறைபோன்று வளர்ந்தோங்கி (பூரிக்கையில்) திரும்ப உள்ளுச்சுடங்கையில் பதினுறில் ஒருகலை குறைந்தால் தவசியாகயிருப்பான்.

ஆணும் பெண்ணும் கூடிக்குலாவி நாதவிந்தானது கருக்குழியில் பாயும்போது இரண்டு கலை குறைந்தால் அங்ஙனம் தரிக்கும் சிசுவுக்கு பாதிநாளிற் செல்வங்குறைந்து தரித்திரமனுகும்.

ஆணும் பெண்ணுங்கூடி கருக்குழியினிடமாக சுக்கிலம் தாக்கும் போது மதியானது மூன்றுகலைகுறைந்தால் அங்ஙனம் தரிக்கும் சிசுவானது பரதேசியாவான்.

ஆணும் பெண்ணுங்கூடி கலவியில்தோய்ந்து கருக்குழியில் விந்து பாயும்போது சந்திரகலையானது நான்குகலை குறைந்தால் அப்போது தரிக்கும் சிசுவானது ஆண்டியாவான்.

ஆணும் பெண்ணுங்கூடி சுரோணிதப்பையில் சுக்கிலம் பிரயோக மாகும்போது சந்திரகலையானது ஐந்துகுறைந்தால் அப்போது தரிக்கும் சிசுவுக்கு செல்வமட்டாகி சமவாழ்க்கை யுடையவனுகயிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி கருக்குழியில் நாதமுதிக்கும்போது சந்திரகலையானது ஆறுகுறையுமாயின் அப்போது தரிக்கும் சிசுவு சந்நியாசியாவான்.

ஆணும் பெண்ணுங்கூடி கருக்குழியினிடமாக சுக்கில முதிக்கும் போது சந்திரகலையானது ஏழு குறையுமாயின் அப்போது தரிக்கும் சிசுவு ஆயுள்மட்டும் தரித்திரனுகயிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி சுகமனுபவித்து சுக்கிலம் பாயும்போது சந்திரகலையானது எட்டு குறையுமாயின் அப்போது தரிக்கும் சிசுவு உடல்பருத்த ஸ்தூலதேக முடையவனுகயிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி அன்னையின் கருக்குழியில் நாதம் பலிக்கும்போது சக்திரகலையானது ஒன்பது குறையுமாயின் அப்போது தரிக்கும் சிசுவு ஐயமெடுத் துன்பவனுவான்.

ஆணும் பெண்ணுங்கூடி விந்தணுகும்போது சந்திரகலையானது பத்து குறைங்கால் அப்போதுதரிக்கும் சிசுவு ஆயுசு முடிவு மட்டும் தரித்திரனுகவே யிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி அன்னையின் கருக்குழியினிடம் விந்து அணுகும்போது சந்திரகலையில் பதினென்று குறைந்தால் மிடியனுகயிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி அன்புமேலிட்டு சுக்கிலம் பாயும்போது சந்திரகலையானது பனிரெண்டு குறைந்தால் அப்போது தரிக்கும் சிசுவு நாற்பதாமாண்டில் சித்தனுவான்.

ஆணும் பெண்ணுங்கூடி இன்பத்திலாழ்ந்து கழிக்குழியில் நாதம் பாயும்போது சந்திரகலை பதின்மூன்றுகுறைந்தால் அப்போது தரிக்கும் சிசுவு சிலகாலம் செல்வனுயும் சிலகாலம் தரித்திரனுயுமிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி சுகத்தில்மூழ்கி கருப்பக்குழியில் நாதம் நடக்கும்போது சந்திரகலை பதினன்குகுறைந்தால் அப்போது தரிக்கும் சிசுவு சமசவுக்கிய முடையவனுகவும் வேகநூல் பார்ப்பவனுகவுமிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி கலவியிற்றேய்ந்து கருக்குழியில் விந்து பாயும்போது சந்சிரகலை பதினைந்து குறைந்தால் ஓர் குருவுக் குசீஷனுகயிருப்பான்.

ஆணும் பெண்ணுங்கூடி இன்பமேலிட்டு கருக்குழியில் நாதம் பலிக்கும்போது சந்திரகலை பதினறு குறைந்தால் அந்த சிசுவு தரித்திரனுகயிருப்பான்.

## அங்கப்பழூது.

வையமெனும் பதினலு வுலகுக்குள்ளே
வகுத்தெழுந்த ஜாதிகுலம் ஆண்பெண்ரெண்டும்

சையோகஞ் செய்கையிலே நாதவிந்து
தரித்தகெற்பந் தனக்குவய துரைத்தேன் முந்தி
குய்யமெனும் வச்சிரப்பை தனில்வளர்த்த
குழவியர்க்கே வயதுநின்ற குறியுஞ்சொன்னேன்
மெய்யனவே யோடுகளை நாலினாலே
விளைகின்ற பொருளையெல்லாம் விளம்புவேனே. (க)

சுழியெழுத்து மரியெழுத்து மிரண்டுங்கூடி
சுக்கிலமே சிவாயமென்று சொல்லும்போது
கழியெழுத்து நாலதினு லுலகமாச்சு
கனகசெக சாலமெனுங் காட்டிவைத்து
வெளியெழுத்தாம் அவ்வதிலே உவ்வுங்கூட்டி
விளங்குகின்ற குண்டலியி லுதிக்கும்போது
குழியெழுத்தில் வளருகின்ற மைந்தர்க்கெல்லாம்
குருடுசெவி டானவகை கூறுவேனே. (உ)

தப்பாது கருவூரின் வெளியிலேதான்
தாண்டியுயர் நாதவிந் துதிக்கும்போதில்
வெப்பதித சப்பாணி நொண்டியாக
விதிக்கின்ற கருவியிலே விளங்கும்வாறு
வெர்ப்பதித வொருகாலு மொருகைநொண்டி
யோங்கியொரு புறமுமுட லுதிக்குநேர்மை
கற்பான கலைநாலில் வகுத்துநின்ற
கருத்தையுமே யின்னதென்று காட்டுவேனே. (ங)

---

அங்கப்பழுதாய்

## பிறத்தலுக்குக் காரணம்.

மங்கையும் புருடனும் மருவியணைந்து நாதவிந்து கலிதமாகும் போது தோத்திரமென்னும் செவியானது தொக்குயென்னும் உடம்புடன் துடராமல் வேறுநோக்கத்தில்துண்டித்திருந்தால் அப்போது தரிக்கும் சிசுவுக்கு உடல் வேற்றுமையாய் வேறு கூறாய் விகாரமாயிருக்கும்.

மங்கையும் மன்னனும் மருவியணைந்து கருக்குழியினிடமாய்நாத விந்து பாயும்போது சட்சுயென்னும் கண், சிங்குவையென்னும் நாக்கு, ஆக்கிராணமென்னும் மூக்கு, இம்மூன்றும் தூலமாகிய உடலிற் பொருந்தாமல் வேறு நோக்கத்திற் பாய்ந்திருந்தால் அச்சமயத்தில் தரிக்கும் சிசுவுக்கு, நாக்கு மூக்கு அல்லது கண், இவைகளிலொன்று பழுதாயிருக்கும்.

மங்கையும் மன்னனும் உரவாடி மருவியணைந்து நாதங்கலிதமாகும்போது சத்தம் என்னும் செவியின்கூறும் பரிசமென்னும் உடம்பின் உயிர்க்கூறும் உருவம் யென்னும் கண்ணின் உயிர்க்கூறும் இம்மூன்றும் உடலிற்பொருந்தாதிருக்குமாயின் அப்போது தரிக்கும் சிசுவு செவிடு, குருடு, அல்லது ஊமையாயிருக்கும்.

மங்கையும் மன்னனுங் கூடிவிளையாடி மனமழிகிக் கருக்குழியில் விந்துபாயும்போது (புத்தி, இரசம், கந்தம்,) இரசமென்னும் நாவின் உயிர்க்கூறு, கந்தமென்னும் மூக்கினுயிர்க்கூறு, இம்மூன்றும் ஒன்றோடொன்று சேராமல் விகாரித்திருந்தால் அப்போது தரிக்கும் சிசுவு நாவில் உருசியும் மூக்கினல் மணமறியயேது வில்லாதவனுயிருப்பான்.

மங்கையும் மணவாளனும் மருவியுரவாடி கருக்குழியில் சுக்கிலந்தோயும்போது பாதமென்னுங்கால், பாணியென்னுங்கை, உபத்தமென்னுங் குறி, இம்மூன்றும் உடலின் உயிர்க்கூறுடன் சேராதிருந்தால் அப்போது தரிக்கும் சிசுவுலிங்கச்சுரணையற்றவனுகயிருப்பான்.

மங்கையும் மன்னனும் மருவியணைந்து சுக்கிலப்பிரயோகமாகும்போது வசனமென்ற வாயின் உயிர்கூறு கமனமென்ற காலின் உயிர்கூறு, தானமென்ற கையினுயிர்கூறு, இம்மூன்றும் தூலமாகிய உடலுடன் பொருந்தாதிருந்தால் அப்போது தரிக்கும் சிசுவு வார்த்தைபேசல், நடத்தல் கொடுத்தல், இல்லாதவனுய் இருப்பான்.

மங்கையும் மன்னனும் மருவியணைந்த கருணையால் பெருகிய நாதமானது கருக்குழியில் பாயும்போது மனமாகிய ஒன்றை நினைப்பதும் அகங்காரமென்னும் ஒன்றைக்கொண்டெழும்புவதும் இவ்விரண்டும் உடலில்பொருந்தாது துண்டித்திருந்தால் அப்போது தரிக்கும் சிசுவு நினைவைக்கொண்டு விசாரிக்கவும்கோபமும் இல்லாத அதிமந்த நிலையுடையவனு யிருப்பான.

மங்கையும் மன்னனும் மருவியணைந்து கருவழியில் நாதமுதிக்கும்போது சித்தமும் உடலும் வேறுபட்டால் அப்போது தரிக்கும் சிசுவு அன்புதயவு சற்றுமில்லாதவனு யிருப்பான்.

மங்கையும் மன்னனும் மருவியணையும்போது அறிவும் நெஞ்சமும் ஒன்றுபட சேராவிட்டால் கொஞ்சமேனும் விவேகமில்லாதவனுகயிருப்பான்.

மங்கையும் மன்னனும் கூடியணையும்போது இடகலைபிங்கலை சுழிமுனை இம்மூன்று நாடிகளும் ஒன்றேடொன்று பொருந்தாதிருந்தால்கூன் குருடு நொண்டி சப்பாணி இவ்வித யின்னரூபமாக யிருக்கும்.

மங்கையும் மன்னனும் கூடியணையும்போது இடகலைபிங்கலை இவ்விரண்டு நாடிகளும் சுழிமுனையுடன் கலக்காதிருந்தால் அப்போது தரிக்கும் சிசுவு விழிகள் சுருங்கிக் கங்கிக்காணும்.

மங்கையும் மன்னனும் புணரும்போது மூலாதாரத்திலிருந்து இடது காதளவாய் வந்திருக்கும் அலம்புருடனென்ற நாடியும் மூலாதாரத்திலிருந்து உண்ணுக்களவாய் வந்துநிற்கும் சிகுவையென்னும் நாடியும் இவ்விரண்டும்பொருந்தாவிட்டால் அந்த சிசுவுக்கு செவிகேளாது, விழிசிமிட்டாது.

மங்கையும் மன்னனும் கூடும்போது மூலாதாரந்தொடங்கி இடது கண்ணளவாய் வந்துநிற்கும் காந்தாரியென்னும் நாடியும் மூலாதாரந்தொடங்கி வலது காதளவாய் வந்துநிற்கும் அத்தியென்னும் நாடி இவ்விரண்டும் கலவாதிருந்தால் அந்த சிசுவுக்கு மணம், சாந்தம் இரண்டும் குறைவாயிருக்கும்

மங்கையும் மன்னனும் புணரும்போது அலம்புருடனென்ற நாடியும் மூலாதாரந்தொடங்கி குறியின் அளவாய் வந்து நிற்கும் சங்கினியென்ற நாடி இவ்விரண்டுங் கலவாதிருந்தால் அந்த சிசுவுக்கு இடது தாழ்வாய் காது லிங்கம், இவைகளின் சுபாவகுணமில்லாதிருக்கும்.

மங்கையும் மன்னனும் கூடியணையும்போது லலாடத்தில் வாசமாயிருக்கும் பிராணவாய்வும், குதத்தையும் குய்யத்தையும்

பற்றியிருக்கும் ஆபானவாய்வும் தோளிலேநின்று பரிசத்தையறி விக்கும் வியானனென்றவாய்வும் இம்மூன்றுவாய்வும் பொருந்தா திருக்குமாகில் அப்போது தரிக்கும் சிசுவுக்கு அன்னபனாதிகள் பின்னப்பட்டு மலஜெலம் பிரிதாயிருக்கும்.

மங்கையும் மன்னனும் மருவியணையும்போது உதராக்கினி யை யெழுப்பி ஜீரனிக்கச்செய்யும் உதானவாய்வும் மற்றவாயுக் களையேறுதல் குறைதலின்றி சமனாய்க் கீழ்க்கொண்டியங்கவைக் கும் சமனவாய்வும் இவ்விரண்டுவாய்வுகளும் உடலில் கூடாவிடில் அந்த சிசுவுக்குஅன்னபானாதிகள் ஜீரணசக்தியின்றி ஏப்பமுண் டாக்கிக் கொண்டிருக்கும்.

மங்கையும் மன்னனும் கூடியணையும்போது கண்களில் நின் று இமைகளை விழிக்கவும் மூடவும் செய்யும் கூர்மனென்ற வாயு வானது உடலில் பொருத்தவில்லாதிருந்தால் அந்தசிசுவுக்கு மயி ர்க்கிளர்ச்சியுண்டாகாது.

மங்கையும் மன்னனும் மருவியணையும்போது தேவதத்த னென்ற வாயுவானது உடலிற் பொருந்தாதிருந்தால் அப்போது தரிக்கும் சிசுவுக்கு சிரிப்பு, விக்கல், கோட்டாவி. இதுகள் எப் போது மிராது.

மங்கையும் மன்னனுங் கூடும்போது தனஞ்சயன் யென்ற வாயுவானது உடலில் சேராவிடில் அந்தசிசுவுக்கு வித்தையும் பத்தியுமுண்டாகாது.

மங்கையும் மன்னனும் கூடும்போது வாய்வுகள் பத்து நாடி கள் பத்து கலைகள் மூன்று இவையாவும் இயக்கமற்றிருந்தால் அந்த சிசுவுக்கு உடலழியும்.

## தான் பிறந்தவீடு.

மதுரமது வொருபுறமாய் சேர்ந்தவீட்டில்
மதியமிர்தம் நின்றுலங்கு மூலவீட்டில்
கதிருதைய செகச்சோதி யானபீடங்
கனகரத்ன நாதவிந் திரண்டுங்கூடி
சிதரும லொருமனையி லுதித்தமேலுஞ்
செடமெடுத்த மார்க்கமினி செப்பக்கேளீர்
பதருமல் யானருள பெரியோர்பாதம்
பணிந்தின்னால் பெருமையெல்லாம் பகர்வேனுண்டே. க

மந்திரமுஞ் சாஸ்திரமும் பிறந்தவீட்டில்
மறைநூலை விதித்தவையன் வாழ்ந்தவீட்டில்

தந்திரமாய் அரசருட லெடுத்தவீட்டில்
சதாசிவமும் திருநடனம் புரிந்தவீட்டில்
சுந்தரஞ்சேர் நாதவிந்து உதித்தவீட்டில்
துருத்தியுட்டற் குள்ளுமொரு வுடலாய்நின்ற
உந்திரன்றன் பதிக்குமே லலைவீட்டுள்ளே
இப்படியே யென்னுடல்தான் சமைந்ததாண்டே. (உ)

கருவினுட லெடுத்தவிதக் கருத்துஞ்சொன்னேன்
காரணமாய் கருவிநின்ற கருத்துஞ்சொன்னேன்
மருவியுற வாகிநின்ற மைந்தர்க்கெல்லாம்
வயதுகுறை வாகினின்ற மார்க்கஞ்சொன்னேன்
பெருகிநின்று கலைகுறையு மிரண்டுஞ்சொன்னேன்
பிறந்துலகில் வாழ்ந்திருந்த பெருமைசொன்னேன்
குருவுடனே சிஷனுற வாகினின்ற
கூர்மையறிந் தென்திறத்தாற் கூறினேனே. (ரு)

தன்னினைவைத் தானறியும் நாதவிந்து
தரிசனத்தைக் காட்டியது மேலும்பூட்டி
உன்னிதமாய் யானுமொரு சடலமானேன்
உறுதிதுணை யாகவன்னை உந்திக்குள்ளே
என்னினைவை யானறிந்து கருவூர்நாட்டில்
இப்படியே சிறுகுழந்தை யானுமானேன்
முன்னினைவைத் தவிர்ந்ததந்த மூலத்துள்ளே
முடிந்தவகை யிவ்விதங்க ளாச்சுதாண்டே. (சு)

## அன்னை நிலை.

தாங்கிநின்ற கருவிதுக்குள் யானும்வந்து
தரித்தபின்பு அன்னையென்னைச் சடத்திலேதான்
பாங்கதுவா யெனைச்சுமந்த ஆத்தாளுக்கும்
பளபளப்புந் தளதளப்பும் பாரின்மீது
ஓங்கியொரு அடியெடுத்து வைத்தபோது
உள்ளமெல்லாம் வேதனையால் நொந்துவாடி
சாங்கியமுந் திங்களொரு ஐந்துக்குள்ளே
சாதகமாய் முடிந்தவகை சாற்றுவேனே. (ரு)

நடக்கையிலே யிருகாலுங் கையுஞ்சோர்ந்து
நாவிலிந்த வசனத்தை யுரைக்கக்குன்றி

படுக்கையிலே யொருபுறமாய்ப் பிரண்டுருண்டு
பத்தாவைக் கண்டவுடன் பார்க்குங்காலை
முடக்கையிலே மேனியெல்லா மதிரவாடி
மெய்க்கரத்தில் கனத்ததொரு மைந்தன்றன்னை
எடுக்கையிலே தள்ளாடி சோபமாகி
யிப்படியே சுமந்திருந்தா ளென்தாயாண்டே (சு)

## அன்னை வடிவு.

சாந்தமா யெனைச்சுமந்த அன்னையார்க்கு
சரீரமதில் வடிவுநிறந் தங்கம்போலாம்
ஆய்ந்தமதி பூரணம்போல் முகமேயாகும்
அழகுமதி பிறையதுபோல் புருவமாகும்
தோய்ந்தவிழி நிறமதிகக் குமிழியாகுஞ்
சொல்லரிய நாசியது வசிகளாகும்
காய்ந்தமலர்க் கொப்பான இதழேயாகும்
கனத்ததத்தங் கருநாகக் கனிபோலாண்டே, (எ)
வரையெழுந்தக் கதிரவன்போல் செருக்கமுற்று
வயிரமிட் டிழைத்தசித்திர மார்புமாகும்
திரையெடுத்த அலையதுபோற் சிறந்தவுந்தி
செவ்விளநீர்க் கொப்பான கொங்கைரெண்டும்
துறையெடுத்த தேளியைப்போல் கணுக்களாகுந்
தொந்திவய ளுவிலைபோல் துவண்டுகாணும்
நிரையெடுத்த புத்தகம்போ லொத்தபாதம்
நேராக நானிருந்த பாண்டமாண்டே. (அ)

## அச்சம்.

இருந்ததலம் விட்டுயெழுந் திருக்கஅஞ்சி
பொன்னைநினைவா லறுசுவையை வாங்கஅஞ்சி
சிறந்தருளுந் தெய்வதலம் போகஅஞ்சி
ஜென்மவினை தீரந்தி முழுகஅஞ்சி
பரந்தவயற் றினில்சுமந்து பாடுபட்டார்
பாலகனைய் நான்வளர்ந்து பாரில்வந்தேன்
வருந்தியென்னை வளர்த்தெடுத்த அன்னைகெற்பம்
வயிறுதனி லிப்படியே வளர்ந்தேனாண்டே: (கூ)

ஊணில்லை யுறக்கமில்லை யுணர்வுமில்லை
யுறவாகச் செய்விஜைய யோகமில்லை
நாளில்லை நகைம்பதில்லை நலந்தானில்லை
நல்லறிவு சற்குணமு நாட்டமில்லை
வீணில்லை விருப்பமில்லை விகற்பமில்லை
மெய்தளர்ந்து மேனியுண்ணும் மெலிந்து அன்னை
ஆணில்லை யென்றுமனம் நொந்துவாடி
அங்கமதி லிப்படியே யமைந்தேனுண்டே. (ய)

கையாறச்செய்கின்ற தொழிலுமில்லை
காலாற நடக்கின்ற சுருக்குமில்லை
மையான விழிமடவார் உறவுமில்லை
மனதார அள்ளியிடுந் தருமமில்லை
செய்கின்ற வாழ்க்கையில்லைச் செழிப்புமில்லை
சேர்ந்தணைந்த தந்தையின்மே லாசையில்லை
ஐயாறு நாள்முதலாய் மூன்றுநாளும்
அங்கமெனுந் திருக்கோயி லமர்ந்தேனுண்டே. (கக)

ஓரடிதா னெடுத்துவைத்தா லுடலுங்குன்றி
ஒத்தயிடை சிறுத்துகொங்கை யுடல்கருத்து
சீரடியாய் நடத்துநதிக் காலுமீறிச்
செப்பரிய அன்னைமனஞ் சலித்துவாடி
காரிடியு மின்னல்கரு மனமேதுஞ்சி
கன்னமுகில் வருஷித்துக் கடினமாகி
ஆரடி பட்டன்னையுட கெற்பத்துள்ளே
அமைந்திந்தப் படியாக வளர்ந்தேனுண்டே. (கஉ)

## தன்னோக்கம்.

உருவாகித் தலைகீழ்கால் மேலேயாகி
யூனுகி யொப்பரிய வுடலுமாகி
தருவாகி சண்டனனு காலமாகி
கடம்வளர்ந்து ஒன்பது மங்களிலேயென்னை
திருவாகி தனஞ்சயன் தானெழுந்துவோங்கி
தீர்க்கமுடன் தலைமேகால் கீழேநோக்கி
அருவாகி யன்னையுட கருவூர்தன்னில்
ஆதியெனுஞ் சோதியைத்தா னர்ச்சித்தேனே. (கங)

அகத்திலே ரகமெனவே வீடுங்கட்டி
அஷ்டகரு விக்குலத்தைக் குடியாய்நாட்டி
ஜகத்திலுயர் வேதமறி யாதசூட்சம்
சிறந்தருளும் வயதுபிர மாணங்கூட்டி
யுகத்திலெழு சாஸ்திரத்தால் முடியாவண்ணம்
உற்பத்தி யானவகை யுண்மைகாட்டி
குகைத்தலத்தி லிருந்த அன்னைக் கருவூர்க்குள்ளே
கும்பிட்ட கோயிலெல்லாங் கூறுவனே. (கச)

ஓங்கார சத்திமுத்தி துணிந்துநிற்கும்
உன்னியதோர் நகாரமது வளர்ந்துநிற்கும்
நீங்காத வகாரமது முயற்ந்துநிற்கும்
நிலையான னகாரமது மேலேநிற்கும்
பாங்கான அகாரமதை காத்துநிற்கும்
பதிவான வுகாரமது மேலேநிற்கும்
ஆங்கார மானவஞ்சு பஞ்சபூதம்
அப்படியே யஞ்சுருவ தாச்சுதாண்டே: (கரு)

சத்தமது பிருதீவு மேலேநிற்குந்
தாங்கிநின்ற பரிசமது வப்புமேலாந்
பத்திதரும் ரூபமது சிகாரமேலாம்
பாங்கான ரசமதுவும் வகாரமேலாம்
சித்தமகிழ்ந்ததுவுமொரு யகாரமேலாம்
சீர்பெறவே காயமெனுந் திரண்டேயாச்சு
வெற்றிதருங் கருவியொரு தொண்ணூற்றாறும்
விரைந்துறைந்தே யுதிரமதில் பிறந்துதாண்டே. (கசா)

நட்டுவைத்த காலெலும்பு துண்டுநாலு
நலமான கையெலும்பு துண்டுநாலு
ஒட்டிவைத்த பழுவெலும்பு முப்பத்திரண்டு
வுன்னிதமாந் தண்டுபதி னறுகண்டம்
மட்டுவைத்த வெலும்புச் சாணதற்குமேலே
வளவான நறுக்கெலும்பு வாயிரந்தான்
சுட்டலைந்த பாண்டமீ தெடுத்தநேர்மை
தொகையெல்லாஞ் சபைதனிலே சொல்வேனண்டே. ()




8

வீருன கையெலும்பு பிருதிவின்கூறும்
விதமான வுண்ணீறு பிரமன்கூறும்
பேருன தசைநாடி வாய்வுபத்தும்
பிலமான நரம்பெல்லா மாலின்கூறும்
கூறுனவுதிரமெல்லாஞ் சத்தின்கூறும்
கூடிநின்ற வெலும்பெல்லாம் ருத்திரன்கூறும்
சீரான நிணத்தோடு மச்சைசவ்வுஞ்
சிறந்தருளு மயேஸ்பரத்தின் கூறுமாண்டே, (கஅ)

ஆகார மானபர நாதவிந்து
வாதிசதா சிவன்கூறு மரண்டேகேளீர்
பாதாரமுடியளவுங் கணக்கதாகப்
பாவித்து விவரமதாய்ப் பகரயானும்
வேதாக மத்தில்நின்று நடனஞ்செய்யும்
விந்துநா தத்தின்செயல் விவரமாக
நாதாக்கள் கமலபதந் துதித்துயானும்
நவிலவுமே யான்கண்ட நடத்தையாண்டே. (கசு)

மாலயனும் பிரகாச மதியதாகும்
வாழும்வள ருத்திரனு முருவதாகும்
சேலான மயேஸ்வரனும் முணர்வதாகுஞ்
செப்பரிய சதாசிவனுங் குருவதாகும்
காலான நாடியொரு கைகாலாகுங்
கதிர்மதியால் வளர்ந்தசத்தி கருவதாகும்
வேலானவிழிமடவா ளுந்திக்குள்ளே
விளைகின்ற கருவியெல்லாம் விதிப்பேனுண்டே. (உ0)

எட்டுத்தூ ணூட்டியொரு விட்டம்போட்டு
யெழுந்ததின்மே லருகுவளை யொன்றுய்க்கூடி
மட்டற்ற மோட்டின்வளை யொன்றுநாட்டி
வளமான துண்டுவளை ரண்டும்போட்டு
கட்டாகக் கையகத்தில் வளைத்துக்கொண்டு
கனமான வரிச்சல்விலாக் கொடியுமாக்கி
முட்டமுட்ட நின்றகம் பத்துமேலாய்
முகப்புடனே சிங்கார வீடுமாச்சே. (உக)

பத்தியுடன் விரலுமிரு பதுவேயாச்சு
பதிந்தாக மதுவுமொரு நாலேந்தாச்சு
வெற்றியுள்ள ரோமமது மனேகமாச்சு
விதமான வீடுமெண்சா ணுயரமாச்சு
அத்திபுர மதுவாச்சு வெளியுமாச்சு
வங்குலமுந் தொன்னூற்று றதிலேயாச்சு
சத்திவா லம்பிகைப்பெண் ணலேயிந்த
சார்வான கருவியெல்லாஞ் சமைந்ததாண்டே. (உஉ

---

## எலும்புகளின் விபரம்.

மானிடரூபத்திற்கு தசைமுதலிய மாமிசங்கூடி தோலினுல் போர்வையிட்டிருந்தால் மாத்திரம் சரீரமென்றுபெயர் தசையின்றிமவறும் யெலுமபினுல் கோர்வையிட்ட ரூபத்திற்கு கங்காளமென்றுபெயர் இந்தச் சரீரத்தொடுப்பாகிய யெலும்புகளானது வெண்ணிறமுள்ளதாயும் உறுதியான சவ்வினுல் மூடப்பட்டதாயும் அவைகளுக்கு அதிகபெலனைத் தரத்தக்க சுண்ணும்பும்ஒருவிதப் பச்சைமழுப்பினதாயும் இளந்தையில் மெதுவுள்ளதாயும் நடுவயதுவரையில் வளாப்பட்டதாயும் முதுமையில் இலேசாகத் தெரிக்கத்தக்கதாயும் வைரமுள்ளதாயு மிருக்கின்றது.

நடுவயதுபெற்றசரீரத்தினெலும்புகள்யாவுங்கூடியநிறைபலம் 320

,, ஒன்றிரண்டென எண்ணிக்கையில் கூடிய எலும்பு 208

,, இவற்றில் குழந்தைகளின் நெஞ்செலும்பு துண்டு 8

,, இந்த எட்டுதுண்டும் பாலியத்தில்மூன்று துண்டாகவும் முதுமையில் ஒரே துண்டாகவும் மாறும்.

,, கபாலத்தில் கருக்குக்கூர்மைகளால் இசைக்கப்பட்டிருக்கிற எலும்புத்துண்டுகள். 8

,, செவிகளிரண்டிலும் சிறுயெலும்புபள் 8

,, முகத்தி னெலும்புத்துண்டுகள் 14

,, நாவின் அடியினெலும்பு 1

,, நெஞ்செலும்பு 1

,, ஆசனப் பெருயெலும்புகள் 4

,, பெருந்துவாரத்தின் வழியாய் ஒரு நரம்புக் கொடியினுல் கோர்த்திருக்கிற முதுளந்தண்டி னெலும்புகள் 24

,, மேற்படி எலும்பு வலது பக்கத்தில் 12

,, இடது பக்கத்தில் 12

,, தோள்பட்டை யிரண்டிற்கும் நெஞ்சறைக்குப் பின்பக்கமாய் முக்கோணவடிவான பட்டையெலும்பு 2

,, மேற்படி பட்டையெலும்பு வலதுபக்கத்திற்கு 1

இடதுபக்கத்திற்கு 1

,, காறையெலும்புகள் 2

இந்த காறையெலும்புகளும் மேற்படி பட்டையெலும்புகளும் ஒவ்வொரு தலைப்பிலும் கீழுள்ளதாய் தோள்பட்டைக்கும் நெஞ்சறைக்கும் முதுகின் பின்படைவுக்கும் பொருந்தி நீளவும் குருக்கவுய் இசைந்திருக்கும்,

நெஞ்சறைக்குமேலே பின்புறமாகயிருக்கும் தோள்பட்டையெலும்புகள். 2

,, இவற்றில் வலதுபுஜத்திற்கு 1

,, இடது புஜத்திற்கு 1

,, முதுகடைவாய் ஓங்கிநிற்கும் தண்டெலும்பு யிருபாலும் கோர்க்கப்பட்டதாய் இருபக்கங்களிலுஞ் சூழ்ந்து குடல், ஈரல் முதலியவற்றைத் தாங்கியிருக்கும் விலாவெலும்புகள் 32

,, முன்கை யெலும்புகள் 4

,, இவற்றில் இடதுகையெலும்புகள் 2

,, வலதுகை யெலும்புகள் 2

,, கையின் அக்குள்களிரண்டிலும் இரண்டுநிரையாயிருக்கும் சிற்றெலும்புகள் 16

,, உள்ளங்கை யிரண்டிலும் ஒவ்வொன்றிற்கு 5-எலும்புகளாக இரண்டிற்கு எலும்புகள் 10

,, வலதுகையின் பெருவிரலி னெலும்புகள் 2

,, மற்ற நான்குவிரல்களிலும் விரல் ஒன்றிற்கு 3-துண்டுகளாக எலும்புகள் 12

,, இடதுகையில் பெருவிரலெலும்புகள் 2

,, மற்ற நான்குவிரல்களுக்கும் விரல் ஒன்றிற்கு 3-துண்டுகளாக எலும்புகள் 12

,, இந்தச் சரீரத்துள்ள எல்லாயெலும்புகட்கும் நீளமும் பெரிதாயுமிருப்பது துடையெலும்புகள் துடை ஒன்றிற்கு 1-எலும்பாக இரண்டு துடைகட்கும் எலும்புகள் 2

,, முழங்கால் கிலெலும்புகள் 2

இந்த இரண்டெலும்பு முகப்பும் துடையெலும்பு முகப்பும் பந்துபோல் குமிழாகவும் இருமுகப்புங்கூடிப் பொருந்தற்கேற்ற கிலேப்போன்ற மராட்டமுள்ளதாயிருக்கும்.

,, முழந்தாட்கு அடியில் கால்யெலும்புகள் 4
,, இவற்றில் வலதுகால் எலும்புகள் 2
,, இடதுகால் யெலும்புகள் 2
மேற்கண்ட நான்கில் ஒன்று பெரிதும் ஒன்றுசிறிதுமாகும்
,, வலதுபாதத்தின் யெலும்புகள் 26
இவற்றின் பின்பாதத்தின் யெலும்புகள் 7
நடுபாதத்தின் யெலும்புகள் 5
நுனிப்பாதத்திலுள்ள விரலெலும்புகள் 14
,, இடது பாதத்தின் எலும்புகள் 26
இவற்றில் பின்பாதத்தின் எலும்புகள் 7
நடுப்பாதத்தின் எலும்புகள் 5
நுனிப்பாபுத்தின் விரலெலும்புகள் 14
,, பாதாதிகேசந்தொட்டு ஒன்றையொன்று பின்னிநிற்குமாறு நுறுக்கெலும்புகள் அனேகமுண்டு,

திருவள்ளுவர் நூலில் ஆயிரமென்று முடிவுசொல்லுகின்றனர்.

## மூளை.

மூளை, துணைமூளை, எனயிரண்டு மூளைகள் சிரசிலிருக்கின்றன அந்த மூளைகளின் ஏற்றக்குறைவுக்குத் தக்கபடிபுத்தியானது கூர்மையும் மந்தமாயும் பூர்வவாசனைப்படி அமையும்மூளையானது சிரசளவில் பறந்துகவிழ்ந்திருக்கும் தலையோட்டுக்கு உட்புறங்கொண்ட அளவு எவ்வளவோ அவ்வளவுக்கு நிறைந்ததாயும் வலதுஇடது இருபுறத்தையும் நோக்குவதுபோல் இருபிளவுகாட்டிய கோடுவிழுந்ததாயும் இருக்கின்றது மேற்படி மண்டையோட்டுக்குநிறைந்த அளவாயிருந்தபோதிலும் அடியும்புறமும் ஒருநூல் அளவு குறைந்ததாகவும் அந்தகுறைவுக்குச் சரிவர ஜலம் நிறைந்திருக்கும்.

துணைமூளையென்பது தலையின் பின்பக்கத்தில் கீழ்ப்பக்கம் கீழ்ப்பிடரியைப்பற்றி பந்துபோல் திரண்டவடிவாயிருக்கின்றது தலைமூளையின் எட்டில் ஒருபங்குகொண்டது துணைமூளை யளவாம் இந்த மூளைகள் உள்பாகம் அதிகவெண்ணிறமும் மேல்பாகம் சற்றுகம்மலான அறைவெளுப்பாயுமிருக்கும்மூளையின்மேள் புறம் பார்க்குமளவில் அதிக கிளைவிட்டுப்படர்ந்த மரம்போல் மூளையின் மேற்பாகந்தோறும் நரம்புகள் படர்ந்திருக்கும் மேற்படி மூளைமுற்றும் படர்ந்த நரம்புகள் காரபதன்னியில் மூன்று சவ்வுகள் கவசமிட்டதுபோல் படர்ந்து சுற்றி மூடியிருக்கும் அந்த சவ்வுகளில் மேல்சவ்வு அதிக தடிப்புள்ளதாகவும் நடுச்சவ்வு மிகவும் மெல்லியதாயும் அதற்கு இட்சவ்வு மகானுண்ணியதாகவும் இரத்தக்குழல்களால் பின்னப்பட்டதாகவுமிருக்கும் அந்த சவ்வுகள் எப்போதும் பசுமையாயிருக்குமாறு ஜெலம் பரவியிருக்கும்.

முதுகடைவாய் ஓங்கிநிற்கும் முள்ளந்தண்டின் சார்பாய் கைவிரலின் பருமனுள்ள ஒருகொடியானது மூளையிலிருந்து முள்ளந்தண்டை யொட்டியிரங்கியிருக்கும் இரத்தப்பாச்சலுக்கு துவாரமுடையதாயிருக்கும் இந்தகொடிமேல் தலைப்பு குமிள்வடிவாய் மூளையை ஒட்டிக்காத்திருக்கும்.

பின்பக்கமிருக்கும் துணைமூளையைப்பற்றி சிறு நரம்புகளானது பெலங்கொண்டதாயும் வெண்ணிறமுடையதாகவும் மூளையிலிருந்து கிளம்பி இரண்டுசோடுகளாகப்பிரிந்து முகத்தின் எப்பகுதிகளுக்கும்சென்று காது, கண், நாக்கு, மூக்கு, இவைகளுக்கு ஆதாரமாகியும் இவைகளின் தொழிலுக்குக் காரணமாயுமிருக்கிறது.

## மூளையின்தொழில்.

புத்தி, ஞானம் இதுகள் தோன்றி திடமாயும், மனதுக்கும் தேகத்திற்கும் இராஜகருவியாகவும், தேகமடையும் சகல உணர்ச்சிகளுக்கும் இன்பம் பிறக்குமிடமாயும் இருக்கின்றது ஆயினும் உடம்பின் எப்பகுதிகளிலும் இண்டாகும் உணர்ச்சிகளை மனம் அறியும்படி உணர்ச்சி நரம்புகளின்வழியாய் கபாலத்தைமுட்டி அங்கனம் மூளை அவ்வுணர்ச்சியை க்ஷமித்துதிரும்பவும் கைமாராகதேகத்துக்கீதலாம் இவ்வளவு இரகசிய பதார்த்தமாயினும் இந்ததலைமூளையானதுமிகவும்வலிமையுடையது துணைமூளையானது

மிகச்சிறுத்தரூபமுடையதாயினும் அம்மூளையிருக்கும்பிடரிஸ்தானத்தில் யாதேனும் சிறுகருவிபட்டால் கையினால்மெல்லக்குத்தினாலும் வலிப்புண்டாகும் அந்தத் துணைமூளைக்கு அதிகமோசம் வந்தால் மூச்சு தடைப்படும். ஆகையால் பின்பிடரியிலிருக்கும் துணைமூளைக்குக் கெடுதல்வராவண்ணம் காக்கவேண்டியது ஆயுள்வேத அடைவு மூளையினிடமாகயிருந்து பிறந்த சிறுநரம்புகளும் ஐக்கநரம்பென்பதும் சரீரமெங்குமோடி முதுகடைவாய் ஓங்கி நிற்கும் முள்ளந்தண்டையணைந்து இடுப்பிலும் இரப்பைக்குப்பின்னாகவும் அடிக்கழுத்திலும் சுற்றிகுரல், குழை இவைகட்குராதாரிவிட்டு இடைந்து இடையளவும்சென்று சங்கிலிக்கோர்வைபோல் பின்னலிட்டு உடம்பில் எல்லாப்பகுதிகளிலும் பரவிப்படர்ந்து உருப்புகளை பிகுப்படுத்தவும் ஒருகருவியின் உணர்ச்சியை மற்றொரு கருவிக்குச் சுரப்பிக்க உடையதாகவும் இருமுகப்பில் மூளையிலொரு முகப்பும் முள்ளந்தண்டிலொரு முகப்பும் பொருந்தியதாகவும் இடையிடை கூந்தல்போல சன்னல் பின்னலாய் வளரப்பெற்றதாயு மிருக்கும்.

## கண்கள்.

கண்களானது நெற்றிக்குமேல் கவிழ்த்துவைத்திருக்கும் கபாலமாகிய மண்டையோட்டின் முன்பக்கத்திலிருக்கும் குழிகளில் அதற்குத்தக்க வடிவாயும் கோழிமுட்டைபோல் உருண்டையாயும் பதிக்கப்பட்டிருக்கின்றது.

கண்களென்றமைக்கப்பட்ட உருண்டையின் முன்பக்கத்தில் வெண்மைநிறமான இரண்டு சவ்வுகள் அமைந்திருப்பதால் அதை வெள்ளைவிழியென்று சொல்லப்படும் அந்த வெள்ளை சவ்வானது அதிகபலனுள்ளதாயும் கண்ணாடியைப்போல் உருவெளியுள்ளதாயும் பளபளப்புள்ளதாயும் நீர் பருவுதற்கு இடைவழியுள்ளதாயு மிருக்கின்றது.

மேற்கூறிய இரண்டு வெள்ளை சவ்வுகளுக்குப் பின்புறமாய் கருவைநிறமான ஒருசவ்வு இரத்தப் பொறைபொருந்திய குழைகளினால் பின்னப்பட்டு கண்களின் வட்டம் முழுமையும் போஷிக்கத்தக்க இரத்தபாச்சலுடனிருக்கன்றது அதற்குபின்னால் கண்கள் வித்தியாசமாய் காணப்படும்படி பலநிறத்தைக்கொடுக்கும்

ஒரு சவ்விருக்கின்றது மேற்கூறிய இரண்டு சவ்வுகளுக்கும் மத்தியில் ஒரு கரும்புள்ளியிருக்கின்றது அந்த புள்ளியானது திலர்தம்போன்ற பொட்டாகவிருக்கின்றது அதை கருவிழியென்று கூறுவது அந்த கருவிழியானது கருவூரில் அமைந்தஅளவேயன்றிமற்றக் கருவிகள்போல் தேகத்தோடு வளருவதில்லை.

அந்தகருவிழிக்குப்பின்னல் அதைத்தாங்குமாறு ஒருவெள்ளைச்சவ்வு மிகவும் மெல்லியதாயும் பார்வை நரம்புக்கு உள்ளுரையாயுமிருக்கின்றது அந்தபார்வை நரம்பானது இந்தசரீரத்துக்கு ஆதாரமாகிய கபாலமூளையிலிருந்து உற்பத்தியாகி இருகண்களின் பிற்பகுதிமட்டும் ஓடிகண்ணுக்குள்ளே பரவியிருக்கின்றது.

கருவிழி வெள்ளைவிழி இவைநிறைந்த அளவுக்கு மேற்புறத்தில் ஈசலிரகுக்கும் மெல்லிய மூன்றுசவ்வுகள் ஒன்றின்மேலொன்ருக கவசமிட்டதுபோல் மூடியிருக்கின்றது அதற்குமேலும் மாசிமருமுதலிய தூசுகளெதுவும் கண்ணிற்படாதபடி கார்க்கும் பொருட்டு ஆறு சதைநரம்பு இலைகளும் கண்மடலெனப்படும் ரெப்பையிலிருக்கின்றன அவற்றிற்கு மாதரவாய் இரப்பையின் முனையளவும் இரகுபோல் ரோமஅரும்புகள் யானையின் செவிபோல் விசிரிக்கொண்டேயிருக்கின்றது கருவிழியானது கண்ணினுள்ள பலபகுதியிலும் சுத்திவருமாறு மெல்லிய நிணமிருப்பதால் யாதொருசேதமுமின்றி எப்பக்கத்திலும் தாராளமாய் கருவிழி சுழலுகின்றன.

வெளிச்சம் அல்லது ஒரு வஸ்துவின் கிரணம் இவைகள் கண்ணுக்குள்ளே செல்லும்போதே கழுவிழியின் பின்பக்கமிருக்கும் தரிசியமென்னும் வெண்மையான சவ்வானது அயக்காந்தம் இழுப்பதுபோலும் ஒன்றுக்கொன்று கத்திரிக்கோல்போல குருக்கிட்டிழுத்துக்கொல்லும் இதினல் கண்ணுடியில்படும் உருவம் போலே பிரதிவுருவம் யெதிர்ப்பட்டிலங்கும்.

கண்களைச்சூழ்ந்திருக்கும் சர்வ ஆதாரங்களுங்கடந்து யாதேனும் தூசு மாசு இவைகள் கண்ணிற் படுமாயின் புறகூருகிய கடைக்கண் பக்கமாயிருக்கும் நீர்கோளம் அல்லது நீர்ச்சவ்விலிருந்து சுரக்கும் நீரானது கண்ணீரெனப்படும் அந்த கண்ணீரானது கண்முழுமையும் பரவுமளவில் அப்போது ஜன்னலின் இரக்கைபோன்று ரெப்பைகள் விசிரிக்கொண்டிருக்கும் அப்படி விசுருவதினல் அங்ஙனமுள்ள தூசுகளைத் தள்ளித்தள்ளியும் கண்

ணீருடன் கலக்கச்செய்து மூக்குத்தண்டின் அடியாயும் கண்களின் உட்கூறுயுமிருக்கும் கண்ணடியின் உட்கூருக்கு நேராய்வந்திருக்கும் நரம்புக்குழாய்களின் வழியாய் போக்கி மூக்குதுவாரத்தின் வழியே வெளியாய்விடும்.

யாதொரு பொருளேயும் நெடுநேரம்வரை உற்றுப்பார்ப்பதாலும் சூரியன் தீபம் மின்னல் இவற்றின் அதிகவொளிகள்கண்ணிற்படுமாயின் கண்களுக்குக் கெடுதியாகும் ஆகையால் அதற்குக்கெடுதி வாராவண்ணம்வாரத்திற்கிரண்டுமுறை தயிலந்தேய்த்து வென்னீரில் ஸ்நானம் செய்யவேண்டியது அவசியம்.

# பல்லுகள்.

## பல்லுகள் மொத்தம்-32.

| | |
|---|---|
| இவற்றில் மேல்தாடை எலும்புக்குழிகள் | 16 |
| கீழ்தாடை எலும்புக்குழிகள் | 16 |

குழந்தைகளுக்கு ஒவ்வொன்ருக தாடையொன்றுக்கும் பத்துபல்லுகள் முளேத்துஆறுவயதுமுதல் பதிஞறுவயதுக்குள்ளாக அவைகள் விழுந்து அதன்பிறகு தாடையொன்றுக்கு பதிஞறு பல்லுகளாக வேறே நிலேயான பல்லுகள் முளேக்கும் மேல்வரிசை கடைவாய்ப்பல்லுகள் ஆறும் கீழ்வரிசை கடைவாய்ப்பல்லுகள் ஆறும் ஆக பனிரெண்டு பல்லுகட்கும் மும்மூன்றுவேர்களும் மற்ற பல்லுகளுக்கு ஒவ்வொரு வேறுமிருக்கும்அந்தவேரிலிருக்கும் துவாரங்கடோறும் சிறுநரம்புகள் ஓடியிருக்கும்.

நாம் அருந்தும் சகலபதார்த்தங்களேயும் தீனிப்பையினிடமாகஇலேசாய்சமிக்கத்தக்கதாகநசுக்கிஅறைத்துவிடும்அன்றியும் பேசும்பொழுது சொற்களேயும் எழுத்துகளேயும் தெளிவாய்உச்சரிக்கப்பண்ணுவதும்பல்லுகளின்தொழிலாம் அவைகளில்வியாதியணுகவொட்டாமல்அவைகளேசுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

## நாவு.

சரீரமாகிய நமதுஉடலேவளர்க்குமாறு நாம் உண்ணும்சுவை முதலிய பதார்த்தங்களின் உருசியை அரியப்பண்ணும் புலனும் இதற்கு (நாவு) அல்லது நாக்குயென்றுமருவியது நமது நாக்கானது நீர் ஊறும் சவ்வினல் மூடப்பட்டு அதாவது தசை இலேகளின் அடுக்கின்பேரில் நீரூரும் சவ்வினல் சவ்வப்பட்டிருக்கிறது

இந்த நாவின்பேரில்நாக்கடுவென்னும் சிறுகூர்மையான முட்கள் அமைந்தசவ்வினுல் பாய்விரித்ததுபோல் நாவின்மீதுமூடப்பட்டிருக்கிறது அந்தமுட்களின்கீழ்புறத்தில் வொவ்வொருமுட்களுக்கும் சுவைபருகும்வேர் இரங்கப்பட்டு கூந்தல் இரங்கியதுபோல் நாவின் முழுமையுங் நுண்ணிய சிறுவேர்களிரங்கி யிருக்கின்றது நாமுண்ணும் சுவைகளுக்குத்தக்கபடி நாவின் முட்கள்தடிப்புண்டாகி நீர்சுரந்து சுவையை அல்லது உருசியைப்பருகும்கடும்புளிப்பு வஸ்துக்கள் நாவில்படுமாகில் நாவிலுள்ளமுட்கள்யாவும்எழுச்சியுண்டாகி மிகுந்த தடிப்பாகத்தோற்றும் நம்மைப்போலவே மற்ற ஜீவராசிகட்கும் அததுகளுக்கு இணக்கமான உணவுகளை சுவையறிந்து பருகவும் இணங்காதவஸ்துக்களை தள்ளுவதற்கும் பிரதானமான கருவியாக விருக்கின்றது.

## நாசி.

மூக்குஎன்று மருவப்பெற்ற நமதுநாசியானது பிராணவாயுவாகிய சுவாசக்காற்று செல்லவும் திரும்ப உள்ளுக்குவரவும் ராதாரியாகவிருக்கின்றது பிராணவாய்வு சஞ்சாரமாகவிருக்கின்றமையால் புலன் ஐந்தில் இதைமாத்திரம் பிரதானமாக யெண்ணலாம் இந்தநாசியின் துவாரமானது இருபுருவத்தின் மத்தியிலிருந்து இரண்டுகண்களுக்கும் மண்டையிலுள்ள பெருமூளைக்கும் தொண்டைகுழிக்கும் வழியுள்ள முச்சந்தியாயும் அந்தமுச்சந்தியிலிருந்து பகிர்முகமாயும் இருதுவாரமாகப் பிரிந்து முனைநாசிக்கு மூக்கென்று பெயர்பெற்றது.

நாசித்துவாரத்தின் முச்சந்திக்கிடையில்சளியூரும்சவ்வுகள் மூடிக்கொண்டிருக்கிறது. காற்றின்வழியாக மணம்பருகும்அதாவதுவாசனையறியும் நாற்றநரம்புகள்மிகவும் சிறுயிழைகளுக்கொப்பாக கூந்தலைப்போல்நாசிதுவாரத்தின் ஆரம்பத்தில் அடைந்திருக்கிறபடியால்அந்தநாற்றநரம்புகளுக்கு சேதம்வராதபடி அதில் சளியூரும் சவ்வினுல் மூடப்பட்டிருக்கின்றது அதில்எப்போதும் சளியும்நீரும்சுரந்துகொண்டிருக்கும் யாதாமொருபொருள்களை மணக்கும்போது அந்தமணமானது நாற்றநரம்பென்னும்கூந்தல்களின்வழியாய் மூளைக்குச்சென்று அங்கேமணமானது உணர்ந்

துகொள்ளுகின்றது இந்தநாசியென்னும்புலனானது நல்லவாசனை களைமுகரவும் துர்வாசனைகரேசிக்கவும் இந்தநரம்புக்கூந்தல்களே காரணமாகவிருக்கின்றது புகையிலைப்பொடி போடுவதினால் அங் குள்ளநாற்றநரம்புகளின்தொழில்களை நடத்தவொட்டாது அங்கு அழுக்குகள்சேர்ந்துதடைப்படுத்தும் இதுவுமன்றிசளியூரும்சவ் வையும்தடிக்கப்பண்ணும் இவ்விதகுற்றங்களுக் கிடங்கொடுப்ப தினால் மூச்சுதடைப்பட்டு மூக்கின்வழியாய் வரவேண்டியசளிமு தலிய வஸ்துக்கள் வாய்வழியாய்வரும்.

## செவி.

செவிஎன்பது உலகத்திலுண்டாகும் நற்றீச்செயல்கள்யாவ ற்றிலும் பிரயோகிக்கும்சத்தம் அல்லது ஒலி முதலியசகலசொற் களையும் கேட்டு மனதுக்கு ஆறுதலும் சந்தோஷமும்உண்டுபண் ணுவதற்குரிய உருப்பாயிருக்கின்றன இது வெளிக்காது நடுக்கா து உட்காதுயென மூன்றுவகுப்பா யிருக்கின்றது வெளிக்காது முகத்தையடுத்தபாகமாகவும் தலைக்குபுறம்பாகியும் தோற்றப்ப டும் சிலையைப்போன்ற வளைவாக நரம்புகளால் வளைக்கப்பட்டுஅ ன்னரம்புகள் தோற்றுதபடி தோலினால்மூடப்பட்டு இவற்றிற்கு நடுவே துவாரமுள்ளதாயிருக்கின்றது.

அந்த துவாரத்தின் வழியாய்பூச்சி புழுமுதலியசிற்றினங்க ள்புகுராதபடி நடுக்காதினிடமாகக் குரும்பியென்னும் ஒருவிதப சை வளர்ந்துகொண்டிருக்கும் மேற்படி குரும்பி அதிகப்படாவ ண்ணம் எடுத்துவிடுவாராகையால் குரும்பி வளரப்பெற்ற யிடத் திற்குஉட்புறம்துவாரத்திற்கு அறைத்திட்டமாகஉருவெளியான ஒரு சவ்வு வளர்ந்திருக்கும் அதற்கப்புறம் மகா நுண்ணியதான நாலுயெலும்புகள் ஒரே கோர்வையாய் நடுக்காதில்கிடக்கின்றன அக்கோர்வையின் ஒரு தலைப்பு உட்பக்கமும் மற்றொருதலைப்பு வெளிக்காதினிடமாயுள்ள குவளைபோன்றபள்ளத்தாக்கில்தொடு த்திருக்கின்றன காற்று நுழையும்பொருட்டாய் நடுக்காதிலிருந் துபின்தொண்டை அருகுவரையிலும் சிறுநரம்புக்குழை ஓடியிரு க்கிறது வாய்-மூக்கு-காது - இம்மூன்றுருப்புகளின் வழியாய் காற்றுபோக்குவருத்துமுண்டு சற்றுலேசான மூச்சுபிடித்தால் மேற்படி மூன்றுருப்புகளையும் மூடிக்கொண்டு மூச்சியையஸ்தம்பி த்தால் விட்டுவிடும் கேள்விநரம்பானது மூளையிலிருந்து உற்பத்தி

யாகிஉட்காதுக்கு உள்ளே புகுந்து அந்த உட்காதின்புரைக்குழி யிலிருக்கும் சவ்விலுள்ள நீரில் மிதந்துகொண்டிருக்கிறது இந்த கேள்விநரம்பானது உட்காதின் பகுதிமட்டும் அடக்கமாயிருக்கின்றது இந்நரம்புக்கும் சவ்வுக்கும் ஆதரவா்நடுக்காதினளவில் நாலு சிறுயெலும்புகள் மூன்று அறைகளுள்ளனவாய் சிக்கும்முக்கும் சுத்தும் சுழற்றலுமுள்ள குடைபோல் தாவியிருக்கின்றது வெளிக்காதிலடையும் ஒலி அல்லதுசப்தங்கள் ஒன்றாய்த்திரண்டு நடுக்காதுக்குள் செல்லும்போது அந்த நடுக்காதிலுள்ள சவ்வுஅதிர்ந்து உள்காதோடேதொடுத்திருக்கும் எலும்புக்கோர்வைவழியாய் அந்த அதிர்ச்சியை சேர்த்துவிடுவதும் அந்தஅதிர்ச்சியானது கேள்விநரம்பின் கூந்தலில்பட்டு அந்நரம்பின்வழியாய்மூளைக்குட்சென்று தாக்குவதினால் அந்த ஒலியின்பயனை மனம் அறிந்து சுகதுக்கத்திற்கிடாய் சம்மந்தப்படும்.

## தொண்டை அல்லது குறள்.

அன்னபனாதிகள் செல்லும் தொண்டைத் துவாரமானது வெண்குருத்து எலும்புகளால் ஒருவிரல் செல்லக்கூடியஇடமுள்ளகுழையாயிருக்கின்றது அதின்மேல்துவாரம் முக்கோணவடிவாயும் கீழ்துவாரம் விரல்பருமனுடைய வட்டவடிவமாயுமிருக்கின்றது அந்த துவாரத்தின் இடையே பக்கத்திற்குஇரண்டாகநாலுசவ்வு முடிச்சுள்ளதாய் நாக்கின் கீழ்தாடை சுவாசக்குழல் இவைகளுடன் பொருந்தியிருக்கின்றதாம் அந்தசவ்வுகளுக்குகுரல்நாண் என்றுபெயர். மேற்படி நாண்களுக்கு இடையிலிருக்கிற வெடிப்பு அறைகட்கு முடிச்சிவாயல் என்றுபெயர்அந்தநாண்களுக்கு வலம் இடமாகக்கீழ்மேலும் இருக்கும் இரண்டுபாகத்திற்கும் இடைவெளிக்கு முடிச்சிக்குழல்யென்றுபெயர் அந்தமுடிச்சிகளானது அடிநாவில் பொருந்திமிதந்துகொண்டிருக்கும் நாமுண்ணும் ஆகாரங்களை சுவாசக்குழியில் செல்லாதபடிகாவல்பண்ணுவது மேற்படி நாணங்களென்னும் முடிச்சுகளின்தொழிலாம் இந்த முடிச்சிகளின் காவல்கடந்து ஏதேனும் ஒலி அணுவளவு பதார்த்தங்கள் சுவாசக்குழையில் சென்றால்புறையேறிற்றென்று சொல்லுவர் நாம்பேசுவதற்காய் ஆரம்பிக்கும் தொனிகளுக்கு மேற்படி சவ்வாகிய நாணங்களும் நாவின் அடிப்பக்கமுள்ள இரண்டு முடிச்சிகளும் ஒருமித்துதடித்து எழும்பிதொண்டைக்குழியைவிலகியிடங்கொடுத்தால் மாத்திரம் சத்தம் பிறக்கிறது.

# உள்ளுறுப்புகள்.

சுழித்திஸ்தானமும் இருதயகமலமுமாகியநெஞ்சறைக்குள்ளிருந்து துரியாதீதமும் குறியிடமுமாகிய மூலாதாரம்வரையில் இடையிடை பகுக்கப்பட்டுபொருந்தியிருக்கும் உள்ளுறுப்புகளாவன அதாவது,

1. இரத்தாசயம்.
2. அமர்வாசயம்.
3. பகிர்வாசயம்.
4. சலவாசயம்.
5. மலவாசயம்.
6. சுக்கிலவாசயம்.

இரத்தாசயமென்பது இரத்த உற்பத்தியிடம்.
அமர்வாசயமென்பது-உண்ட அன்னந்தண்ணீ ரமருமிடம்.
பகிர்வாசயமென்பது-அன்னமும் தண்ணீரையும் வெவ்வேறாகப் பிரிக்குமிடம்.
சலவாசயமென்பது-சலம் சேருமிடம்.
மலவாசயமென்பது மலஞ்சேருமிடம்.
சுக்கிலவாசயமென்பது சுக்கிலஞ் சேருமிடம்.

1. உமிழ்நீர்கோளம்.
2. மிடறு
3. இரைக்குழல்.
4. இரைப்பை.
5. துணைகுக்கி,
6. இரசாயனி.
7. குடல்கள்.
8. இரசதாரை.
9. ஈரல்
10. பிளிகை.
11. அவளிகை.
12. குண்டிக்காய்.

1-வது, உமிழ்நீர்கோளமென்பது நாவுக்கு அடியிலும் இருதாடைகட்குள்ளும் காதுகட்கு அடுத்த உட்பாகத்திலும்பக்கத்திற்கிரண்டாகயிருக்கும் அவற்றில் உமிழ்நீர்சுரப்புண்டாம்.

2-வது, மிடறு என்பது அடிநாவிலிருந்து உற்பத்தியாகி இரைக்குழல்மட்டும் ஓடியிருக்கிற ஓர்குழல் அது சவ்வின்இலைகளால் உண்டாக்கப்பட்டதாய் மூன்றங்குலநீளமாயும் சற்றுவிசாலமுள்ளதாயுமிருக்கும்.

3-வது, இரைக்குழல் என்பது ஒரு அடி நீளம்தடித்தசவ்வின்குழையாம் இதன்வழியாகத்தான் நாமுண்கிற போசன பதார்த்தங்கள் இரப்பையினுட் செல்லுகிறது.

4-வது, இரப்பையென்பது றப்பரைப்போன்ற இசிவுள்ள மெல்லிய மூன்றுசவ்வுகளால் அமைக்கப்பட்டிருக்கிறது இந்த இரப்பையானது நெஞ்சுகுழிக்குக்கீழே அடிவயற்றுக்கும்மலே உடம்புக்குநடுப்பாகமாய்ச்சற்றேஇடபாகத்தைச்சார்ந்தாற்போலிருக்கும் மேற்கூறிய மெல்லிய மூன்றுசவ்வுகளென்பதில் வெளிப்படலம் மிகவும் அழுத்தமுள்ளதாயுங் நடுப்படலம் நுண்ணிய யிழைகளால்பின்னப்பட்ட அடுக்கடுக்காயுள்ளதாயும்உட்படலம் அதிக விசாலயிடங் தரத்தக்கதாயினும் அடுக்கடுக்காய் மடிப்பு பெற்றதாய் சுருங்கியிருக்கும் அம்மடிப்புகளில் சனி பரவியிருக்கும் அந்த மடிப்புப்படலமானது சிறுகுடல் பெருகுடல்களுக்கு உள்ளுரையாய் அவைகளின்தொடர் நெடுகப்பரவியிருக்கின்றது அன்றியும் ஜலப்பை குண்டிக்காய் முதலியவைகளுக்கும் உள்ளுரையாய் ஓடியிருக்கின்றது.

5-வது, துணைக்குக்கியென்பது சிறுகுடலிலே மிகவும்ஆதாரமான ஒருபாகமாய் அது ஏறக்குறையபன்னிரண்டங்குலம்நீளமுடையதாய் இரைப்பையின் கீழ்துவாரத்தில் தொடுத்திருக்கின்றது இதற்குள்ளே ஈரலிலிருந்து வருகிறபித்தநீர்க்குழையும்இதுவே குழையாயிருக்கின்றது.

6-வது, இரசாயனியென்பது சிறுகுடலின்உட்பக்கத்திலிருந்து கிளம்புகிற மிகவும் சிறிய குழல்களாம் அதாவது துவாரம் பொருந்திய நரம்புகளாம் அவைகள்மணிக்குடலுக்குஉள்ளேசென்று இரசதாரையிலே பொருந்தியிருக்கின்றது.

7-வது, குடல்களென்பது இருவகை அதாவது சிறுகுடல் பெருகுடல் என்பதாம் துவாரமுள்ள சிறுகுழல் அல்லதுசிறுகுடலென்பது 25-அடி நீளமுள்ளதாயிருக்கின்றது பெருங்குடல்

யென்பது ஏறக்குறைய 10-அடிநீளமுள்ளதாயிருக்கின்றது அவற்றின் முனைகளாகிய இருபகுதியும்மலாந்திரத்தையும் மலவாசயத்தையும் ஒட்டியிருக்கிறது.

8-வது, இரசதாரையென்பது ஒருகுழல் அல்லது ஓர்குடல் யெனப்படும் அது ஈரலுக்குப் பின்பக்கந்தொடங்கி முள்ளந்தண்டின் முற்பக்கமாகயேறி அடிக்கழுத்தின் கீழ்நோக்கி முன்பக்கமாக மடங்கி தனக்குள்ளாகப் பிரவேசிக்கும் இரசத்தை இடது தாரையெலும்புக்குப் பின்னாகயிருக்கும் நாளத்திற்குள் செலுத்தும் நாளமென்பது இரத்தம்பொறையும் தசையிலைகளென்னும் மாமிசவடுக்குகளாம்.

9-வது, ஈரலென்பது 12-அங்குலநீளம்9-அங்குலஅகலமும் நாலு இராத்தல்நிறையுமுள்ளதாம் கருமையும்சிகப்புங்கலந்தநிறமும் உதிரங்கலந்து தடித்த சிகப்பான ஒரு உருப்பாம் அதுவலதுபக்கம் விலாவிற்குள் வலது சுவாசப்பைக்கு கீழேயிருக்கிறது இதிலிருந்து பித்தநீர்பிறந்து இந்த ஈரலின்கீழ்ப்பக்கத்திலேமஞ்சள்நிறமானகசப்புகள் பித்தநீர்தங்கும்பையொன்றிருக்கிறதுமேற்பிறக்கும் பித்தநீர்யாவும் இந்தபையினிடமாகத்தங்கும் இந்தப் பைக்கு பிளிகையென்று பெயர் இந்தப்பித்தநீரானது இரைப்பையில் கீழ்துவாரத்தில் தொடுத்திருக்கும் துணைக்குக்கியென்னுங்குழலின்வழியாய்ச் செல்லுமாகில் சரீரம்யாதொரு ஆபத்துமின்றி சுகமாயிருக்கும் துணைக்குக்கி ,கிலின்வழியில் யாதேனும் தடைபட்டு பித்தப்பையினிடமாகவே அளவுமீறி தங்குமாயின் பித்தாதிகமானஅனேகவியாதிகள்சம்பவிக்கும் (கணையமென்னுங் குழை) இரைப்பைக்குப்பின்புறம் சற்றுகீழாவிருக்கின்றது அதினுருவம் உள்துவாரமுள்ளதாயினும்சப்பையாய் ஒடுங்கினதாகவும்நீண்ட உருப்பாகவுமிருக்கின்றது இந்தகணையமென்னுங்குழலுக்குள்ள இரைப்பையிற் கசியும் நீரும் துணைக்குக்கியில்பித்தநீரும் ஒன்றாய்ப்பொருந்தி மலப்பையினிடமாகச்செல்லும்.

10-வது,பிளிகையென்பது வட்டவடிவானதும் சற்றேகனதியுள்ள சப்பையானஉருப்பாயும்கருமைநிறமுள்ளதாயுமிருக்கின்றது அது இடதுபக்கமாக இரைப்பையோடும் இரைப்பையின் பின்பக்கமிருக்கும் கணையத்தோடும் சேர்ந்திருக்கிறது இந்தச்சரீரத்தில்காச்சல்கண்டு நீடித்திருக்குமாகில் அந்தஉஷ்ணத்தைத்தாங்காமல் கனையமென்னுங் குழை இரைப்பையைத் தொடுத்திருக்

கும் பித்தநீர்க்குழை இவற்றில் வரும்நீரை கிரகிப்பதினால் அந்த பிளிகையென்னும் உருப்பானது பெருப்பதுண்டு அதைக்காய்ச் சல்கட்டியென்பார்கள்

11-வது, அவளிகையென்பதுநாலுமடிப்புள்ளஒரேசவ்வாம் அது முந்தாணியைப்போல சதுரமுனைகளைக்காட்டி குடல்களு க்குமுன்னே தொங்கிக்கொண்டிருக்கும்,

12-வது, குண்டிக்காயென்பது முள்ளந்தண்டின் அடிப்பாக த்தின் இடுப்பினருகேயிருபக்கத்திலுமிருக்கும் நான்குஐந்துஅங் குலநீளமும்கனமுமுள்ள இரண்டுஉருப்புகளாம் இவைகள்நிரை க்கோலிலுள்ள குண்டுகள்போல இரத்தப்பையை இழுத்திழுத்து இரத்தத்திலுள்ள நீரைப்பிரிப்பதனால் இரத்தம் சுத்தியாகிறது ஒவ்வொரு குண்டிக்காயிலிருந்தும் ஒவ்வொருகுழல்கள் கிளம்பி இரண்டுகுழல்களும் அடிவயற்றினடுவேயிருக்கும் ஜலப்பையை நாடியோடி அந்தப்பையுடன் பொருந்துகின்றன அந்தக்குழல்க ளின்வழியாய் மூத்திரமானது சொட்டுசொட்டா யிரங்கி ஜலப் பையை நிறப்புகின்றனவாம்.

## ஜீரண உருப்பின் தொழில்.

சரீரத்தை வளர்க்கும்பொருட்டு தினந்தோறும் உண்ணும் போஜன பதார்த்தங்கள் யாவையும் பல்லுகளால் மெல்லப்பட்டு உமிழ்நீருடன் கலந்து விழுங்க அப்போது தொண்டையின் குழி வழியாய் இரைப்பைக்குட்செல்லும் அந்தப்பையினால் அவைகள் நசுங்கப்பட்டு திரளுஞ்சமயத்தில் அந்தப்பையின் உட்பக்கத்தி லிருந்துண்டாகும் புளிப்புள்ள நீருடன் கலந்து நரைநிறமாய்க் குழைந்தபாகமாய்ச் சமைந்துதுணைக்குக்கியுட்சென்று பித்தநீரு டனேயும் கணையநீருடனேயும் கலந்து பால்நிறபாகவும் மலமாக வும் மாருதலடைந்து துணைக்குக்கியும் கணையக்குழலையும் ஒத்து பொருந்தியிருக்கும் சிறுகுடலுக்குட்செல்லுகின்றன அச்சிறுகு டலுக்குள்ளிருக்கும் சிறுகுழல்களானது அந்தரசத்தைமட்டும்உ றிஞ்சிக்கொண்டு மற்றவைகளைகாரையெலும்புக்குப் பின்னலிருக் கிறநாளமென்னு சற்றுபெருத்த குழலுட்செலுத்தும் அங்ஙனம் சுவாசப்பையினதுநாளத்துடன்சம்மந்தப்பட்டுஅதோ முகமாய்

செல்லுகையில் சுவாசக்காற்ருகியபிராணவாய்வு மோதி இரத்தம் வேறு மலம்வேருய் பிரிந்து பெருங்குடலிற்சென்று மலாசத்தில் மலந்தங்கியகாலந்தோறும் பலப்பிரவிர்த்தியாகும் இரத்தமானது மேலுக்கேரி குழைகடோறும் சென்று உடம்பிற்பரவும்.

## இரத்த உருப்புகள்.

இரத்தாசயமென்னும் இரத்தப்பையானது கோழிமுட்டைக்கிணங்கிய உருண்டைவடிவாயும் சற்று நீண்ட உருப்பாயும் இரண்டுருப்புகளாய் இரத்தச்சவ்விஞல்சூழப்பட்டதாயிருக்கின்றது அவ்விரண்டு உருப்புகளுக்கும் கீழ்மேலும் இரண்டிரண்டறைகள் இருக்கின்றன. வலப்பக்கமாயிருக்கும் உருப்பின்மேலறைக்கும் கீழ் அரைக்கும் மூன்று சவ்விஞல் கபாடங்களும் இடப்பக்க உருப்பின் கீழ்மேலறைகள் இரண்டிற்கும் இரண்டு சவ்வுகளாற் கபாடங்களும் அமைந்திருக்கின்றது. வலது உருப்பின் கீழ் அரையிலிருந்து ஒருநாடியும் இடது உருப்பின் கீழரையிலிருந்து வளைவான ஒருநாடியும் கிளம்பி இந்த இரண்டுநாடிகளில் வலது உருப்பு நாடியானது இடது உருப்பு நாடியின் வளைவுக்கிணங்க சூழ்ந்து அங்கே இரண்டாய்ப்பிரிந்து ஒன்று வலதுசுவாசப்பைக்கும் ஒன்று இடது சுவாசப்பைக்கும் சென்றணுகும்.

## தந்துகி.

தந்துகியென்பது துவாரமுடைய சிறிய ரத்தக்குழல்களாம் அந்த இரத்த நரம்புகளானது மற்ற நாடிநரம்புகள்தோறும் ஓடியோடி இடையிடையே நின்று அவைகளுடன் சம்பந்தப்படும்

## இரத்த சுத்தோட்டம்.

கருமைநிறமான அசுத்த இரத்தமானது முன்கூறிய இரத்தாசய உருப்பின் வலதுபக்கத்தின் மேலறையிலிருந்து அதன் கீழரைக்குச்செல்ல அந்த நரம்பின் கிளைகளில்தாக்கி அதின்வழியாய்வலச்சுவாசப்பைக்கும் இடச்சுவாசப்பைக்கும் சென்றுமுடிக்கின்றன. அதன்பின்பு அந்த இரத்தமானது சுவாசப்பையினுள் சிறுகுழல்களால் உளுஞ்சிநிறம் மாறப்பெற்று செவ்விரத்தமாகி அவைகளின்வழியாய் இரத்தாசயத்தின் இடதுமேலறைக்

10

கும் கீழரைக்கும் செல்லுகின்றன அங்கிருந்து அதின்கிளை நரம்புகளின் வழியாய் சரீரமடங்கலும் செல்லும் சரீரமெங்கும் பின்னியிருக்கும் தந்துகியென்ற மெல்லிய சிறுநரம்புக்குழைகடோறும் பரவி உடலை சோபிக்கச் செய்யும்.

## இரத்த வொடுக்கம்.

கோழிமுட்டைவடிவாகியும் இரட்டையாயுமிருக்கும் இரத்தாசய உருப்பு இரண்டிற்கும் மேலரைகள் இரண்டுகீழரைகள் இரண்டு இந்நான்கில் மேலரைகள் இரண்டும் ஒரேகாலத்தில் விரியும்போது கீழரைகள் சுருங்குங் கீழரைகள் இரண்டும் ஒரேகாலத்தில் விரியும்போது மேலரைகள் சுருங்கும் ஆகையால் மேலரைகள் விரியும்போது இரத்தமானது பூரித்தெழுந்து கிளைநரம்புகடோறும் வியாபித்து சரீரமுழுமையும் பரவும் கீழரைகள் 2-ம் விரியும்போது வெளியோடிய இரத்தம்யாவையும் சென்றவழியே யிழுத்து இவையிருந்த இடத்தே கிரகித்துக்கொள்ளும் உடனே மேலரைகள் விரிவதினால் முன்சென்றபடியே செல்லும் சரீரம் சுகஸ்திதியிலிருக்குமளவும் இரத்தமானது இதேதொழிலாய்பரவிநிற்கும் அசுத்தக்காற்று முதலிய பிரதிகூலமாகிய அப்பியாசங்கள் செய்யுமிடத்து இரத்த நிறமும் ஓட்டமும் மட்டிடும் அங்ஙனம் சரீரத்திற்கானியாம்.

## வியர்வைகழிவு.

சரீரத்தில் எல்லாப்பகுதிகளிலும் பின்னலைப்போல் செரிந்திருக்கின்ற நுண்ணியகழல்களின் தலைப்புகளாயும் உடலிலும்உள்த்தோலிலும் குடலின் உட்சவ்விலும் சிறுசிறுபைகளாகவும் இருக்கும் மேல்தோலிற்றோற்றும் மயிர்கால்களே உள்தோலின் சிறுபைகளெனப்படும் இரத்தத்திலிருந்து உண்டாகும் அசுத்த நீர்கள் உள்தோலிலிருக்கும் கடுகைப்போன்ற சிறுபைகளில் தங்கி மேற்றோலில் காணப்படும் மயிர்க்கால்களின்வழியாய் கழித்துவிடும் அதை வியர்வையென்னப்படும் தோலின்வழியாய்க் கழியவேண்டிய வியர்வையானது அன்றாடம்கழியாவிட்டால் உடல் கனக்கும் ஜலதோஷம் சுரம் யிவைகளுண்டாகும்,

## உமிழ்நீர் கழிவு.

நெஞ்சரையிலும் வாயின் தாடையிருபக்கத்திலும் அதோமுகமாயிருக்கும் (உமிழ்நீர் கோளங்கள்டென்னும்) சவ்வுகளில்தங்

கும் உமிழ்நீரானது அன்றுடம் கழியவேண்டும் உமிழ்தல் கழித்தல் ஆகிய சமயங்கடோறும் அந்நீரைகழிக்காது உள்ளுக்கே கிரகிப்பார்களாகில் வயற்றுளைவு வாந்தி முதலியவையுண்டாம்.

## பித்தநீர்கழிவு.

மஞ்சள் நிறமாயுள்ள பித்தநீரானது ஈரலிலிருந்து சுரக்கின்றமையால் இந்நீரானது தன்வழக்கப்படியே ஈரலின்பக்கத்திலிருந்தெழுகின்ற குழல்களின் வழியாய்சென்று பெருங்குடலிற்சேர்ந்து மலாசயத்தில் விழுந்து மலத்துடன் வெளிப்படும் அப்படிக்கல்லாமல் ஈரலிலிருந்து வெளிப்படும்போது குழல்களின்வழியிலே தேனும் தடைப்படுமோயின் மேலுமேலும் சுரக்கும் பித்தநீருக்கிடமின்றி பித்தப்பையின் அளவுமீறுவதால் பித்தத்தினுல் வாந்தி ஓக்காளம் பசியின்மை இவைகளுண்டாம்

## அமுரிகழிவு.

உவர்ப்புள்ள அமுரியென்னும் மூத்திரமானது ஜெலாசயமென்னும் தண்ணீர்ப்பையினிடமாக யிருந்து பிரிந்தபோதிலும் கடைசியில் குண்டிக்காயின் வழியாய் தாக்கி உப்புரைக்கும்பாகமாகப் பேதப்பட்டு நீர்தாரையின்வழியாய் கழிக்கின்றது இவ்விதமாய் ஈரலிலிருந்தும் குண்டிக்காயிலிருந்தும் இரத்தத்திலிருந்தும் மயிர்க்கால்களிலிருந்தும் கழியவேண்டியவை கழியாவிட்டால் இந்த சரீரத்திற்கு பலவிதத்திலும் ஆபத்துகளுண்டாம்.

## கொழுப்பு.

கொழுப்பு யென்பது மிருதுவாகவும் வழவழப்புள்ளதாகவும் வெண்மையாகவும் சற்றுசிவந்தநிறமாகவும் இலேகளேப்போல அகலவடிவாயும் இடபேதங்களுக்குத் தகுந்தபடி கொடிபோலவும் இருக்கும் இந்தகொழுப்பென்னும் யிலேகளானது தலே-கழுத்து-முகம்-விலா-துடை-முதலிய இடங்களிலும் குடல்முதலிய புஜம் உள்ளுருப்புகளிலும் உருப்புகளின் அளவுக்குத்தக்கபடி கவசமிட்டதுபோல் சூழ்ந்து பொருந்தியிருக்கும் அவைகளில் சிலதுநேராகவும் சிலது இறகின் மயிர்களேப்போல் சாய்வாகவும் சென்றுசென்று தசையிலும் பொருந்தியிருக்கும் பின்னும் இந்த கொழுப்பு இலேகளானது யெலும்புகளின்மீது ஒன்று அல்லது

இரண்டாகவும் மற்ற இடங்களில் நாலுஐந்து அடுக்குகளாகவும் மெல்லியவெள்ளைசவ்வினால் விரிக்கப்பட்டுதோலையடுத்திருக்கும்.

### குழந்தைகட்கு.

குழந்தைகட்கும் வாலிபர்கட்கும் ஸ்ரீகளுக்கும் இவர்களுடைய உடம்பில் இந்தகொழுப்பானது அதிகமாயிருக்கின்றது ஆகையால் அவர்களுடைய திரேகம் திரண்டு புஷ்டியாயிருக்கின்றது வயது முதிர்ந்தவர்களுக்கு கொழுப்பு குறைவாகின்றமையாலும் அல்லது வியாதிவந்தகாலங்களிலும் ஜீரணசக்தியற்று போஜனம் குறைவாகின்றபடியாலும் அந்தகாலங்களில் இந்தசரீரமானது கொழுப்பினால் போஷித்துக்கொள்ளப்படுகிறது அத்தருணங்களில் கொழுப்புகரைந்து இரத்தமயமாகி மாறுவதினால் முகம்சுருங்கிகண்தாழ்ந்து எலும்புகள்யாவும் வெளிப்படையாய் தோன்றும் தேகம் இளைத்துப்போச்சுதெனச் சொல்லிக்கொள்வார்கள்.

## தோல்.

இந்தசரீரத்தை முழுமையும் கவசமிட்டதுபோல் சூழ்ந்து மூடிக்கொண்டிருப்பது தோல் பூமியுண்ட நீரின்பசுமையை கிரகித்த தாபரங்களானது தன்னுருமுழுமையும் தத்தமக்குடையதானபேதத்திற் கிணங்கி பளபளப்பும் மினுமினுப்பும் பசுமையும் அழகும் விளங்கிபார்ப்பவர் கண்களுக்கும் மனதிற்கும் இச்சையுண்டாக்குவதைப்போல் இந்த சரீரபோஷணைக்கும் வளர்ச்சிக்குமாக கடவுளால் அமைக்கப்பட்ட மூலத்தீயென்னும் பஞ்சதீபாக்கினியினாவேசத்தால் நாம் அன்றாடம் உட்கொள்ளும் அன்னபானாதிகளின் சாரங்களை சரீரத்தின் முழுமையும் எப்பகுதியிலும் வியாபித்துப் பின்னலிட்டபோற் செறிந்திருக்கும் சிறுகுழல்களின் வழியாய் மேற்படி அன்னையான சாரங்களை தோலானது கிரகித்து கருமை செம்மை வெண்மைமுதலிய பலவர்ணங்களுக்கிசைந்து பசுமையோடு மேனிவிளக்கிக்காட்டுவதால் எலும்பு தசை நிணம் குடல் கொடி இரத்தம் சீழ்ஜெலம் அழுரிமுதலியவை அடங்கிய குப்பைக்கிடங்காகிய தேகமானது சரீரம்யென்ற மரியாதைப் பெற்று ஒருவர்க்கொருவரை மதிக்கவும் பிரீதிப்படவும்வயதுக்கிசைந்த அழகும் அந்தமும்கொடுத்து மாறுகின்றது இந்த சரீரம் பெறக்கூடிய யெல்லா மரியாதைக்கும் தோலே காரணமாக விருக்கின்றது.



தோலின் தொழிலுரைத்தலால் பின்பார்வை காட்டியது.

தோல் என்பதில் வெளித்தோல் உள்தோல் என இருவகுப் பாயிருக்கின்றது வெளித்தோலானது உள்தோலிலுள்ள சிறுகு ழல்களால் மேனியெங்கும் கக்கிவிட்ட நீராலும் தசையின் மெல் லிய சவ்வினாலும் அமையப்பட்டது இந்த வெளித்தோலின்மீது உஷ்ணமும், பனியும், காற்றும் படுவதாலும் வரட்சியாகின்றன உஷ்ணமும், பனியும், காற்றும் படுவதாலும் வரட்சியாகின்றன அதாவது பச்சிலைமூலிகைகளை நிழலுலர்த்தல் செய்வதுபோல் உலர்ந்துக்கொண்டே யிருப்பதாலும் வெளித்தோல் பெலனுக யிருக்கின்றது தசையைப் பொருந்தியிருக்கும் உள்தோலானது மிகவும் மெல்லியதானதும் மிகவும் வெண்மையானதுமாயிருக் கும் அந்த உள்தோலிலிருந்து வெளித்தோல்வரையில் இடையில் அனேக அடுக்குகளுண்டு அதற்குத் திருஷ்டாந்திர மென்னவெ னில் தேகத்தினிடமாக யாதாமொரு கட்டி அல்லது கொப்பிளம் கிளம்புமாயி னவைகளுக்கிசைந்த சிகிச்சைசெய்து உடைத்து உலர்த்துமளவில் அவற்றின் மேற்றோல் உரிந்துகாட்டும்போது அதற்கடியில் மற்றொரு தோலிருக்கின்றது ஆகையால் உடலைச் சேர்ந்த மாமிசத்தின்மீது தோலின் அடுக்குகள் அனேகமிருந்த போதிலும் மயிர்களும் நிகங்களும் மேற்றோலைக்கொண்டே முளை க்கின்றது பலமான அடிகாயம் வேக்காடுகண்டு மேற்றோல் கழன் றால் நிகங்களும் மயிர்களும் கழன்றுவிடும்.

உள்தோலில் நாடிகளும் நாளங்களும் இரத்த அணுக்களைத் தோலுக்குப் புகட்டும் சிறிய இரத்தக்குழல்களும் உள்தோலைப் பற்றியிருக்கின்றது ஆகையா லிந்ததேகத்தில் எந்தயிடத்தில் குத்தினாலும் இரத்தம் வெளிப்படும் மேல்தோலில் வெளியேமு ளைத்திருக்கும் மயிர்களும் மயிர்க்கால்களோறும் கடுகைப்போ ன்ற வியர்வைப்பைகளிருப்பதினால் தேகத்தின்மேலே பூசும் தை லங்கள் முதலியவை உள்ளுடம்பில் ஊரி இரத்தத்துடன் சேறு கின்றன வெளித்தோலின் தொழில் யாதெனில் தேகத்திலுள்ள யெல்லாப் பகுதிகளையும் மூடிக்கொண்டு விஷக்காற்று முதலான வை இரத்தத்தில் கலவாமல் தடுத்துக்கொண்டிருப்ப தன்னியில் தேகத்தோடு மற்றொருதேகம் சாரும்போது அப்பரிசத்தாலுண் டாகும் ஆரோக்கியத்தை உள்தோல்முதலிய பலகருவிகளும் மணர்ந்து பூரித்துமனதுக்கு இன்பத்தையுண்டாக்கும் மேல்தோ லிலுள்ளவேர்வைகோளங்களால் வியர்வையும் நிணக்கோளங்கள்

வழியாய் நிணங்களும் கழிக்கின்றது இவ்விரண்டும் உதிரத்திலிருந்துகழிக்கின்றமையால் உதிரமும் தேகமும் சுத்தியாகின்றது

## புத்திரசெல்வம்.

எல்லாப் பிறவிகளிலும் மானிடப்பிறவியே அருமையானது இந்த அருமையான மானிடபிறவிக்குப் பலித்திருக்கும் எல்லாச் செல்வங்களைவிட புத்திரசெல்வமே மேலானது பெண்களுக்கு யிசைந்த நகை நாணயம் முதலியவற்றில் ஒன்றின்மேலொன்று விசேஷமாய்க்கிடைத்தால் வெறுப்படைவார்களேயன்றி பலபணியும் அணிந்துக்கொள்ள விரும்பார்கள் பிள்ளைகள் மாத்திரம் எத்தனை பிறந்தாலும் அதுகளை வளர்க்கும்பொருட்டு இரவும் பகலும் கண்விழித்து பத்தியம்பிடித்து பாலூட்டி தாலாட்டி சீராட்டி மையிட்டு பொட்டிட்டு ஒன்றுக்கொன்று சிங்காரமான பெயர்களிட்டு அழைக்குந்தோறும் ஆசைமேலிட்டு அதுகளின் பாஷையான ஓசையைக்கேட்டு அடிக்கடி பேசவைத்திருப்பார்கள் ஆகவே கடந்தஞானியும் கடப்பரோமக்கண்மேற் காதல்யென ஆன்றோரும் அறைந்திருக்கின்றனர் இவ்வித நீங்காச்செல்வமாகிய குழந்தைகள் சீரசுகத்துடனிருந்தால் மாத்திரம் தாய்க்கும் தந்தைக்கும் மனக்கவலையின்றி தாங்களும் சுகஸ்திதியிலிருப்பர் அன்றியும் அக்குழந்தைகளால் பெற்றோர்க்கு ஆனந்தமும் பின்னுக்குதவுமென்ற இருமாப்பும் மனப்பூரிப்பும் பெற்று தினந்தினம் சந்தோஷமே யடைவர் அப்படிக்கின்றி பிள்ளைகளானது மாந்தம், சுரம், வாய்வு, சூடு, இசுவு, கணம் இன்னுமுள்ள பல வியாதியால் அவஸ்தைப்படுமாயின் அக்குழைந்தைகளால் தாய் தந்தைகள் படும் திரிச்சலும் அலைச்சலும் மனநோயும் பணச்சிலவும் குணயீனமும் முதலிய அவஸ்தைகள் அனேகமுண்டு.

## நோய்க்குக் காரணம்.

மேற்கூறிய அருமையாகிய புத்திரசெல்வங்களுக்கு நோய் வரவேண்டிய காரணம் எப்படியென்று விசாரிக்குமளவில் தாய் தந்தை இருவர்களே காரணமாக விருக்கின்றனர் தாய்தந்தையர் நோயின்றி சுகசரீரிகளாயிருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளும் நோயின்றியிருக்கும் ஆனல் தாய்தந்தையருக்குமாத்திரம் வியாதி எங்ஙனமிருந்து தொடர்ந்ததென்றால் அதற்கனேக காரணங்களுண்டு அக்காரணங்கள் முழுமையும் விரித்தெழுத

வென்றால் நீண்ட பெருநூலாகுமாகையால் முக்கியமான சிலகார ணங்களை மாத்திரம் எடுத்துக்காட்டுவோம் அதாவது இந்த சரீ ரசௌக்கியத்திற்கு காற்றும் ஜலமுமே ஆதாரமாயிருக்கின்றது ஆகாரமில்லாமல் சிலநாள் இருந்தாலு மிருக்கலாம் காற்றில்லா மல் ஒருநாள் இருக்கமுடியாது மிகுந்த பலசாலியானாலும் நல்ல காற்றில்லாமல் இருப்பானாயின் அதிகசீக்கிரத்தில் வியாதிக்கிட மாகும் வெளிப்படையாய் சஞ்சரிப்பதற்குமாத்திரம் காற்று ஆதாரமென்று நினைக்கக்கூடாது இந்த சரீரத்தின் உட்பகுதியி லுள்ள எல்லாகருவிகட்கும் காற்றேகாரணமாக யிருக்கின்றது இதுவுமன்றி இந்தசரீரத்திற்கு பிராணனும் ஆயுசுமாயிருக்கபட் டதுங் காற்றேயன்றி வேறில்லை நமது மூக்கின்வழியாக சூரிய கலை சந்திரகலையென்னுங் காரணப்பெயருடையதா யிராப்பகல் கூடிய அறுபதுநாழிகைக்குள் இருபத்தோராயிரந்தரம் உள்ளும் புறமுமா யோடியோடி நுழைவதுசுவாசம் சுவாசமென்பது காற் றென்றே சகலருமறியலாம் ஆகையால் (உள்ளுக்குவந்தால் மூச்சு வெளிக்குப்போனால் போச்சு) என்னும் பழமொழியும் உண்டு அன்றியும் (மூச்சற்றான் பேச்சற்றான்) என்பதை பிரத்தியட்சத் தில் பார்த்துவருகின்றோம் ஆகையால் இந்தச் சரீரத்திற்கு காற் றே காரணமாக யிருக்கிறபடியால் ஒருவர் சுவாசிக்கிற காற்றை மற்றொருவர் சுவாசிக்கப்படாது அவை எப்படியெனில் ஒரு சிறிய அறையில் அனேகர் படுப்பதினாலும் அந்தயிடத்தில் வெ ளிக்காற்று பிரவேசியாதபடி ஜன்னல்கதவு முதலியதை அடை த்துவிட்டு படுப்பதினாலும் ஒருவர்விடும் சுவாசக்காற்று மற்றொரு வர் சுவாசிக்க நேரிடுகிறது அப்படி ஒருவர்காற்று ஒருவர்நாசிக் குப் புகுமளவில் உடனே வியாதிக்குக்காரணமாகிறது இதுமன்றி ஜீவஜெந்துக்கள் விடும் சுவாசக்காற்றானது மனிதருக்கு மிகவும் மெலிவுநோய் முதலியவற்றை யுண்டாக்கும் விஷத்திற்கீடான தாகையால் அக்காற்றுகள் வெளி ஆகாயத்துடன் கலந்து மரம் செடி இவற்றிலுள்ள இலைகளில்மோதி வெளிப்படுமாயின் அசுத் தக்காற்றிலுள்ள விஷவேகங்களைச் செடி கொடி மரம், இலைமுத லியது உறிஞ்சி யெடுப்பதினால் அக்காற்று சுத்தியாகப்பட்டுவரு கிறது ஆகையால் நாம் வசிக்குமிடம் சுத்தக்காற்றுள்ளதா இரு க்கவேண்டும் அதாவது சற்று விசாலவிடம் பெற்றதாயும் செடி, கொடிமுதலிய தாபரங்களுள்ளதாகவு மிருக்கவேண்டும் இந்த நற்பழக்கம் அங்கிலேயரிடத்தி லிருப்பதால் பெரும்பாலும் நோ யற்றிருக்கின்றார்கள்.

# துற்பழக்கம்.

நோய்வருவதற்கு தாய்தந்தையரே காரணமாயிருக்கின்றா ரென்பதற்கு சிலதிருஷ்டாந்திரங்கள் உண்டு (அதாவது) மேற் கூறிய அசுத்தகாற்று சஞ்சாரத்தினாலும் சில தாய்தந்தையர் லாகிரிவஸ்துக்க ளனுசரிப்பவராய் அக்காலங்களில் புணர்ந்து கருதரிக்குமாயின் அந்த குழைந்தைகள் எப்போதும் தேறாது தந்தை குடியனாகவிருந்து லாகிரியானது மூளை வரண்டு யிருக் கையில் போகித்துப் பிறக்குமாயின் அக்குழந்தை என்றும் நோ யாளியாகவே யிருக்கும் அல்லது இரவுபகலேன்றிராது மிருகப் புணர்ச்சிப்போல் அடிக்கடி புணர்ந்து விந்து நீத்து அளவுமீறிய வேட்கைகாலத்தில் கருதரிக்குமாயின் அக்குழந்தை தேறாது முற்றும் பெலயீனமாகவே யிருக்கும் இவைநிற்க ஸ்திரீயும் புரு ஷனும் 10-மாதத்திற்கொருமுறை புணர்வார்களாகில் நூற்றிரு பதுவயது வரையில் சீவித்திருப்பார்களென்று ஆயுள்வேத சித் தாந்த மறைகின்றது அவ்வளவு கடினமில்லாமல் மாதத்திற்கு இரண்டுவிசை புணர்ச்சிசெய்யலாமென்று சில இல்லறசித்தாந் தங்களில் கூறியிருக்கின்றது. இந்த இருவிதயேற்பாட்டையும் கைவிட்டு கடிதடமே மோக்ஷலோகமாகப் பாவித்து வேறுவிஷய த்தில் இவ்வளவுநோக்கம் வைத்தார்களில்லை விந்துவிட்டையோ நொந்துவிட்டையோ என்னும் பழமொழிக்கிணங்க விந்துவிட் டால் உடம்பெல்லாம் வெந்துப்போகும் வீரியமுமற்று உடல் மெலிந்ததோலாம் என்று பெரியோர்களும் கூரியிருக்கின்றனர் சுரப்பது உழக்கு இறைப்பது பதக்கு என்பதுபோல் இரவும் பகலும் இதேவேலையாயிருந்தால் நாமும் நமது பிள்ளைகளும் யெங்கனம் கடைத்தேறுவது உலகம் ஜீர்ணமாவதுபெண்களால் என்று சொல்லுவார்கள் அதுபோல் நன்மனைதோறும் பெண்டி ரைப்படைத்து நமனையென் செயப்படைத்தானென்றும்.

> திண்ணமிரண்டுள்ளே சிக்கவடக்காமல்
> பெண்ணின்பால்ஒன்றைப்பொருக்காமல்-உண்ணுங்கால்
> நீர்கருக்கிமோர்பெருக்கி நெய்யுருக்கியுண்பவர்தம்
> பேருரைக்கிற் போமோபிணி.

இன்னும் பலவிதத்திலும் நாம் சுகப்படுமாறு பெரியோர்கு ளாலியன்றமட்டும் சுட்டிச்சொல்லி யிருக்கின்றனர், இப்படி யெ

த்தனை விதத்தில் சொல்லியிருந்தபோதிலும் அந்தச்சமயத்தில் படிக்கும்போதுமாத்திரம் பகுத்தறிந்துக்கொள்கின்றனர். பிறரு க்கும் போதிக்கமுயலுவார் படித்தபுஸ்தகம் மடித்தவுடன் பழய குருடி கதவைத்திறடி யென்றதுபோல பழையபடியே தங்கள் தங்கள் விவகாரத்தில் பொழுதுமுடிகின்றது. தாய்தந்தையரே யிப்படியானல் இவர்கட்குப் பிறக்கும்பிள்ளை எங்ஙனம் பலசாலி களாயிருக்கும் (வித்தொன்று போட்டால் செடியொன்று முளை க்குமா) என்பதுபோல முன்னேறுபோனவழி பின்னேறு நடக்கு மேயன்றி வேறுவழிசெல்லாது தாங்கள்தான் இக்கெதியென்ருல் தமது பிள்ளைகளையாவது மின்னுக்குக் கொண்டுவருவார்களென் ருல் அதுவுமில்லை நமதுமுன்னோர்களால் அனுஷ்டித்துவந்த இல் லறதருமமும் குலரச்சார ஒழுங்கும் பெண்களுக்கும் பிள்ளைகட் கும் நடத்தவேண்டிய கலியாணகால நிர்ணயமுங் கைசோர்ந்து விட்டார்கள் (பிர்ம்மா நினைத்தால் ஆயுசுக்குக் குறைவா) என்ப துபோல பொருளுள்ளபுண்ணியவான்களும் பணமில்லாதஏழை களும் தங்கள் பிள்ளைகளைத் தாங்களே வலிவிற் கெடுத்துவிடுகி ரூர்கள். அது எப்படியெனில்.

குணமிருந்தாலுங் குலமிருந்தாலுங் கொழுந்துதமிழ்
பணமிருந்தாலும் மதியிருந்தாலும் வழுத்திடுவங்
கணமிருந்தாலும் ஓர்காசும் பெறுரவரைப்
பணமிருந்தா லவர்க்கெல்லாரு மஞ்சலிப்பண்ணுவரே.

என்னும்செய்யுட்படி பணமிருக்குமாயின் பந்துக்களும் மே விட்டிருப்பார்கள் பலஜெனங்களும் நீங்காது தாங்கிக்கொண்டி ருப்பார்கள் அத்தருணத்தில் காலத்திற்கேற்ற கோலமென்பது போல் பிள்ளை பிறந்தநாள்துவக்கி என்பெண்ணைக் கட்டவேண் டும் உன்பெண்ணைக்கட்டவேண்டுமென்றுங் கன்னியாதானமாகக் கட்டவேணுமென்றும் பெண்ணைக்கொடுப்பதுடன்பொன்னையுங் கொடுத்துத் தன்ஞல் செய்விக்க முயலுவார்கள் ஆம் ஆம் இது தான் தருணம் இவ்வளவு சிறுவயதில் கலியாணஞ்செய்வதே கண்ணுக்கழகு என்று தூண்டிக்கொடுக்கவும் வேண்டியபேரிருப் பார்கள் அக்காலையில் பிள்ளைவயதுக்கும் பெண்வயதுக்கும் தார தம்மியம் பார்ப்பார்களா அதுகிடையாது ஒருவயது குறைந்தால் போதுமானது என்பார்கள் பொருத்தம் சரிப்படாவிட்டாலோ

பேர்மாற்றிவைத்துக் கொள்ளுவார்கள் இப்படியே பலமுகாந்திரத்திலும் பணக்காரர் கலியாணத்திற்குத் தடையே கிடையாது.

ஏழைக்கலியாணமென்றாலோ இப்பொழுதே இந்தகெதியாயிருக்கின்றேமே பந்துக்கள்யாரும் சட்டைபண்ணுவாரில்லையே அரிசியென்று அள்ளிப்பார்ப்பாரில்லையே உமியென்று ஊதிப்பார்ப்பாருமில்லையே தாய்தந்தையென்ற நாங்கள் இரண்டு பட்சிகளும் கண்மூடிக்கொண்டால் இந்த பிள்ளைக்கு நிற்கநிழலுண்டா நினைக்கத்துணையுண்டா பார்த்தமுகமெல்லாம் வேற்றுமுகமாயிருக்குமே தடுத்துவிழுந்தால் யெடுத்து விடுவாரில்லையே யென்று இன்னும் பலவிதமாய் அல்லும்பகலும் விசனமேலிட்டு கண்டயிடமெல்லாம் கலியாணப்பேச்சேபேசிக்கொண்டு இவனுக்கென்னவயது வரவில்லையா இந்தகாலத்துப்பிள்ளைகளுக்குச் சொல்லவேணுமா பெண்சாதியிருந்தால் பிள்ளைபெறமாட்டானா அதோ அந்தவீட்டுக்காரன் செய்யவில்லையா அவனும் ஒரு பிள்ளைக்குத் தகப்பனாக வில்லையா அவனீடுதானே நமது பையனும் இனி சும்மாயிருக்கக்கூடாது எந்தபாடுபட்டாவது நமது கண்ணிருக்கும்போதே கலியாணம் செய்துவிட்டால் எங்கள் கடன் கழிந்துவிடுமென்று பிடிவாதமேலிட்டு ஏதாவது கொஞ்சம்நஞ்சம் உள்ளதை விற்றாவது வட்டிக்கி வாங்கியாவது எப்படியாவது முடிக்க முயலும்போது கந்தைக்குத்தகுந்த பொந்தையென்பதுபோல் கட்டுவாரில்லாமல் விட்டதாவதுவேலைநீற்ற வெட்டிச்சாக்காவது மற்றும் எந்தவிதத்தாலாவது சந்தித்ததே சமயமென்று கொட்டிமுழுகிக் கட்டிமுடிப்பார்கள் இவர்களுக்கு பொருத்தம்பார்ப்பது பெருத்தவேலையே யல்ல. பிள்ளைகளுக்குமேல் 1-2 வயது மூத்த பெண்ணாயிருந்தாலும் பெண்வீட்டார்சொல்லும் வயதே நிச்சயமாய் நம்புவார்கள் பெண் உயரமாயிருக்குதென்றால் வளர்த்தி யென்பார்கள் தடித்திருந்தால் ஸ்தூலதேகமென்பார்கள் இப்படியே எவ்விதத்திலும் ஒவ்வச்சொல்லி காரியத்தைமுடித்துவிடுவார்கள் இவ்வாறு ருதுஜாதகம் ஜெனனஜாதகம் பொருத்தம் வயது யீடு குலசம்மதம்யாதுமின்றி ஒருமைப்பட்ட ஸ்திரீயும் புருஷனும் எலியும் பூனைபோலபலநாளும் கவலைப்படும் துன்பங்களை இங்ஙனம் விரித்தெழுதயிடமின்மையால் இம்மட்டில் விடப்பட்டது வியாதிவருவதற்கு இதுவும் ஓர் முக்கியமானகாரணமேயன்றி வேறில்லை.

# விவாகவிதி.

கசு-வயதுள்ள ஸ்திரீக்கும் நய-வயதுள்ள புருஷனுக்கும் விவாகம் முடிவிக்கவேண்டுமென்பது தருமசாஸ்திர பிரமாண மென்றறிக. சிலமதத்தினர் புஷ்பிணியாவதற்கு முன்னம் கல்யா ணஞ்செய்வதுமுண்டு அப்படி செய்யினும் 10-12-15 வயதிற் குள் புஷ்பிணியானலும் 16-18-வயதுவரையில் புருஷனுடன் புணரவொட்டாமல் காப்பாற்றவேண்டியது தாய்தந்தையற்கு முக்கியமான கடமையாகும் அதேனெனில் புஷ்பிணியானபிறகு 2-3-வருஷமட்டிலும்யிணங்கர்திருந்தால் கருக்குழிமுதலிய உட் கருவிகள் யாவும் வளர்ந்து விசாலயிடம்பெற்றும் வலிவடைந்து மிருக்கும் கருதரித்தாலும் சட்டைபண்ணமல் தாங்கும்படியான முதிர்ச்சிபெறுமென்பது கருத்து. இவ்விதியின்படி நடப்பவர் ஆங்கிலேயரே யாதலின் 16 18 பிள்ளைகள் பெற்றும் ஷ பெண் களும் புருடர்களும் மிகுந்த பலசாலிகளாகவும் சர்வ தொழின் முறையிலும் சாதுரியவான்களாயும் புத்தியுத்தியில் புனிதராயும் இளமையில் மரணமில்லாதவராயும் செழித்திருப்பது யேற்கென வே திர்ஷ்டாந்திரத்திற் றெரியவருகிறது.

---

☞ விவாகத்திற்குரிய அஷ்டவிவாக லட்சணமும் நான்குவித ஆசிரமதர்மங்களும் பிராயச்சித்தவிதிகளும் யிதுர்கர்ம விதிகளும் சூதகவிதிகளும் இல்லறத்திற்கு வேண் டிய சர்வமத ஆசாரவிதிகளும் இன்னும் பலவித ஏற்பாடுகளும்

பிரபஞ்ச உற்பத்தியென்னும்

சாஸ்திரத்தில் விபரமாய்க்

காணலாம்.

---

இப்புத்தகம் வாங்குபவர்க்கு

பிரதியுபகாரமாகயெழுதிய

# சரீரசுகபோதினி.

## மூளைக்கும் கண்களுக்கும்.

| | |
|---|---|
| வில்வப்பழத்தின் சதை | 4-பலம் |
| கார்போகியரிசி | 1-பலம் |
| வெந்தியம் | $\frac{1}{2}$-பலம் |
| வெள்ளைமிளகு | $\frac{1}{4}$-பலம் |

இவைகள் நான்கும் பசும்பால்விட்டுவெண்ணைபோல் அரைத்து அரைவீசை நல்லெண்ணையுடன்கலந்து அடுப்பிலேற்றி சிறுதீயாக யெரித்துக்கொண்டு வருகையில் முன்பு அரைத்துக்கலந்த மேற்படி சரக்குகள் யாவும் திரண்டு அடியில் நின்று மெழுகுபதமாக யிருக்கையில் இறக்கி தைலத்தைவடித்து ஆறியபிறகு சீசாவில்விட்டு கார்க்கடைத்து சீலைமுதலியதுகளால் வாய்ப்புறத்தை பந்தோபஸ்தாகக்கட்டி பூமியில் குழிதோண்டிப்புதைத்து 20-நாள் சென்றபிறகு யெடுத்துக் கொள்ளவும்.

இந்தத் தைலத்தை வாரத்திற்கொருமுறை ஸ்நானஞ்செய்துவந்தால் மூளைகொதிப்பு அடங்கும் மூளைக்குக் குளிர்ச்சியுண்டாகும் மூளைகொதிப்பினல் மனிதருக்குண்டாகும் பித்தமயக்கம் புத்திமாருட்டம் கபாலச்சூடு முதலியவை நீங்கும் கண்களுக்கு குளிர்ச்சியுண்டாகும் கண்ணெரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் அருவருப்பு முதலியவைகள் நிவர்த்தியாகும்.

இந்தத்தைலம் காய்ச்சுவது மண்பாண்டமாயும், நல்லெண்ணையில் ஊரியதாயும், வாய் அகண்டதாயு மிருக்கவேண்டும். செப்பு, பித்தளைமுதலிய லோகபாத்திரங்களாகாது.

இந்தத் தைலத்தை விரும்பியவர்கள் அதிகாலையில் ஸ்நானஞ்செய்யவேண்டியது அன்றுமுழுதும் கையெழுத்துவேலைகள், சித்திரவேலைகள், புத்தகம்வாசித்தல், கால்நடை, நித்திரை, அதிககுளிர்ச்சியான வஸ்துக்கள் முதலியவைகள் ஆகாது பத்தியமில்லை.

## பல்லுகட்கு.

| | |
|---|---|
| மொகடம் யிலை | 5-பலம் |
| வீட்டுப்பு | 2-பலம் |

இவ்விரண்டிற்கும் போதுமான புதுகலசம் ஒன்றுகொண்டு வந்து அதற்குள் ஓரடுக்குயிலை அதற்குமேல் கொஞ்சம் உப்பும் மறுபடியும் இலை அதற்குமேல் உப்பு இப்படியே இலையும் உப்பு மாகக்கலந்து கலசத்தின்வாய்ப்புறமட்டில் அழுத்தமாகப் பொதிந்து மேலோடுமூடி புத்துமண்ணால்கவசம்செய்து அதற்குமேல் மூன்று மண்சீலைகள்செய்து உலர்ந்தபிறகு அரைகெஜம் சதுரக் குழியில் புடம்போட்டு மறுதினமெடுத்து சீலையும் கவசமும் நீக்கிவஸ்துவைமாத்திர மெடுத்து கலுவத்தில் பொடித்துவைத்துக் கொண்டுபிரதிதினமும் பல்துலக்கிவந்தால் பற்களானது மிகவும் கெட்டிப்படும் ஆடுகிறபற்களானாலும் இருகிவிடும்.

## நரம்புகட்கு.

| | |
|---|---|
| தாளகம் | விராகனிடை 10 |
| நெல்லிக்காய்கெந்தி | ,, 1 |

இவ்விரண்டையும் கலுவத்திலிட்டுமெல்லியபொடியா யரைத்து சிறிய புதுகுடுவையிற்போட்டு கரிநெருப்பிலிட்டு ஊதவும் 1, 2 நிமிஷத்திற்குள் மெழுகுபோல் உருகிவரும் அப்படி உருகிய சரக்கை தென்னம்யீர்க்கினால் கிளறி அவ்வீர்க்கைத்தூக்கும் போது மேற்படி சரக்கானது நூலிழைபோல் நீண்டுவரும் அந்த சமயத்தில் இறக்கிவைத்து ஆறியபிறகு மருந்து ஒட்டாதிருக்கும் வெற்றோடுகளைத் தட்டிவிட்டு மருந்து எவ்வளவுதூரம் ஒட்டியிருக்கிறதோ அவ்வளவு ஓட்டுடன் கல்வத்திலிட்டு ஒருஜாமம் அரைத்து சீசாவில்போட்டு வைத்துக்கொள்ளவும். இதினுடைய நிறமும் ஊட்டமும் பிரகரசமும் தங்கச்செந்தூரத்திற் கிணையாயிருக்கும்.

இந்தச் செந்தூரத்தை அருந்த விருப்பமுடையவர்கள் இரவில்போஜனஞ்செய்துவிட்டு படுக்கும்போது தாம்பூலந்தரித்துக் கொள்ளவேண்டும் அப்படி தாம்பூலந்திண்ணும்போது ஒருவெற்றிலையில் முழுதுவரையளவும் ஷை செந்தூரம் முழுக்டலையளவும் ஜாதிக்காய்த்துண்டு, மேல்மொட்டுநீக்கிய தனிலவங்கம் ஒன்று இம்மூன்றையும் ஒருவெற்றிலையில் மடித்து வாயிலிருக்கும் தாம் பூலத்துடன் மென்று தின்றுவிட்டு உடனே அரைநாழிகை கழி

த்து கால்படி பால் சாப்பிடவேண்டியது இப்படி இரவில் ஒரே வேளையாக 10-நாள்சாப்பிடவும் அல்லது 15-நாள்சாப்பிடவும் இதற்கு யாதொரு பத்தியமுங் கிடையாது எல்லாமரக்கறிகளும் கீரைவகைகளும், பருப்புவகைகளும், மாமிசவகைகளும், பால், தயிர், மோர், நெய், ரொட்டிமுதலியதுகளும் சாப்பிடலாம் கள் சாராயம் முதலிய லாகிரிவஸ்துக்கள் மாத்திரம் ஆகாது.

இந்தச் செந்தூரத்தாலடையும் பிரதியுபகாரம் யென்னவெனில் தேகத்திலுள்ள யெல்லாநரம்புகளின் சோர்வையும் நீக்கி நல்லவலிவையுண்டாக்கும் எல்லாநரம்புகளின்முடிச்சியாம் பெருநரம்பாயுமுள்ள ஆண்குறியின் தளர்ச்சியைநீக்கி போகசக்தியை மேலிடச்செய்யும் இந்தச்செந்தூரமரனது உடம்பில் வியாபித்து ஊருமிடத்து தன்னிறம்போலவேதேகத்தை பொன்னிறம்போல் மினுமினுப்பாய் பிரகாசிக்கச்செய்யும் (அதாவது) தேகத்திலும் முகத்திலும் சிவந்தகளையையுண்டாக்கும்.

மேற்கூறிய இவ்வளவுபலனும் கொடுக்குமாவென்பதற்கு அடையாளம் யாதெனில் இந்தச் செந்தூரத்தை தீன்ன ஆரம்பித்தவர்களுக்கு இதற்குமுன்னிருந்த தேகஸ்திதியும் ஜீரணசக்தியும் தங்களுக்கே தெரியும் அன்றியும் பிரதிகாலையிலும் மலவிர்த்திக்கு உட்காரும்போது மலமென்றயாவும் ஒரேகம்பியாகப் பிரவிர்த்தியாகி விடும்.

இந்தச்செந்தூரத்தைத் தின்பவர்கள்சுமார் இரண்டுமூன்று மாதகாலம் ஸ்திரீசம்போகம் செய்யாதிருப்பாராகில் அனேகவருடங்களுக்கு தாதுபுஷ்டி குறையாதிருக்கும் சுரம் முதலிய ஜலதோஷ வியாதிகள் அணுகாது.

# உள்ளுருப்புகட்கு.

| | | |
|---|---|---|
| சதகுப்படைக்கிரை | விராகனிடை | 8 |
| நற்சீரகம் | ,, | 8 |
| கருஞ்சீரகம் | ,, | 8 |
| சன்ன இலவங்கப்பட்டை | ,, | 8 |
| மகிழம்விரை | ,, | 8 |
| அதிமதுரம் | ,, | 8 |

| | | |
|---|---|---|
| தேத்தான்கொட்டை | விருகனிடை | [illegible] |
| கொத்தமல்லிவிதை | ,, | 48 |
| சீனிச்சர்க்கரை | ,, | 96 |

இவற்றுள் சதைகுப்பிக்கீரையை நிழலுலர்த்தலாக உலர்த்தி யிடித்து வஸ்திரகாயஞ்செய்துமேற்படி இடைபிரகாரம் நிறுத்தி யெடுத்துக்கொண்டு சீனிச்சர்க்கரை நீங்க மற்ற சரக்குகளையும் இவ்வாறே யிடித்து வஸ்திரகாயஞ்செய்து நிறுத்தி யெடுத்துக் கொண்டு யாவும் ஒன்றாகக் கலந்து வாயகண்ட குண்டுச்சட்டி யில் ஒருபடி பசும்பாலும், ஒருபடி ஜலமும்விட்டு வாய்ப்புறத் தில் சலவைத்துணியினால் கவிழ்த்து மூடி அடுப்பிலேற்றி பாலு டன்விட்ட ஒருபடி ஜலமுஞ் சுண்டுகிறவரையில் எரித்தால் சூர் ணம் சுத்தியாகிறது பிட்டவியல்செய்த சூரணத்தை யெடுத்து பீங்கான் தட்டில் பரப்பி நிழலிலுலர்த்தி யெடுத்து சீனிச்சர்க்க ரையைக் கலந்து வாயகண்ட சீசாவிற்போட்டு வைத்துக்கொள் ளவும்.

இந்தச் சூரணத்தை விரும்புகிறவர்கள் ஒருவேளைக்குக் ஒருதோலா அல்லது கால்ரூபாயிடை சூரணத்தை யெடுத்து ஒரு ஒயின்கிளாஸ் அளவு வெந்நீரிற் கலந்துசாப்பிடவும் இப்படி காலைமாலைகளில் சாப்பிடவும் இதனால் தலைமூளை வித்தியாகிப லப்படும் இராஜகருவியாகிய பெரியமூளையினிடத்து யாதொரு வியாதியும் உண்டாகாது, கண்கள் சுத்தியாகும், கண்களில் நீர்வ ருதல், கண்மங்கல், மாசி படருதல் இவைகள் அணுகாது கண் கள் பிரகாசிக்கும் இருதயம் திடப்படும் இருதயத்தில் சந்தோ ஷம் பிறக்கும் ஈரல் குடல்களிலுள்ள அசுத்தங்களைப் போக்கும் ஈரல் குலைகளுக்குப் பலமுண்டாக்கிவைக்கும் திண்டியை ஜீரண ப்படுத்தும் வயிற்றிலுள்ள புழுக்களை மாய்க்கும் கருப்பஸ்தான ங்களை சுத்திபடுத்தும் இடுப்புக்கு வலுவைத்தரும் நீர்தாரைச் கிரிச்சனங்களை விலக்கும் நீர்த்தாரையில் கல்லடைப்பிருந்தாலும் லேசில் விலக்கும் நல்ல நினைவு, ஞாபகசுதித் முதலியவைகளை யுண்டாக்கும். கைகண்டது.

இங்கு எழுதியவை தாம்தாமே செய்து கொள்ளக்கூடும்.

சரீரசுகபோதினி முற்றிற்று.